


விமல் குழந்தைவேல்

# கோவிக் கெஞ்சன்




K5/-

# குறளிக் குஞ்சன்

விமல் குழந்தைவேல்

niram
வெளியீடு

'niram' book series - 01

Kuralik Kunjan / Stories / ©Vimal Kulanthaivel, Kolavil - 01, Akkaraipattu, Sri Lanka. / First Edition: October, 2005 / Pages: 179 / Published by: 'niram', # 270, Main Street, Akkaraipattu - 01, 32400, Sri Lanka. +94773052317 / Jacket & Book Designed by: am. rashmy ('niram')

Prize: SLRs. 250.00, £ 2, EURO 3.

ஆழிப் பேரலையில்
அழியாச் சுவாடான
மக்களுக்கும்...
மரங்களுக்கும்...
கொடி செடிகளுக்கும்...
மிருகம் பறவைகள்
எல்லாருக்கும்...

**பிரதிகள் கிடைக்குமிடங்கள்:**

**இலங்கையில்:**

A.M. Rashmy,
178, Old Police Station Road,
Akkaraipattu - 01
32400
Sri Lanka.

+94773052317

**இந்தியாவில்:**

A.L. Hazeen,
23/369, 30th Street,
6th Sector,
K.K. Nagar,
Chenai- 78
India.

+919840481912

**கனடாவில்:**

vezhi.com,
Thirumavalavan,
29, Rutledge ave,
Scarborough,
ON. M1K 3X5,
Canada.

thiruma@vezhi.com

**ஐக்கிய ராச்சியத்தில்:**

K. Veerathas,
1A, Crest Drive,
ENFIELD,
MIDDLESEX,
EN3 5QD,
United Kingdom.

+447861398258
+442083647514

**இது** விமல் குழந்தைவேலின் ஆறாவது தொகுதி.
ஏலவே-
'தெருவில் அலையும் தெய்வங்கள்'(1998) - சிறுகதை,
'அவளுக்குள் ஒருத்தி' (1999) - சிறுகதை,
'மண்ணும் மல்லிகையும்' (2000) - நாவல்,
'அசதி' (2003) - சிறுகதை,
'வெள்ளாவி' (2004) - நாவல் என்பன
வெளிவந்த இவரது தொகுதிகள்.

'வெள்ளாவி'க்குப் பிறகு தமிழ் இலக்கியச் சூழலில் பரவலாக அறியப்பட்ட விமல், நவீன தமிழ் புனைகதைத்துறையில் இன்று தவிர்க்க முடியாத படைப்பாளி.

கடந்த மார்கழி இருபத்தியாறாந் திகதிய 'சுனாமி' அனர்த்தின் பின் பாதிக்கப்பட்ட தாயகத்து மக்களுக்கான, ஐக்கிய ராச்சியத்தில் வதியும் நண்பர்களின் ஒரு தொகுதி உதவிப் பொருட்களோடு விமல் இங்கு வந்திருந்தார்.

பாதைகள் சிதைந்து, நிலத்தொடர்புகளை இழந்து போய், பயணிக்க முடியாதிருந்த பிரதேசங்களுக்கெல்லாம் கால் நடையாகவும், தனது நண்பர் ஒருவரின் மோட்டார் சைக்கிளிலும் சென்று வந்தார் விமல்.
சென்றார் - வந்தார் என்றில்லாமல், தனது மக்களின் துயரங்களில் இரத்தமும், சதையுமாகப் பங்கெடுத்து, தன்னால் இயலுமான உதவிகளையெல்லாம் செய்து பாதிக்கப்பட்ட மக்களோடு ஒருவனாக அவர் உள்வாங்கிய அனுபவங்களை ஒரு எழுத்தாளனாக இன்று உங்கள் முன் தந்திருக்கின்றார்.

இது விமலின் ஆறாவது தொகுதி, 'நிறம்' வெளியீட்டகத்தின் முதலாவது.

இனி, நீங்கள் சொல்லுங்கள்...

*20051003*

ஆழிப்பேரலையின் பின் அடுத்தடுத்த நாட்களில்...
"உன் ஊரிலும், உன்னவர்களுக்கு ஏதாவது நேர்ந்ததா?"
என்ற தொலைபேசி விசாரிப்புகளின்போதில்...
பதில் சொல்ல முடியாமல் என் குரல் உடைந்து,
வாய் வரண்டு, வார்த்தைகளற்று நிற்கையில்...

"போகப்போகிறாயா? போய்விட்டு வா, முடிந்தளவு நாங்களும் உதவுகிறோம்" என்று, என் உணர்வுகளை மதித்து என்னை வழியனுப்பி வைத்தவர்கள்-
திரு. ஜெயபாலனும் அவரைச் சேர்ந்தவர்களும்,
திரு. கலாமேகனும் அவரைச் சேர்ந்தவர்களும்,
திருமதி. ஆனந்தி குகச்சந்திரனும் அவரைச் சேர்ந்தவர்களும்.

என் வேலையிடத்து நண்பர்களும், என் சொந்தங்களில் சிலரும். மற்றும், திரு. யசோதபாலனும், திரு. நந்தபாலனும்.

நான் புறப்படுவதற்கு முன்பான நள்ளிரவில் என் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது, திறந்து பார்க்கிறேன். இரண்டு இளைஞர்கள், தலா ஒவ்வொரு பெட்டிகளின் பாரங்களுடன் என்முன்னே. "இந்த மருந்துப் பொருட்களையும் கொண்டு கொடுங்கள் அண்ணா" என்கிறார்கள். அவர்கள் தங்களின் பெயர்களைக்கூடச் சொல்லிக்கொள்ளவில்லை. இந்தப் பக்கங்களில் குறிப்பிடுவதற்காக இப்போதுதான் ஜெயபாலனிடம் அவர்களின் பெயர்களைத் தெரிந்து கொண்டேன். அவர்கள், S. குகநாதனும் R. சுகேந்திரனுமாம். அந்த இரவினை எண்ணிப்பார்க்கையில் இப்போதும் கண்கள் பனிக்கின்றன.

ரஞ்சன் அண்ணா மூலமாக மேலும் மருந்துப் பொருட்கள் தந்துதவியவர் Dr. சக்திபாலன்.

உங்களுக்கெல்லாம்... உங்களுக்கெல்லாம் 'நன்றி' என்ற ஒற்றைச்சொல்லில் என்ன இருக்கிறது சொல்ல...

"அண்ணே, துடிச்சிப் பதைச்சி ஓடி வந்திருக்கயளே அண்ணே.. நாங்களெல்லாம் ஆரண்ண உங்களுக்கு...? சொந்த பந்தங்கூட இல்லையேண்ண. உங்களுக்கெல்லாம் என்னத்தண்ண கைமாறா செய்யப்போறம்...? நீங்க நல்லா இருக்கோணுமண்ண..."
தாயைப் பறிகொடுத்துவிட்டு ஐந்து வயது தம்பியை கையில் பிடித்துக்கொண்டு நிர்க்கதியாய் நின்ற அந்த தம்பட்டை இளைஞன், என் தோழில் முகம் புதைத்துக் குழறிய இந்த வார்த்தைகளை உங்களுக்கே சமர்ப்பணம் செய்கிறேன்.

என் எழுத்துக்களில் குறைகாணும்போதெல்லம் உரிமையுடன் சுட்டிக்காட்டிவிட்டு, நிறைவுகாணும் வேளைகளில் சந்தோசித்து ஆர்ப்பரிக்கும் M.N.M. அனஸ் இத்தொகுதிக்குரிய கதைகளைத் தேர்வுசெய்ததுடன் சில நிழற்படங்களையும் தந்துதவியிருக்கிறான்.

இத்தொகுதியை எழுதத் தொடங்கிய நாட்களில் நான் சோர்ந்திருக்கும் போதிலெல்லாம் என்னை உசுப்பிவிட்டவன் நண்பன் றஷ்மி.
இத் தொகுதியின் முகப்பு முதல், முடிவு வரையான அத்தனை சிறப்புகளும் அவனின் உழைப்பெனும் போதினில் மேலும் நான் என்ன சொல்ல...

நீ பார்த்து வந்தவைகள் பதியப்பட வேண்டியவைகள் என்ற பலரின் வேண்டுகோளுக்காகவே என் விழிவழி புகுந்து மனதில் தேங்கிக்கிடந்தவைகளுக்கு எழுத்து வடிவம் கொடுக்க முனைந்தேன். அதுவே கடலின் பேச்சாகின்றது.

எட்டு நாட்கள் என்னை எல்லா இடங்களுக்கும் கூட்டிச் சென்று அனர்த்தத்தின் அத்தனை தடங்களையும் என்னைப் பார்க்கச்செய்தவன் K.M. நௌசாத்.

கடலைப் பேசவைப்பதற்காக நான் களம் அமைக்க என்னோடு கனநேரம் கதைத்திருந்தவர் மன்சூர் சேர். அவருக்கே தெரியாமல் அவரின் பேச்சிலிருந்து நான் பெற்றுக்கொண்ட பல தகவல்கள் கடலின் பேச்சாய் ஆகியிருக்கின்றன.

எப்போதும் என்னையும் என் எழுத்துக்களையும் பற்றி விசாரித்துக்கொண்டிருக்கும் சபேசனும், ஹஸீனும் இந்நேரத்தில் நினைவுகூரப்படவேண்டியவர்கள்.

மேலும், இத் தொகுதியிலுள்ள கதைகளை வெளியிட்ட பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் எனது கதைகள் பற்றி அவ்வப்போது தமது கருத்துக்களை கூறிவருபவர்களுக்கும், இத் தொகுதியை அழகுற வெளியிடும் 'நிறம்' நண்பர்களுக்கும் எனது மாறாத அன்பு.

இத் தொகுதியில் இடம்பெறும் கதைகள்பற்றி...
வேண்டாமே.... எனது படைப்புகளைவிட படைப்புகளுக்கான எனது என்னுரைகளே அதிகம் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுவதால் வேண்டாமே... உங்களிடமே விட்டுவிடுகிறேன்.

இக்கணத்தை நான் மகிழ்வாக உணர்கிறேன்...

*20.10.2005*

## கதை வரிசை

01. இருத்தலாய் ஓர் இல்லாதது - 13
02. கல்லாய் மனிதராய் - 21
03. மிஸிஸ் மார்ட்டீனின் நாய்க்குட்டி- 31
04. குறளிக் குஞ்சன் - 43
05. அன்பு - 57
06. முனிவராய் தேவராய் - 69
07. நடாகத் தவளைகள் - 87
08. தமிழ்த் தூண் - 95
09. அப்பாவின் அறை - 111
10. பிறிதொரு துச்சாதனம் - 121
11. கடல் பேசுகிறது - 133

இருத்தலாய் ஓர் இல்லாதது

பத்துத் தடவைக்குமேல் முயற்சி செய்துவிட்டேன். லைன் கிடைக்குற மாதிரித் தெரியயில்ல.

லோகேஷ் அண்ணனுடன் உடனே கதைக்கவேணும்போல என்ர மனம் கிடந்து அங்கலாய்க்குது.

திரும்பிப்பார்க்கிற இடமெல்லாம் வீடு வெறிச்சோடிப்போய் வெறுமையாகத்தான் தெரியுது.

பிரிவுக்கு இவ்வளவு வேதனை தருகிற சக்தி உண்டெனக்கிறத லோகேஷ் அண்ணன் போனதிலிருந்துதான் என்னால அறிய முடிகின்றது.

லோகேஷ் அண்ணன் மூன்று வருசமாக என்னோடதான் இருந்தவர். நான் வேலைசெய்த இடத்துக்கு வந்த முதல் நாளில அறிமுகமானவர். அறையொன்று தேடிக்கொண்டிருப்பதாய்ச் சொல்ல நான் இருந்த வீட்டிற்கே கூட்டிக்கொண்டு வந்திட்டன்.

முதல் ரெண்டு மாசத்துக்குப் பிறகு நான் வேற வேலைக்கு மாறிட்டன். ரெண்டு பேருக்கும் பகல் வேலை எண்டதால இரவுலதான்

சந்திக்கிறதும், கதைக்கிறதும். வேலை முடிஞ்சி நான் வரும்போதே எனக்கும் சேர்த்து சமைச்சி வைச்சிருப்பார். என்னைச் சமைக்கவே விடமாட்டார். வேறு யாருடைய சமையலும் சாப்பிடமாட்டாராம்.

லோகேஷ் அண்ணன் என்னைவிட பதினஞ்சி வயசு மூத்தவரெண்டாலும் என்னோட நண்பனாகத்தான் பழகினார். உரத்துப் பேசத் தெரியாதவர். மற்றவர் மனம் நோக கதைத்துப் பழக்கப்படாதவர். நல்ல மனிசன்.

இரவில் பேசிக்கொண்டிருக்கும்போது எனக்காகவென்று ஒரு பியர் கேனை எடுப்பார். நான் மூன்று கேன்கள குடிச்சிமுடிக்கும்போது அவர் முக்கால் கேனைக்கூட முடித்திருக்கமாட்டார்.

"விருப்பமில்லடா தம்பி, உனக்காகத்தான் எடுத்தனெ"ன்பார்.

அவர் கதைக்கத் தொடங்கினால் அதை நாள் முழுவதும் கேட்டுக்கொண்டிருக்க வேணும் போல இருக்கும்.

அவர் பிறந்து, வளர்ந்து வாழ்ந்த அந்தப் பிரதேச மொழியை அவர் பேசிக் கேட்கும்போதுதான் அதன் சுவாரஸ்யமே தெரியும்.

அந்த மொழியை ரசிக்கவேண்டும் என்பதற்காகவே அவரைக் கதைக்கவிட்டுவிட்டு நான் மௌனமாக கேட்டிருப்பதுண்டு. எனக்குள் எதையோ நினைத்து நான் சிரித்து விட்டால் -

"என்ன தம்பி எண்ட கதை விளங்குதில்லையோ...? அப்ப நான் யாழ்ப்பாணத்து தமிழில கதைக்கட்டே...." என்பார்.

"ஐயோ அண்ணன் நீங்க கதையுங்கோ... நான் வேற எதையோ நினைச்சி சிரிச்சிட்டன்"

"இதுதான்... இதுதான் தம்பி உனக்கிட்ட எனக்கு புடிச்ச விசயமே இதுதான் தம்பி... நக்கலடிச்சி மனம் நோகப்பண்ணத் தெரியாத இந்தப் பண்புதான் தம்பி எனக்குப் பிடிக்கும். இந்தக்குணம் ஏன் தம்பி நம்மட ஆக்களிட்ட கனபேருக்கு இல்லாமல்போச்சி. எனக்குத்

தெரியும் இண்டைக்கு எனக்கொண்டெண்டா நீ ஓடி வருவாயெண்டு... ஏனெண்டா நாம ஒருத்தர ஒருத்தர் புரிஞ்சி பழகி இருக்கிறம். இந்தப் புரியாமையாலதானே தம்பி நமக்குள்ள இந்த மட்டக்களப்பான், யாழ்ப்பாணத்தான், திருகோணமலையான், மன்னார்காரன், தோட்டக்காட்டான் என்கிற பிரிவினையெல்லாம்" என்பார்.

தன்னுடைய இளமைக் காலம், தாய், தகப்பன், சகோதரங்கள், தம்பிக்காரனை ஆமிக்காரன் டயர் போட்டு எரித்தது, தனது மூத்த மகள் ஆறு மாதக் குழந்தையாக இருக்கும் போது சுற்றிவளைப்பில் தான் புடிபட்டு பூசா சிறையில் கிடந்தபோது பிள்ளையையும் தூக்கிக் கொண்டு தனது மனைவி பாசை தெரியாத ஊரெல்லாம் அலைந்து திரிந்து தன்னைப்பார்க்க வந்தது பற்றியெல்லாம் என்னிடம் சொல்லியிருக்கின்றார்.

இரண்டு வருடமாக கோர்ட், கேஸ் என்று அலைந்த பிறகு உனக்கு விசா தரமுடியாது உடனே ஊருக்கு போ என்று சொல்ல மேலும் மேல் முறையீட்டுக்கு விண்ணப்பித்தார். ஒவ்வொரு மாதமும் வந்து கையெழுத்துவைத்திட்டுப் போகவேண்டுமென்று சொல்லி விட்டார்கள்.

கையெழுத்து வைக்கப்போகும் போது அதே இடத்தில் வைத்தே பிடித்து பலர் திருப்பி அனுப்பப்பட்டிருப்பதால தன்னையும் பிடிச்சி அனுப்பிவிடுவாங்களோ என்று பயந்து கொண்டுதான் லோகேஷ் அண்ணயும் போவார்.

முதல்நாளே உடுப்புகள் எல்லாத்தையும் அயன் பண்ணி மற்றச் சாமான்களையும் எடுத்துவைத்துக்கொண்டுதான் கையெழுத்து வைக்கப்போவார். நானும் அனேகமாக கூடப்போவதுண்டு. தற்செயலாக புடிச்சனுப்பினாலும் தம்பியெண்டுகொண்டு காருக்குள் சமான்களை வைப்பார். திரும்பிவரும் போது, "இந்த மாதம் தப்பிற்றனடா தம்பி" என்று கொண்டு உடுப்புகளை பிரித்து

அலுமாரிக்குள் கொழுவுறதப் பார்க்க பரிதாபமாய் இருக்கும்.

''பார்த்ததையாடா தம்பி, கம்பி வேலி தாண்டி காயப் பட்டவனுக்களுக்கெல்லாம் ஆமி அடிச்சிருப்பானெண்டு நம்பி விசாகுடுக்குறான். நான் ரெண்டுவருசம் சிறையில அடபட்டு கஸ்டப்பட்டிருக்கன். ஒரு தம்பிய பறிகொடுத்திருக்கிறன். எனக்கு விசா தர மறுக்கிறானே இவன்- பேய்ப்பூழல்...'' என்பார்.

"கவலைப் படாதையுங்கோ அண்ண, உங்களுக்கு கிடைக்குமெ"ண்டு நான் சமாதானப்படுத்தினால் -

"இல்ல தம்பி எனக்கு நிரந்தர விசாவெல்லாம் தேவையில்லாடா... ரெண்டு வருசத்துக்கு இருக்கவிட்டானெண்டா போதும். ஒரு கொஞ்சத்த உழைச்சிக் கையிலெடுத்துக்கொண்டு போயிருவன். போகக்குள்ள என்னத்தையும் கொண்டு போனாத்தானே தம்பி எண்ட மக்கள் ரெண்டு பேரையும் எங்கெண்டாலும் கட்டிக்குடுத்து கரைசேர்க்கலாம். மத்தப்படி நானேன் இங்க இருக்கப்போறன். கோடி கெட்டித்தந்தாலும் புள்ளை பொஞ்சதாதியோட ஊருல இருக்கறாப்போல வருமோ தம்பி..."

இப்படியேதான் அடிக்கடி சொல்லுவார்.

போன கிழமை திடீரெண்டு வா தம்பி ஒரு இடத்த போய்வருவம் எண்டு கூட்டிக்கொண்டு போனவர், அந்த ஒபீசுக்குள்ள போய், நான் ஊருக்குப்போகப்போறன் திரும்பிப் போக எழுதிக்குடுக்க வந்திருக்கிறன் எண்டுசொல்ல ஓபீசர் காரணத்த கேட்டு- விபரங்களையும் எடுத்த பிறகு வெளியில வந்த நேரம் கேட்டன்-

"என்ன லோகேஷ் அண்ண போகத்தான் போறியளே?"

''பின்ன என்னடா தம்பி செய்ய..., பெத்த புள்ளயளையும், பொஞ்சாதியையும் கடல் அடிச்சிக்கொண்டு போனபுறகு நான் இங்க கிடந்து ஆருக்குடா தம்பி உழைக்கோணும்...? நான் போகத்தான் போறண்டா'' என்றவர் என்ர தோள்ல சாய்ந்து அழுதிட்டார்.

ஊருக்கு வழியனுப்ப முந்தநாள் விமான நிலையத்துக்கு நான்தான் போனேன். அங்கு நிண்ட இரண்டு மணிநேரத்தின் முதல் ஒன்றரை மணி நேரத்துக்கும் நாங்கள் இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. இருவரும் பேசமுற்படும் போதெல்லாம் உதடுகள் துடித்ததே தவிர வார்த்தைகள் வரமாட்டேன் என்று அடம்பிடித்தது.

மௌனத்தை கலைக்கவேண்டுமென்பதற்காக கோப்பி குடிப்பம் என்று சொல்லி நான் தான் கூப்பிட்டேன்.

"தம்பி ஊருக்கு வந்தால் கட்டாயம் வா..? உன்னோட இருந்த நாட்களையும் நீ செய்த உதவிகளையும் நான் எண்டைக்கும் மறக்கமாட்டன்..."
என்று அவர் சொன்னபோது வார்த்தைகள் உடைந்து தழும்பி...

கடைசியாக என்னைக் கட்டிப்பிடித்து கைகுலுக்கி விட்டு அவர் விடைபெறுகையில், நான் கொடுத்த காகித உறையை வாங்கிக் கொண்டு நடந்து போனவர் அதை பிரித்து பார்த்து விட்டு என்னை திரும்பி பார்த்தபோது நான் தலையை குனிந்து கொண்டேன்.

"நல்ல பொடியன் ஆரும் தெரிந்தால் சொல்லும் தம்பி"
என்று அவர் தந்த தனது மகளின் போட்டோவையையும் அந்தக் காகித உறைக்குள் வைத்துக் கொடுத்திருந்தேன். எதை அவர் முதலில் பார்த்தாரோ தெரியாது மீண்டும் நின்று திரும்பிப் பார்த்தார். நான் அவரின் பார்வையிலிருந்து மறைய முற்பட்டடேன்.

இப்போது லோகேஷ் அண்ணனின் பலவற்றை இழந்து விட்டதாய் உணர்கிறேன். நல்ல நண்பனை, அவரின் நேர்மையை, அவரின் சமையலை, எல்லவற்றுக்கும் மேலாக அவரின் சுவரஸ்யமான பேச்சை, இப்படிப்பலதை. நான் மீண்டும் தொலைபேசி எண்களை அழுத்துகிறேன். தொடர்பு கிடைத்தற்கான சமிஞ்ஞை தெரிகின்றது.

"ஹலோ யார் லோகேஷ் அண்ணையே பேசுறயள் நான் உங்க லண்டலின இருந்து..."

"தம்பி... தம்பியோடா...? சொல்லுடா தம்பி... இஞ்ச ஒண்டுமில்லையடா தம்பி எல்லாத்தையும் கடல் கொண்டு போயிற்றுடா... சவக்காடாகிடக்குதடா... பொண்டாட்டி புள்ளையக்கடைசியாக புணமாக்கூட காணக்கிடைக்காத பாவியா, தனிமரமாநிக்குறண்டா..."

லோகேஷ் அண்ணனின் குரலைக் கேட்டுக்கொண்டோ இருக்க வேண்டும் போல இருந்தது எனக்கு.

துயரம் குறைக்க சாய்ந்தழ என் தோழ்கள் உதவவில்லை. தண்ணீரில் மூழ்கியவர்களோடு என்னாலும் மூழ்கமுடியவில்லை. ஆகக் குறைந்தது ஒரு கண்ணீர் துளியையேனும் சிந்துவோமே, என்னால் கட்டுப்படுத்தமுடியாமல் நான் வாய் விட்டு ஓவென்று அழுகிறேன்.

மீண்டும் மௌனமாக எனக்குள் அழுகிறேன்.

டேய்... தம்பி... டேய்... என்னடா தம்பி சத்தத்தக்காணயில்லா... நான் கதைக்குறது கேக்குதோடா?

லைன் கட் ஆகவில்ல. அவர் கதைப்பது கேட்கிறது... நான் எதுவும் பேசாமல் கேட்டுக்கொண்டேயிருக்கிறேன். அப்படித்தான் தோன்றிற்று எனக்கு. சிரிப்பு சரி அழுகையிலும் சரி, சந்தோசத்திலும் சரி துக்கத்திலும் சரி அவரின் அந்த பிரதேசத்து மண்வாசனை வாய்மொழியை நான் கேட்டுக்கொண்டே இருப்பேன்.

"டேய் தம்பி... என்னடா... நான் கதைக்குறது கேக்குதோ?... கேக்கயில்லப்போல..."

லைன் கட்டாகி விட்டது...

லோகேஷ் அண்ணை என்னோடு இல்லை. என்றாலும் என்னோடு இருப்பதாகத்தான் எனக்குள் உணர்வு...

0

கல்லாய் மனிதராய்...

**சீ**... என்ன வாழ்கையிது.

சேர்ந்துவாழ புருசனில்ல, கூடிவாழ பெத்த புள்ளையும் இல்ல.

எல்லாமே இல்லாமல்போன வெறுமையான தண்டவாழ்கைய நினைச்சி நொந்த கண்ணகி எழும்பி நடந்தவள் இவ்வளவு நாளும் தான் முடங்கிக்கிடந்த கோயில திரும்பிப் பார்த்தாள்.

வெள்ளிக்கிழமையெண்டா மட்டும் ஏன்தான் இந்த சனமெல்லாம் ஒதுங்கி வருகுதுகளோ தெரியாது.

கிழமையில ஆறு நாளும் நீட்டி நிமிர்ந்து கோயிலுக்குள்ள படுப்பாள் கண்ணகி. வெள்ளிக்கிழமையானதும் கையில ஒரு தேங்காயும் கற்பூரக்கட்டியோடயும் ஆக்கள் வாறதாகக்கண்டா வாரிச்சுருட்டிக் கொண்டு எழும்பி எங்கெண்டாலும் நடந்திருவாள்.

ஆம்பிளையெண்டு ஒரு துணையிருந்தா அவனோடயாகுதல் போகலாம். அவனையும்தான் வெட்டிக் கொண்டுபோட்டாங்களே.

இப்ப ஆரு இரிக்கா பெத்த புள்ளையளாகுதல் பக்கத்துல இருந்தா கதைச்சிப் பேசாட்டியும் பார்த்து மனமாறலாமே.

மூத்த மகன் எப்பயோ ஓடிற்றான். இண்டைக்கி வரைக்கும் காணக் கிடைக்க மாட்டானென்டுறானே. அவன் காது நுனியில ஒரு துண்டு அறுந்த தடம் இப்பயும் கண்ணகிர கண்ணுக்குள்ளதான் இருக்கு.

பொட்டையொண்டப் பெத்தாள். பெத்துப்போட்ட பத்தாம் நாளே பணக்காரனொருத்தன் வளக்கயாமெண்டு தூக்கிற்றுப் போயிற்றான். சரி நமக்குத்தான் இந்த எழுத்து. பெத்தபுள்ளையாகுதல் நல்லா இருக்கட்டுமேயெண்டு உட்டுப்போட்டு இருந்திற்றாள்.

பெத்தமனமெல்லோ என்னனென்டு கேட்கும் ஒட்டி ஒதுங்கிப் போய் எட்ட நிண்டு வேலிக்கிடவால பாத்திற்று வாறதோட சரி. தாய் புள்ளையெண்டு பாசத்தக் காட்டுனா அதுர வாழ்கைதானே பாழாகும் எண்டு அவள் கிட்டப்போறது கூட இல்ல.

இண்டைக்கும்கூட மகளப்பாக்கணுமெண்ட எண்ணத்துலதான் நடக்கத் தொடங்கிற்றாள்.

இலுப்பமரத்துக்கீழ வேலனும் ராமுவும், முகத்துக்கிட்ட முகத்ததைவைச்சி வேலன் என்னமோ சொல்லுற மாதிரித் தெரியுது கண்ணகிக்கு.

என்னத்தச் சொல்லுவான், அவன் "டேய் ராமா கண்ணகி வாராளுடா, அவளத்திரும்பிக்கூடப் பார்த்திராத. ஒட்டுனா கழரமாட்டாய். புறகு நடுச்சந்தியில் நாலு சனத்தக்கூட்டி ஊர் புதுனம் பார்க்க வைச்சிருவாள்" எண்டு சொல்லுவானாக்கும். முந்தியொரு நாள் அவனுக்கேற்பட்ட அனுபவம்தானே அது. அதத்ததான் அவன் சொல்லுவான்.

ராமுவும் வேலனும் நிண்டபக்கம் போகாமா ஒழுங்கைக்குள்ளால நடந்திற்றாள் கண்ணகி.

தண்ட மகள் வளர்ர ஊட்டு வேலியோரத்தில நிண்டு கனநேரமாப் பார்த்தாள். புள்ளை வெளியால வாறமாதிரித் தெரியயில்ல. என்னவா இரிக்கும் ஏதும் வருத்தம் வேதனையா இருக்குமோ?

ஆனா ஊட்டுக்குள்ளயிருந்து ராசதுரைர ஏச்சுச் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டுதானிருக்கு. காதக்குடுத்துக்கேட்டாள் கண்ணகி.

"அட்டயத்தூக்கி மெத்தயில வைச்சா அது செத்தயத்தானே பார்த்துப்போகும். இந்தக் கழிசற நாய்க்கு அவன் ஊட்டுல என்னடிவேலை. நீ என்னத்தடி பார்த்துக் கொண்டிருந்த"

"இதென்ன புதுனங்கா... எண்ட ஊட்டு வேலையெல்லாத்தையும் உட்டுப்போட்டு ஆரு ஆரோட படுக்கா எண்டுறத்தையோ பாக்கச்சொல்லுறாய்.?"

பொஞ்சாதிக்காறி எதிர்த்துக்கதைச்சதுல ராசதுரைக்கு இன்னும் கோபம் வந்திற்றுப்போல.

"அவண்ட சாவு வாழ்வே வேணாமெண்டு நான் இத்தின வருசமா இரிக்கன்... நீ என்னடா எண்டா அவண்ட ஊட்டுக்குள்ளயே போய் படுத்துக்கிடந்து வந்திருக்காய் என்ன?"

காத்துல பிரம்பு விசுக்கிற சத்தம் கேக்குது. அத்தோட கண்ணகிர மகள் "ஆய்... ஆய்..." எண்டு கத்துற சத்தமும் கேக்குது.

"எங்க ஓட்றாய்... நீ ஓடிருவயே..?"

எண்டுகொண்டு கையில பிரம்போட ராசதுரை வாசலுக்கு வர அவனுக்கு முன்னால ஓடி வந்த கண்ணகிர மகள் கிணத்தடிக்கு ஓடி, கொய்யா மரத்தடியில் நிக்க இவன் ராசதுரை பிரம்பால விளாசு விளாசெண்டு விளாச சுருண்டு துடிச்சிற்றாள் கண்ணகிர மகள்.

"கண்கெட்டுபோயிருவான்... இவனென்ன கல்லோ மனிசனே இந்தப்புள்ளயப்போட்டு இப்படி வெளுக்கானே?"

வேலிஓதினையில கண்ணகி நிக்குறத மகள் கண்டுற்றாள். கண்டாலுமென்ன தான்தான் தாயெண்டுறது, அதுக்கு தெரியவோ போகுது. வாமகளே போவமெண்டு கூப்பிடத்தான் ஏலுமோ, இல்ல கூப்பிட்டாலுமென்ன அம்மையெண்டு வரவோ போகுது.

இனியும் நிண்டு இந்த அக்கிறமத்த பார்க்க கண்ணகிக்கு மனசில்லாம அவடத்துல இருந்து நடக்கத் தொடங்கிற்றாள்.

நடந்தவள் செல்லத்துரை ஊட்டடியால வரக்குள்ள தட்டுவேலிக்குள்ளால கேட்ட சத்தத்தில நிண்டுற்றாள்.

"எங்க இவன் ஜேம்ஸ். அவன இண்டைக்கு கட்டிவைச்சி உரிச்சாத்தான் திருந்துவான். அவன் ராசதுரைர பொட்ட நாயோட இவன் கொஞ்சி விளையாடினானாமே, ஆரோட ஆரு சேரோணும் எண்டுற தகுதி தெரியாமல் போயிற்றோ இவனுக்கு. வரட்டும் அவனிண்டைக்கு... செய்யுறன்..."

செல்லத்துரைர கதை கேட்ட கண்ணகிக்கு தூ... நீயெல்லாம் ஒரு மனிசன் எண்டு அவண்ட முகத்துல காறித் துப்பணும்போல இருந்திச்சி.

கால்போனபோக்குல நடந்தவள் காளியம்மை ஊட்டு வாசலுக்குப் போய்த்தான் நடையை நிப்பாட்டுனாள்.

மத்தியான நேரம், புருசனுக்கும் புள்ளயளுக்கும் சோறு போட்டுக் குடுத்துக்கொண்டிருந்த காளியம்மை, கிணத்தடி பூ மரத்துக்கீழ கண்ணகி நிக்குறதக் கண்டுற்றா.

"ஆரு.?.. கண்ணகையோ..., வந்திருவயே...! என்ணெண்டுதான் உனக்குத் தெரியுதோ...? சரியா சோறு தின்னுற நேரம்பாத்து வாறாய்.."

"பாவம் பசியோட வந்திருக்குது, அந்தத் தட்டுல போட்டுக்குடன்..."

புருசண்ட மனமிரக்கத்துக்கு இளகின காளியம்மை போட்டுக்கொண்டு வந்து வைச்ச சோத்த திண்ட கண்ணகை அந்த ஊட்டு கூரை நிழலியே குந்திச் சாய்ந்திற்றாள்.

புருசன், புள்ளைக்கு சோத்தக்குடுத்து முடிச்சி தானும் திண்டுபோட்டு, வெத்தில வட்டாவோட திண்ணைக்கு வந்து காளியம்மை குந்த, பக்கத்து ஊட்டு மரகதமும் வந்து சேந்திட்டாள்.

ஆராரு ஆரோட களவுல படுத்தார்..., எவள் எவனோட ஓடுனாள்... எண்டெல்லாம் மரகதமும் காளியம்மையும் ஊரக்கழுவி முடிச்சிற்று எழும்புன நேரம் ஊட்டுக்கு விளக்கு வைக்கிற நேரமாய்ச்சி. "மண்ணெண்ணை வாங்கணுங்கா நான் வாறன்..." எண்டிற்று மரகதம் எழும்பிப் போனதுக்குப் பிறகுதான் கண்ணகையும் எழும்புனாள். நித்திரை மாதிரித்தான் படுத்தாளே தவிர ரெண்டு பொண்டுகளும் கதைச்சதெல்லாத்தையும் கேட்டுக்கொண்டுதான் கிடந்திருக்காள்.

"இதென்னடி இது... கண்ணகை இன்னும் போகயில்லையோடி...? என்ன ராச்சோத்துக்கும் இஞ்சதான் வாடியப் போடப்போறாள் போல...?"

காளியம்மை சொல்லி முடிக்குறத்துக்கு முன்னமே கடப்பால வெட்டக்கறங்கிற்றாள் கண்ணகை.

இந்நேரம் கோயிலுக்கும் போகேலா... வெள்ளிக்கிழமை எண்டதால ராபூசைக்கும் சனம் வந்து நெருப்பெடுக்கும். அங்க போய் அந்தப் புதுனங்களப் பார்க்குறத்தவிட இன்னும் எவ்வளவு நேரமெண்டாலும் ஊருக்குள் உலாத்திற்றுப் போவமெண்டு நினைச்சிக் கொண்டு தரவைக்கு வந்தவள் வம்மிமர ஓதினையில நிண்டுற்றாள்.

எப்பட்ா பொழுதுபடும், பேலப்போகலாமெண்டு காத்துக் கிடந்தவனுகளப்போல ஊருக்குள இருந்த ஆம்புள மூண்டு பேர் தொங்கோட்டமும் பெருநடையுமா நடந்து வந்து, கட்டு மறைப்புல சாறனக் கிளப்பிக்கொண்டு அடுப்புக் கல்லப்போல குந்தியிருந்து பேலுறத வம்மி மரத்து மறைவுல நிண்டு பார்த்துக்கொண்டிருந்த கண்ணகிக்கு கட்டு மறைவுல இருந்து அவனுகள் கதைக்கிறது நல்லா கேக்குது.

முக்கி... முக்கி ஒருத்தன் முளுக்கதையையும் சொல்லி முடிக்க முக்கலோட 'ம்...'மையும் ஓண்டாக்கி போட்டுக்கொண்டு மற்ற ரெண்டு பேரும் கதை கேக்குறதப் பார்த்துக்கொண்டிருந்த கண்ணகி ஊருக்குள்ள இருந்துவாற சத்தத்துக்கு காதக்குடுத்தாள்.

"எடியே அக்கரபுருசன் எண்டும் பாராம, முறைதலை கெட்டுப் படுத்திருக்கேயேடி... உனக்கு புருசன் புடிக்க வேற ஆள் கிடைக்காம எண்ட புருசன் தானோடி கிடைச்சான், விடியட்டும்டி நான் செய்யுறன் வேலை"

ஊருக்குள் நடக்கிற கிடுகிடுப்புச் சத்தம் கிணத்துக்குள்ள கதைக்கிறாப்போல கண்ணகைர காதுக்கு வந்து சேருது.

தரைவைக்கு அங்கால நாற்பதாம் கட்டை ஊரையும் தாண்டி இருக்கிற கடல் அலை கரையில அடிக்குற சத்தம் கண்ணகிக்கு நல்லாக் கேக்குது.

அடிக்குற அலை ஒள்ளம் உசரமா ஒழும்பி வந்து இந்த ஊர அள்ளிக்கொண்டு போகுமெண்டா, இஞ்ச நடக்குற அக்குறமங்களையும் அசிங்கங்களையும் பார்க்கத்தேவையில்லையே எண்டும் கண்ணகி நினைச்சிக்கொண்டாள். நடுச்சாமம் வரைக்கும் வம்மி மரத்துக்குக் கீழதான் குந்திக்கொண்டிருந்தாள்.

அதுக்குப் புறகு ஆரு கோயிலுக்கு வருவா..? இனியாகுதல் போய்ப் படுப்பமெண்டுகொண்டு ஒழும்பி நடந்து றோட்டுக்கு வந்திட்டாள்.

மூத்திரம் பேயோணும் போல இரிக்கி. சுத்தும் முத்தும் பார்த்தாள். கோயில் கோபுர லைற்று வெளிச்சம் எல்லா இடமும் பரவிக் கிடந்தது. தூரத்துல இருந்த எலக்ரிக் கட்டையடி மட்டும் இருட்டாத் தெரிய, நடந்துபோய் எலக்ரிக் கட்டையடி இருட்டுல நிண்டு மூத்திரம் போனவள் முதுகுல ஈரலிப்பா என்னவோ சொட்டுச் சொட்டா உழுறது தெரிய அண்ணாந்து பார்த்தாள்.

அப்பதான் சுட்டுத் தொங்கப்போட்ட மனிச உடம்பொண்டுல இருந்து இளஞ்சூட்டு ரெத்தம் சொட்டுச் சொட்டா ஒழுகிக் கொண்டிருக்கிறதக் கண்ட கண்ணகைக்கு, வாயுட்டுக் கத்தோணும் போல இருந்திச்சி. எண்டாலும் வாய்துறக்கப் பயந்தவள் பேச்சு மூச்சில்லாம வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்து கோயிலுக்க பூந்து தான்படுக்குற மூலைக்குள்ள சுருண்டிற்றாள்.

இண்டைக்கு முழுக்க ஊருக்குள்ள கண்ட, கேட்ட புதுனங்களும் கடைசியா கட்டையில தொங்குன மனிச உடம்பும் கண்ணுலயும் மனசுலையும் நிண்டு புதுனம் காட்டக்குள்ள அவளுக்கு என்னெண்டு நித்திரை வரும்...? சும்மா கண்ண மூடித்தான் படுத்துக்கிடந்தாள் கண்ணகை.

ஆர்ரயோ மூச்சிக் காத்து முகத்துல படுகிறமாதிரி இருந்திச்சி. கனவாக்குமெண்டு புரண்டுபடுத்திற்றாள்.

திரும்பவும் மூச்சுக்காத்து மட்டுமில்ல, முகமொண்டும் தண்ட முகத்தோட உரச கண்முழிச்சி நிமிர்ந்து பார்த்தாள்.

பார்த்த பார்வைக்கு அவண்ட காது நுனியில துண்டறுந்த தடம் தெரிய திடுக்கிட்டு ஒழும்பி உத்துறங்கப் பார்த்தாள்.

"எண்ட மகனே எப்பயோ ஓடிப்போனவன் இப்பவந்து தாயக் கொஞ்சிப் பார்க்கயோடா" எண்டு எண்ணிக்கொண்ட கணத்துல அவன் அவள நெருங்கி என்னவோ செய்யக்கூப்பிடுற மாதிரி ஏதோ எல்லாம் செய்யப்பார்த்தான்.

"எண்ட மகனே, ஓடிப்போன உனக்கு பெத்த தாயெண்டுறதெல்லாம் மறந்து இப்ப பெத்த தாயையே படுக்கக் கூப்பிடுறாயோடா, நீ என்ன மறந்தாலும் பெத்த புள்ளய என்னெண்டடா தாய் மறப்பாள்"

அவள் நினைச்சிக் கொண்டிருக்கக்குள்ளயே அவன் என்னவோ எல்லாம் செய்ய முனைஞ்சி கொண்டிருந்தான். அவளுடனான அவனின் உரசல் அவளின் உடம்பையும் சூடேற்றி உணர்ச்சிக்குள்ளாக்கிற்று.

'அடா மனிசராய்ப் புறந்ததுகளே ஊரு உலகத்துல முறைதலை மறந்து என்னென்னமோ எல்லாம் செய்யுதுகள், நான் நாய்ப் புறப்புத்தானே அதுல என்ன வந்திச்சி இப்ப'

கண்ணகையும் அவண்ட முகத்தோட தண்ட முகத்த உரசினாள். எண்டாலும் அவள்ற மனசு கேக்குறமாதிரியில்ல.

இதென்ன இது, மனிசர்தான் அப்பிடி நடக்குறாங்களெண்டா நான் நாய் எண்டாப்போல அப்பிடித்தான் நடக்கோணுமோ?

ஒழும்பி ஓடிவந்து இலுப்ப மரத்துக்குக் கீழ நிண்டுற்றாள் கண்ணகை.

அவளப் பார்த்துக்கொண்டு முனகி முனகி வந்த ஆண் நாய், கண்ணகை நாய் 'வள்... வள்' எண்டு பாய்ஞ்ச பாய்ச்சலுக்குப் பயந்து ஓடிப்போய் நடுறோட்டுல நிண்டு திரும்பிப் பாத்திட்டு ஒரே ஓட்டமா ஓடிற்று. கண்ணகை திரும்பவும் கோயிலுக்குள்ள போய்ப் படுத்திற்றாள்.

0

# மிஸிஸ் மார்ட்டீனின் நாய்க்குட்டி

**பதின் மூன்று** வருடகால வேலையிடத்து அனுபவத்தில் எத்தனையோ வகையான வாடிக்கையாளர்களை தினமும் காண நேருகின்றது. வருவதும், வாங்குவதும், போவதையுமே வழக்கமாகக் கொண்ட வாடிக்கையாளர்களுக்குள் மிஸிஸ் மார்ட்டீன் வித்தியாசமானவள்.

நான் வேலை செய்யும் கடைக்கு பக்கத்து குடியிருப்புக்கு ஆறுமாததுக்கு முன்புதான் குடிவந்தாள். கடைக்கு வந்த முதல் நாளிலேயே தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டவள், அதன் பிற்பாடு என்னோடு சினேகமாக பேசிப் பழக்கத் தொடங்கிவிட்டாள்.

இரவில் நானும் மனைவியும் கட்டிலில் இருந்து பல விசயங்கள் பற்றியும் பேசுகின்ற வேளைகளில் மிஸிஸ் மார்ட்டீனும் எங்கள் சம்பாசனைகளுக்குள் குறுக்கறுக்கின்றளவுக்கு பழக்கமாகி விட்டிருந்தாள்.

கடைக்கு வரும்போதினில் என்னிடம் கேட்கும் கேள்வியிலிருந்தும், நான் கேட்கின்ற கேள்விக்கான அவளின் பதிலிலிருந்தும் மிஸிஸ்

மார்ட்டீன் நல்லா படித்தவளென்பதும், நல்ல குடும்பத்திலிருந்து வந்தவளென்பதும் என்னால் உணர முடிந்த விசயமாயிற்று.

ஒல்லியான உடல், மெல்லிய உதடு, கூரிய மூக்கு, புடரியில் புரளும்முடி, அறுபதை நெருங்குகின்ற வயதிலும் மிஸிஸ் மார்ட்டீன் சிரித்தமுகமாய் அழகாய்தானிருப்பாள்.

பிள்ளைகளுக்கு ஏன் பாரமாய் இருப்பானென்று நினைத்து தொலைவாக ஓர் இடம் பார்த்துத்தான் இங்கு வந்ததாகவும், தற்போது அரசாங்க வீட்டில் அரச உதவிப் பணத்திலேயே வாழ்வதாகவும் என்னிடம் சொல்லியிருக்கின்றாள்.

எப்போது கடைக்கு வரும்போதும் அவளின் செல்ல நாய்க்குட்டியை மார்போடு அணைத்தபடியேதான் வருவாள். அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஏசு பாலகனை ஏந்தியபடி நிற்கும் மேரிமாதா போலத்தான் தோற்றமளிப்பாள்.

பிறந்த குழந்தையைவிடவும் சிறிதான சடைத்த நாய். உடம்புக்குள் தேடிக் கண்டுபிடிக்குமாப்போன்ற சின்னமுகம், தொங்குகின்ற நீளமான காதுகள், பரபரவென்று பார்க்கின்ற குண்டுமணி கண்களென்று அழகான அந்த நாய் குட்டியை கண்டதுமே நான் தூக்கி அணைத்துவிட்டுத்தான் கொடுப்பேன்.

மூன்று நாள் குட்டியில் எடுத்து வளத்தாளாம். தற்போது எத்தனையோ பேர் விலைகொடுத்து வாங்கக் கேட்கிறார்களாம், எனது செல்லப்பிள்ளையை நான் எப்படி விற்பேனென்று மறுத்துவிட்டாளாம் என்பாள்.

"ஏன் மிஸிஸ் மார்ட்டீன்... எந்தநேரமும் இதை ஏந்திக்கொண்டே திரிகிறாய்" என்றுகூட நான் ஒரு நாள் கேட்டுவிட்டேன்.

"என்ன செய்ய... இவள் மிகவும் நோட்டி கேர்ள். வீட்டில் விட்டிற்று வந்தால் ஜோனைப் பாடாதபாடு படுத்திவிடுவாளே. பாவம் ஜோன் வயசு போன காலத்துல தானும் தண்டபாடுமெண்டு வீட்டிலேயே இருக்கிறான். அவனுக்கு ஏன் கரைச்சல் குடுப்பானெண்டுதான் இவள

என்னோடவே எடுத்துக்கொண்டு வரவேண்டியதாக இருக்கு" என்றாள்.

"ஏன் ஜோனோடு சண்டை பிடிப்பாளா?"

"பெரிசா சண்டையெல்லாம் கிடையாது, தன்னோடு விளையாட ஜோனை சீண்டிக்கொண்டேயிருப்பாள். ஜோனுக்குத்தான் இதெல்லாம் பிடிக்காதே என்னுடைய மடியில தலைவைத்துக் கொண்டு ரெலிவிசனப் பார்ப்பதைத்தவிர ஜோனுக்கு என்னதான் பிடிக்குமோ தெரியாது. இவள் நோட்டி றோசி எனது செல்லக்குட்டி ஒரே துடிதுடிப்புத்தான்..."
என்றுகொண்டு தனது கன்னத்தை நாய்க்குட்டியின் கன்னத்தோடு அணைத்து உரசிக் கொண்டேயிருந்தாள்.

"மிஸிஸ் மார்ட்டீன், றோசியை நீ விலைக்கு வாங்குனாயா? இல்ல யாராவது தந்தாங்களா?"

"நோ... நோ... என்னுடைய சினேகிதி எனது ஐம்பத்தைந்தாவது பிறந்த நாள் பரிசாக தந்தது. இப்ப எத்தனையோ பேர் றோஸிய விலைக்கு கேக்குறாங்க. றோஸி பெத்த குழந்தைபோல எனக்கு, அத என்னெண்டு விற்கமுடியும்...? என்ன றோஸி உன்ன நான் விற்பனா" என்று செல்லம் பொழிந்தாள் றோஸியிடம்.
"ஜோனைத்தான் நான் இன்னும் ஒரு தடவை கூட பார்க்கவில்லை" என்று சொன்னபோது -

"அதற்கென்ன ஒரு நாளைக்கு கூட்டிவாறானே" என்று விட்டுப்போனவள், அடுத்த நாள் வந்தவள் -
"வெளியில் ஜோன் நிற்கின்றான் வந்து பாரேன்" என்றாள்.

கடைக்குள் நின்றவர்களெல்லாரும் போன பின்பாக கிடைத்த நிமிடங்களுக்குள் நான் வெளியில் போனபோது, பிரவுண் கலரில் சடைத்து, பருத்த உயரமான உடம்போட நிண்ட ஜோன் என்னைக் கண்டதும் பழக்கப்பட்டவனைக் கண்டதுபோல தன்னுடைய சுருண்டு நிண்ட வாலை ஆட்டிற்று.

"ஹலோ ஜோன்..."

என்றுகொண்டு நான் அதன் முதுகை தடவி விட, நன்றி சொல்வதுபோல தொங்கிய நாக்கோடு அது என்னை அண்ணாந்து பார்த்தபோது- வாயிலிருந்தும், மூக்கிலிருந்தும் வெளிவந்த சுவாசக்காற்று நீராவி புகையாக் வெளிவந்தது.

அதற்குப் பிறகான நாட்களில் மிஸிஸ் மார்ட்டீன் ஜோனுக்காக வாங்கும் தகர டப்பா சாப்பாடுக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டேபோயிற்று.

நத்தாருக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ஆட்கள் இல்லாத நேரம் பார்த்து றோஸியை அணைத்தபடி வந்த மிஸிஸ் மார்ட்டீன் கையோடு கொண்டு வந்த பையை என்னிடம் தர, நான் அதைப் பிரித்துப் பார்த்தபோது- ஜோனுக்கான சாப்பாட்டு தகரடப்பாக்கள் நிறைந்து கிடந்தது கண்டு,
"என்ன மிஸிஸ் மார்ட்டீன்" என்றேன்.

"ஒன்றுமில்லை பணம் எதுவும் வேண்டாம். இதை திரும்ப எடுத்துக்கொள் பிளீஸ்..." என்று கெஞ்சினாள்.

"ஏன் ஏதும் காலாவதியான சாப்பாட்டை தந்து விட்டேனா? அப்படியென்றால் மன்னித்துக்கொள். இதற்கான வேறு சாப்பாட்டுச் சாமான்களையும் நான் தருகிறேன்"
என்றுவிட்டு டப்பாக்களின் பின்பக்கத்தில் பொறித்திருக்கும் திகதியை பார்க்க முற்பட்ட என்னை தடுத்து நிறுத்திய மிஸிஸ் மார்ட்டீனைப் பார்த்தபோது அவளின் முகத்தில் என்றுமில்லாத சோகம் அப்பிக்கிடந்தது.

தாங்களாக சொல்ல விரும்பாதபோதில், நாமாக திரும்பத்திரும்ப கேள்வி கேட்பதை நாகரீகமற்ற செயலென்றே வெள்ளைக்காரர் நினைப்பார்கள். என்றாலும் மிஸிஸ் மார்ட்டீனின் முகத்தில் தெரியும் சோகம் அவளிடம் என்னை திரும்பவும் கேள்வி கேட்கவே செய்திற்று.

"என்ன மிஸிஸ் மார்ட்டீன் ஏதும் பிரச்சினையா?"

கேள்வி கேட்ட என்னை நிமிர்ந்து பார்த்தவேளையில், மெழுகு சிலை உருகி வழிவதுபோல அவளின் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டேயிருந்தது.

"நேற்று ராத்திரி ஜோன் செத்திட்டான். மாரடைப்பு என்று தான் நினைக்கிறேன். இரவு படுத்தவன் எழுந்திருக்கயில்ல, நேற்றிரவு எண்ட மடியில படுத்து ரெலிவிசன் பார்த்துக்கொண்டிருந்தவன் இண்டைக்கு இல்ல, ரெண்டு பிள்ளைகளாய் வளர்த்தன். ஒண்டுபோயிற்று, றோஸிதான் பாவம் காலையிலிருந்து எதுவுமே சாப்பிடுறாளில்ல. ஜோனை அதிகமாக மிஸ் பண்ணுகிறாள் என்று நினைக்கிறேன். இனி இவள்தான் எனக்கு ஆறுதல்"

சொல்லும்போதே கட்டுப்படுத்தமுடியாமல் வாய் பொத்தி அழுதுவிட்டாள் மார்ட்டீன்.

றோஸி மார்ட்டீனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தது. மிஸிஸ் மார்ட்டீனுக்கு ஆறுதல் சொல்ல நான் வார்த்தைகளை தயார் செய்யும் வினாடிக்குள் இன்னொரு வாடிக்கையாளர் வந்துவிட, மிஸிஸ் மார்ட்டீனின் பையுக்குள் றோஸிக்கான சாப்பாட்டுக்களை போட்டுக்கொடுத்து -

"உனது நிலைமைக்கு வருந்தங்கள் என்றும், மீண்டும் ஆறுதலாக கதைக்கிறேன்" என்றும் சொல்ல - இரண்டு மூன்டு தடவைகள் நன்றி சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

வேலை முடித்த பின்னேரப் பொழுதொன்றில் ஒரு பூங்கொத்து வாங்கிக் கொண்டு மிஸிஸ் மார்ட்டீனின் வீட்டுக்குப் போய் வரவேண்டுமென்றுதான் நினைத்திருந்தேன். நத்தார் நெருங்குகின்ற வியாபாரக் கெடுபிடியால் போகமுடியவில்லை.

000

அண்ணன் வீட்டுக்கு சாப்பாட்டுக்குப் போய் வந்து தூங்கப் போன நத்தார் நாளின் பின்னிரவில் நானும் மனைவியும் பேசிக்கொண்டோம்... பாவம் மிஸிஸ் மார்ட்டீன் இந்த நத்தார் அவளுக்கு சோகமானதென்று ஆனால் விடிந்ததும் எங்கள் தேசத்தை சுனாமி வந்து தாக்கிய அனர்த்தச் செய்தியை கேட்கப்போகின்றோமென்று எங்களுக்கு என்னென்று தெரியும்.

000

சுனாமி வந்து தேசத்தின் கரையோரங்களை சுடுகாடாக்கி விட்டுப்போன இரண்டாம் நாள் காலை.

மூன்று நாள் தொடர்ந்து தூங்கி எழுந்தது போல் ஊதிப்போன விடியா முகங்களோடு வெள்ளைக்காரர் வெளியில் வரத்தொடங்கி இருந்தார்கள். சுனாமி வேறு மேலும் அவர்களின் முகங்களை சோகமாக காட்டவேண்டி நிர்ப்பந்தித்திருந்தது.

கடைக்கு வந்து போகின்றவர்களில் அனேகமானவர்கள் எதுவும் பேசுகிறார்களில்லை.

சமான்களை வாங்கிக்கொள்பவர்கள் நான் கொடுக்கும் மிச்சப்பணத்தை என் முன்னால் மேசை மீது இருக்கும் சுனாமி நிவாரண நிதி உண்டியலில் போட்டு விட்டுப் போகிறார்கள்.

வரிசையில் ஆறேழு வாடிக்கையாளர்கள் நிற்பதை நிமிர்ந்து பார்த்தபோது, கதவைத் திறந்துகொண்டு றோஸியை மார்போடு அணைத்தபடி ஏதோ அவசரச் செய்தி கொண்டு வருபவள்போல் மிஸிஸ் மார்ட்டீன் வருவது தெரிகிறது.

வந்தவள் கையசைத்து ஹலோ சொல்லிவிட்டு வரிசையில் நிற்காமல் விலத்தி நின்று என்னையே உற்றுறங்க பார்த்து நின்றவளிடம் என்ன விசயமென்று முக அபிநயத்தில் நான் கேட்க, ஆட்களை முதலில் அனுப்பி முடியென்று அவளும் கண்களால் சொல்கிறாள்.

பெரும்பாலும் கடனுக்கு ஏதும் சமான்கள் கேட்கவேண்டுமென்கிற போதில்தான் இப்படி வரிசை விலத்தி நின்று ஆட்கள் போன பின்பு வெட்கப்பட்டு மரியாதையாகக் கேட்பாள். இன்று முகத்தில் வேறு கலவரம் தெரிகிறது. ஜோன் இறந்ததன் பின்பாய் மிஸிஸ் மாா்ட்டீனை இன்றுதான் முதன் முதலாய் பார்க்கிறேன்.

வாடிக்கையாளர் அனைவரும் வெளியே போக, சந்தா்ப்பம் பாா்த்து நின்றவள் போல் கட்டவிழ்ந்த கன்றாக ஓடிவந்து மேசை முன்னால் நின்று கொண்டு என்னையே பார்க்கிறாள்.

"என்ன மஸிஸ் மாா்ட்டீன் எப்படி சுகமா?..."

ஜோனைப்பற்றியோ நத்தார்பற்றியோ நினைவூட்ட நான் விரும்பவில்லை.

"நான் நலம்... மன்னிக்கவேண்டும்... இதுவரைக்கும் நான் உன்னிடம் கேட்கயில்ல... இப்ப கேட்க்கிறன்... நீ எந்த நாட்டவன்?"

வெள்ளைக்காரா் மனதுக்குப் பிடித்து பழக ஆரம்பித்தால் நாடு, நிறம், இவையெல்லாம் பார்க்கமாட்டார்கள் என்ற நற்பண்பு கொண்டவர்கள். மிஸிஸ் மாா்ட்டீனின் பதட்டமான கேள்வியில் அவள் ஏன் கேட்கிறாள் என்பது எனக்கு புரிந்து விட்டது.

"நான் சிறிலங்கன். மிஸிஸ் மாா்ட்டீன் உனக்கு தெரியாதா?..."

"ஓ... கடவுளே... உன் நாட்டுல உள்ள உன்னுடைய சொந்த பந்தங்களின் நிலைமையை அறிந்தாயா? நீ அதுவிடயமாக திடமாக இருக்கிறாயா? இந்த சோகத்துக்குள் இண்டைக்கு நீ வேலைக்கு வந்திருக்கத்தான் வேணுமா?"

அவளின் கேள்விகளுக்கு பதில் சொன்னால் வார்த்தை உடைந்து அழுதுவிடுவேன் என்பதால் தலையை மட்டும் அசைத்துக் கொண்டேன்.

"என்னால் அறிய முடியுது உனது மனநிலையை. ரெலிவிசனைப்

பார்த்துப் பார்த்து இரண்டு நாட்களாக எனைக்கு நித்திரை இல்லையென்றால் உனக்கு எப்படி இருக்கும். இதென்ன கொடுமை...? இதென்ன பயங்கரம்? ஏன்னநடக்குது இந்த உலகத்துல? உனக்கு நான் எனனென்று ஆறுதல் சொல்ல...?"

பேச்சின் நடுவில் வந்த வாடிக்கையாளன் உண்டியலுக்குள் பணம் போடுவதையும் உற்றுப்பார்க்கின்றாள் மிஸிஸ் மார்ட்டீன்.

"ஓ... நோ... இந்த நேரத்தில் கையிலும் காசில்லையே. உள்ளதெல்லாத்தையும் ஜோனின் சவஅடக்கத்துக்கு அல்லவா செலவுசெய்து விட்டேன்..."

"மிஸிஸ் மார்ட்டீன் நீ வந்து என்னிடம் விசாரித்ததே பெரிய ஆறுதல். அதற்கே நான் நன்றிக்கடன் பட்டிருக்கின்றேன். உன்னால் முடிந்த போது நீ உதவி செய்துகொள்ளலாம். அதற்கேன் கவலைப்படுகின்றாய்...?"

பதபதைத்தவளை ஆறுதல்படுத்த முயற்சித்தேன்.

"இல்லையே... நானும் ஏதும் செய்யவேணும் போல என்னுடைய மனம் கிடந்து துடிக்குதே. நான் என்ன செய்வேன்... அந்தச் சின்னக்குழந்தைகளையும். பெண்களையும் பார்க்கப் பார்க்க..."

இப்போது மிஸிஸ் மார்ட்டீனின் உதடுகள் துடிக்கின்றன. அணைப்பிலிருக்கும் றோஸி நடப்பது என்னவென்று புரியாமல் அவளின் முகத்தையே பார்க்கின்றது.

இதற்குள் இன்னொரு வாடிக்கையாளன் வந்துவிட இடைஞ்சல் செய்யவிரும்பாதவள் போல் நான் வருகிறேன் என்று கைசைகையால் சொல்லிவிட்டு நடந்தவளின் மார்பில் சாய்ந்திருந்த றோஸி அவளின் தோளுக்குமேலால் எட்டி என்னைப் பார்த்துக்கொண்டே போகின்றது.

நத்தார் விடுமுறைக்குப் பின்பாய் தொடங்கிய முதல் வேலை நாள்

என்பதால் நேரம் போனதே தெரியவில்லை. பின்னேரம் வேலைமுடிய அரைமணி நேரம் இருக்கும் போது மிஸிஸ் மார்ட்டீன் அவசரமாய் வருவதைக்கண்டு-
"ஹலோ மிஸிஸ் மார்ட்டீன்" என்றேன்.

பதிலுக்கு "ஹலோ" சொல்லிக்கொண்டு வந்தவள் என்னைப்பார்த்து சிரித்தபடியே பர்ஸைத்திறந்து நான்கைந்து பணநோட்டுக்களை எடுத்து, அவைகளை மடித்து, சுனாமி நிவாரண உண்டியலுக்குள் திணித்துவிட்டு மீண்டும் நிமிர்ந்து என்னைப் பார்த்து சிரித்துக்கொண்டு நெஞ்சின் நடுவே கைவிரித்து வைத்துக்கொண்டு ஒரு பெரும் மூச்சொன்றை விட்டுவிட்டு மேலே அண்ணாந்து கடவுளை காட்டுவது போல கண்விழியை முகட்டுக்கு செலுத்துகின்றாள்.

பலத்த போட்டியொன்றில் வெற்றிபெற்றவள் போலவும், பெற்ற பரிசுத்தொகையைத்தான் உண்டியலில் போட்டுவிட்டு நிற்பதுபோலவும் பெருமை படர்ந்த முகத்தோடு நின்ற மிஸிஸ் மார்ட்டினை நான் ஆச்சரியமாக பார்த்து
"நன்றி மிஸிஸ் மார்ட்டீன்" என்றேன்.

"ச்சு... இதுக்கெல்லாம் எதுக்கு நன்றி கடவுள் எல்லாரையும் காப்பாற்றுவார்" என்றுவிட்டு அவள் நடந்த போதுதான் கவனித்தேன்... என்நேரமும் அவள் மார்போடு அணைந்தபடி இருக்கும் றோஸியைக் காணவில்லை. பதிலாக ஒரு கரடி பொம்மையொன்றையே அணைத்துக் கொண்டிருந்தாள்.

"மிஸிஸ் மார்ட்டீன்!"

போய்க்கொண்டிருந்தவள் நான் அழைத்ததும் திரும்பி வந்து-

"என்ன"வென்றாள்

"எங்க றோஸி? என்ன நடந்தது றோஸிக்கு...?"

"ஒன்றும் நடக்கயில்லையே"

"அப்போ எங்க றோஸி...?"

"அவள் நலமாகத்தான் இருப்பாள்"

"எங்க?"

"யார் விலைக்கு வாங்கிக்கொண்டார்களோ அவர்களிடத்தில்"

"என்ன மிஸிஸ் மார்ட்டீன்... றோஸியை வித்திட்டியா ஏன்?"

மிஸிஸ் மார்ட்டீன் பதில் சொல்லவில்லை, எதிரே இருந்த உண்டியலை தூக்கி குலுக்கிக்காட்டி விட்டுவைத்தாள். அவளின் முகத்தில் எதுவித சலனமும் தெரியவில்லை.

"மிஸிஸ் மார்ட்டீன் எதற்கு றோஸியை விற்றாய்...?"

என் கண்கள் பனித்திருப்பதை அவள் கவனித்திருக்கவேண்டும்.

"ஏய்... ஏய்... இதுக்கெல்லாம் கவலைப்படாதே, றோஸியை நான் என்ன கொலையா செய்துவிட்டேன்?... அவள் எங்கோ, யாரிடமோ செல்லப்பிள்ளையாய், சுகமாகத்தானே வளரப்போகின்றாள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நீயும் கவலைப்படவேண்டாம், கடவுள் இருக்கிறார். உனக்கு ஒன்று சொல்லட்டுமா...? இனித்தான் என்னால் நிம்மதியாகத் தூங்கமுடியும், நீ கவலைப்படாதே... எனக்கு இனிமேல் இவன் இருக்கின்றான்" என்று பயித்தியக்காரிபோல் கரடிப்பொம்மையை அணைத்துக் கொண்டு, எனது தோழை தொட்டுத்தடவி ஒரு தரம் அமுக்கிவிட்டுப்போனவளை பார்த்துக்கொண்டே நின்றேன்.

யேசு பாலகனற்ற மேரி மாதா சிலையொன்று நடந்து மறைவதுபோல் எனது தூரப்பார்வையிலிருந்து விலகி வெள்ளைப் புள்ளியானாள் மிஸிஸ் மார்ட்டீன்.

0

குறளிக் குஞ்சன்

"**சுனாமி** வந்து போன எட்டணட்டு. பள்ளங்கள்ல தேங்கி நிண்ட தண்ணி வடியயில்ல, இடிபாட்டு கல்லு, பொல்லு, தடி, மரம் செடியெல்லாம் அப்பிடி அப்படியேதான் கிடக்கு. மழைவேற உடுறபாடில்ல..."

"கட்டிக்கிடந்த ஆடு, மாடு, நாய், பூனை, மனிசரெண்டு செத்தழுகின புணவாடையால மூக்குப் பதைக்குது. இதுக்குள்ள கரண்டு வெளிச்சமும் இல்லாத அந்தப் பகுதி பகல்லயே காடுபோல இருண்டு கிடக்குமெண்டா கருக்கலாகுற நேரம் எப்படி இருந்திருக்கும்..."

"எண்டப்போய்... கேக்கக்கோளயே இவ்வளவு பயம் வருகுதெண்டா அங்கெல்லாம் மனிசர் ராவிருட்டுல என்னெண்டுதான் போவாங்களோ?"

"போகேலாதான், எண்டாலும் போய்த்தானே ஆகணும். என்னதான் இருந்தாலும் எட்டாம் சடங்கண்டைக்கு செய்யுறத்த செய்தாத்தானே செத்த சீவனுகள்ற ஆத்துமா சாந்தியடையும்"

"செய்யுறண்டா எப்பிடி...? புறந்து வளர்ந்து, செத்த இடத்துலதானே செய்யோணும்..."

"அதுக்குத்தான்... ஆகத்தான் செய்யாட்டியும் செம்புல தண்ணிய வைச்சி விளக்கையாகுதல் கொளுத்தி வைச்சிற்று வரலாமெண்டுதான் போனாங்களாம்"

"எங்க அந்த இருட்டுக் காட்டுக்கயோ?"

"சொல்லுறதக் கேளன்"

"தண்ணிச் செம்ப வைச்சிற்று விளக்குக் கொளுத்தின நேரம், முன்ன பின்ன தெரியாத நாலைஞ்சி சின்னப் புள்ளையள் வந்து இஞ்ச என்ன செய்யுறயள் எண்டு கேட்டிச்சிகளாம். செத்த சீவனுக்கு எட்டுத்தண்ணி வைக்கமெண்டு சொல்ல, எட்டப்போய் நிண்டு எங்களுக்கு எட்டும் வேணாம் ஒண்டும் வேணாம், நாங்க சாகயில்ல உசிரோடதான் இரிக்கம். நீங்களெல்லாம் ஓடுங்கோ எண்டுட்டு மண்ண அள்ளி பத்துன விளக்குல எறிஞ்சி நூத்துப்போட்டு ஓடுன புள்ளையளுக்குப் புறகால ஆக்களுடம் ஓட, ஓடுன புள்ளையள் கடற்கரை பனமரக் காட்டுக்குள்ள மறைஞ்சிற்றுகளாம்."

"இதென்ன புதுனமான கதையிது"

"இதென்ன புதுனமெண்டுதான் அவையளும் 'ஆ'வெண்ட வாய மூடாம விறைச்சிநிண்டு பார்த்தா பனைமரக் காட்டுக்குள்ளால தூரத்துல ரெண்டு பனைமர உசரத்துல மீன் வாலொண்டு ஆடி அசைஞ்சி நகர்ந்து போகுதாம்..."

"சனமெல்லாம் கிட்ட ஓடிப்போய்ப் பார்க்கக்குள்ள, ஒரு பொம்புள உருவத்தோட அந்த மீன் கடலுக்குள்ள இறங்கிச்சாம். கடலுக்குள்ள இறங்கி மறைஞ்சது திடீரெண்டு ஒருக்கா மேலால் தலைய உசத்தி கரையத் திரும்பிப் பார்த்திச்சாம். அழகான பொம்புளையாம். தலைய விரிச்சிப் போட்டிருக்காம். வெள்ளித்தகடு மாதிரி உடம்பெல்லாம் பளபளண்டு இருந்திச்சாம். ராவுலயும் நல்லாவே தெரிஞ்சிதாமே..."
"புறகு"

"புறகென்ன, சரி புதுனம் பார்த்து முடிஞ்சி ஊட்ட போகலாமெண்டு

கொஞ்சத் தூரம் நடந்திற்று வந்து கடல திரும்பிப் பார்த்த நேரம், கடலுக்குள்ள இருந்து கரைக்கும்-கடல்ல இருந்து கடலுக்குள்ளயும் உருண்டை உருண்டையா ஏதோவெல்லாம் வாறதும் போறதுமாத் தெரிய, வந்தாக்கள் திரும்பிப்போய் மறைவுல நிண்டு பார்த்தா வேத்து கெரகத்துல இருந்து வந்த ஆக்களப் போலத்தான் தெரிஞ்சிச்சாம்..."

"மிஞ்சி மிஞ்சிப்போனா ஒண்டு ஒண்ணர அடி உசரந்தான் இரிக்குமாம். நல்ல பெருப்பமான குள்ளமான ஆக்களாம். வகுறு பெருத்து, குண்டிதள்ளி அருவருப்பான தோற்றமாம்"

"கேக்குற நமக்கே நரகலா இரிக்கெண்டா நேருல பார்த்ததுகளுக்கு எப்பிடி இருந்திருக்கும். ம்.... கதையச் சொல்லு"

"கடலுக்குள்ள இருந்து கரைக்கும், கரையில இருந்து கடலுக்குள்ளயும் என்னமோ பெரிய பெரிய சாமானுகள சுமந்து கொண்டுபோய் போடுறதும் எடுக்குறதும்தானாம் அதுகள்ற வேலையாம். சுமக்கிற சாமானுகளெல்லாம் தங்களவிட பெரிய சாமானுகள்தானெண்டாலும் பஞ்சிய தூக்குறாப்போல லேசா சுமந்துகொண்டு போகுதுகளாம். இருட்டுல பார்க்கக்கோள பெரிய பனம்பழங்கள் உருண்டு திரியிற மாதிரி தெரிஞ்சிதாம்."

"அங்கெங்கேயோ நடந்ததுகள நீ சொல்லுறாய்... இஞ்ச காட்டுற கூத்தும் நடத்துற கோட்டாலையும் கொஞ்சநஞ்சமோகா?"

"என்னடி அது சொல்லன்"

"ஊருக்குள்ள ஒருத்தரும் இல்லாத நேரம் றோட்டால ஆரும்போனா, வெறும் ஊருக்குள்ள இருந்து எங்களக் காப்பாத்துங்கோ... காப்பாத்துங்கோ எண்டு கத்துற சத்தம் கேக்குதாம். ஓடிப்போய் பார்த்தா ஊடுகளுக்குள்ள இருந்து நாய்க்கூட்டம் 'வள்... வள்.... வள்...' எண்டு பாயுதாம்.

அதுமட்டுமோ, இடிஞ்சி உழுந்ததுகள வெளியாக்கப்போன ஆக்கள் பகல் சாப்பாடு சாப்பிடக்கோள திடீரெண்டு ஒரு பெரிய கை

சோத்துக் கோப்பைக்குள்ள விழுந்து சோத்த அள்ளி எடுத்துற்று மறைஞ்சிற்றுதாம்..."

"கேக்கக்குள்ளயே ஈரக்குலையெல்லாம் நடுங்குதே"

"பட்டபகல்ல கதை கேக்குற உனக்கு நடுங்குதெண்டா ராவுல அனுபவிச்சா எப்பிடி இருக்கும்"

"அப்பிடித்தான் அண்டுராவு பாறுக்கும் முஹம்மட்டும் திருக்கோயிலுக்குப் போய் ஆக்கள இறக்கிப்போட்டு தம்பட்டையைத் தாண்டி வரக்கோள ஒம்பது மணி இரிக்கிமாம். பாறுக்குத்தான் ஆட்டோ ஓட்டி வந்திரிக்கான். பின்னால இருந்த முஹம்மட்டுர பார்வையில ஆட்டாவுக்கு எதுக்கால தூரத்துல ஒரு பொம்புளை நடந்து வாறமாதிரி தெரிஞ்சிருக்கி. ஆட்டோ கிட்ட நெருங்க நெருங்க ஒரு பெரிய மர உசரத்திற்கு பொம்புள உருவம் வளர்ந்ததைக் கண்டும் முஹம்மட் ஒண்டும் பேசாமத்தான் இரிந்திருக்கான். ஊட்டுக்கு வந்தாப்புறகு பாத்தா முஹம்மட்டுர முகம் பேயறைஞ்சாப்போல இருண்டு கிடக்குறத கண்ட பாறூக்-

"என்ன காக்கா எதையும் கண்ணடயளா" எண்டு கேக்க-

"ஏன் வாப்பா ஒனக்கும் ஏதும் தெரிஞ்சிச்சா" எண்டிருக்கார்...

"காக்கோ...! தூரத்துல ஒரு பொம்புளர உருவம் மாதிரித்தான் தெரிஞ்சிச்சி. அதுக்குப் புறகு எனக்கும் ஒண்டும் தெரியல்ல. திடீரெண்டு பாத்தா சவுக்கார நுரையால செய்ஞ்ச பொம்புளர உருவத்துக்குள்ளால பூர்ந்து வந்த மாதிரி அந்த பொம்புளைக்குள்ளால ஆட்டோ வந்திச்சி காக்கா" எண்டு சொல்ல-

"எண்டவாப்போ... அதுதான் வாப்பா எண்ட கண்ணுக்கும் தெரிஞ்சிச்சி வாப்பா. புறகால ஒருக்கா கிறுகிப் பார்த்த நேரம் அது நம்முட ஆட்டோவ திரும்பிப் பார்த்து 'ஈ...ஈ...' எண்டு ஒரு சிரிப்புச் சிரிச்சத நீ பாத்திரிக்கோணுமே... எண்டவாப்போ எண்டு ஆளையாள் கட்டிப்புடிச்சிக் கத்திக் குளறி படுத்த பாயில கிடந்தவனுகள் இன்னும் எழும்பயில்லையாம்"

"அதெல்லாத்தையும்தான் உடு... இந்தா கண்ணுக்கு முன்னால கிடக்குற ஆத்துக்குள்ள காட்டுற கோட்டாலையென்ன குறைவோ...?"

"கேள்விப்பட்டன், பொழுதுபட்டு விடியுமட்டுக்கும் ஆறெல்லாம் பேய்க்கூட்டத்துர கையிலதான் இரிக்கிமாமே...?"

"அதையேன் கேக்காய். வீடி, சுருட்டு பத்திப் பழக்கமில்லாத ஆக்கள் எல்லாம் இப்ப வாயில வீடிய, சுருட்ட பத்தவைச்சிக் கொண்டுதான் மீன் வீசப் போறாங்களாம். ஏனெண்டா, நெருப்பக்கண்டா பேய் கிட்டநெருங்காதாமே..."

"நட்ட நடுச்சாமத்துல திடீரெண்டு பார்த்தா ஆத்துக்கு நடுவுல ஆள் இல்லாம வெறும் தோணி மட்டும் மிதக்குதாம். இதென்ன புதுனங்கா எண்டு பார்த்துக்கொண்டு நிக்கக்குள்ளயே தோணியில இருந்து வலையொண்டு வீசப்படுகுதாம்..."

"அதுமட்டுமோ, நீரயானையொண்டு தண்ணிக்கடியில படுத்தெழும்பி கொட்டாவியுட்டு சோம்பேறி முறிக்கிறாப்போல திடீரெண்டு தண்ணி 'சலா'ரெண்ணுமாம், பார்த்தா ஒண்டுமே தெரியாதாம்."

"அண்டைக்கு ராவும் அப்பிடித்தான், சின்னாம்பி தோணியில நிண்டு வலைய வீசிப்போட்டு இழுத்திருக்கான். வலை தண்ட இழுப்புக்கு வர கஸ்டப்பட்டிருக்கு. தண்ணிக்குள்ள இருந்து ஆரோ வலையப் புடிச்சிளுக்கிற மாதிரித் தெரிய, சின்னாம்பி தண்ட பெலம் கொண்ட மட்டுக்கும் புடிச்சிழுத்தும் வலை வாறமாதிரித் தெரியாததால, கம்பக்குத்தி தோணிய புறகால நகர்த்துன வேகத்துக்கு இழுபட்ட வலையில தொங்கிக்கொண்டு வந்த பொம்புள உடம்பக்கண்டு தோணிக்க மயங்கி உழுந்தவன் இண்டுவரைக்கும் கண்ண மூடுனா 'ஆய்... ஊய்...' எண்டு கத்துறானாம். கண்ணத் துறந்தா வெட்டவெளிய வெறிச்சிப் பார்த்துக்கொண்டே இரிக்கானாம். தாய்க்காரியும் தண்ணி ஓதிக் குடிக்கக் கொடுத்திருக்காள். தாயத்தோதி கட்டியிருக்காள். ஒண்டுக்கும் சரிவரயில்லையாம். அதுதான் திருநீறு ஓதிப் பார்ப்பமெண்டு குறளிக் குஞ்சன் பூசாரிக்கிட்ட கூட்டிக்கொண்டு போறாள்..."

அக்காட வாசலுல மகாநாடு கூடி, கதைச்சிக்கொண்டிருந்த பொண்டுகள்ற பேச்சையெல்லாம் நானும்தான் கேட்டுக்கொண்டு நித்திரைபோலப் படுத்திருந்தன்.

சொல்லப்பட்ட சம்பவங்கள நேரில பார்த்தவ யாராவது ஒருத்தி இந்தப் பொண்டுகள் கூட்டத்துல இருந்ததாய் எனக்குத் தெரியல்ல. எல்லாமே அவர்களும் கேள்விப்பட்ட செய்திகள்தான். இருந்தாலும் சொல்லப்பட்ட சம்பவங்களின் பின்னால அவங்களில் ஒருத்தி உச்சரித்த குறளிக் குஞ்சன் என்ற பெயர்தான் என்னை உசுப்பி விட்டிற்று.

முப்பது வருடங்களுக்கு முன்பான எனது நட்டாமுட்டி வயதில் நடந்த சம்பவங்கள் இப்போதும் என் நினைவில்....

புள்ளி ஆதம், மம்மாலி, முத்து, கிரி கிரி கந்தசாமி, நசுவுதீன் இப்பிடிப் பலபேரும் தங்கட குடிவெறி அடாவடித்தனத்தால ஊரப் பயங்காட்டிக்கொண்டிருந்த காலத்துலதான் குறளிக்குஞ்சன் பூசாரியாலையும் ஊர் பயந்திருந்திச்சி.

குஞ்சன் பூசாரி சூனியத்துல மகாகெட்டிக்காரனாம்.

"நான் ஒரு மந்திரம் சொல்லி காற்றக் கட்டினனெண்டால் ஒரு இலை செடிகூட அசையாது. கடலக் கட்டினனென்டா- உறைபோட்ட தயிர்ச்சட்டிபோல கடல் அப்பிடியே இருக்கும். பறக்குற காகத்த விழச்செய்வன், ஓடுற மிருகத்த அப்பிடியே நிக்கச் செய்வன், ஆரும் எனக்கிட்ட வாலாட்டுனா குறளிப் பேயாக்கி அலையவைப்பன்" எண்டெல்லாம் குஞ்சன் பூசாரி சொல்லுறதக் கேட்டு ஊருக்குள்ளயும் கொஞ்சப்பேருக்குப் பயந்தான்.
அவரக் கண்டாலே சின்னப் புள்ளையள் தாய்மார்ர சீலைக்குள்ள மறைஞ்சிருங்கள். சில புள்ளையள் நிண்ட நிலையில மூத்திரம் போயிருங்கள். அப்பிடிப் பயம்.

கொள்ளிவாய்ப் பேய், பஞ்சமிப் பேய், சென்னிப் பேய்... இப்பிடிப் பலவகையான பேய்களுக்குள்ள இவரால தத்தெடுக்கப்பட்ட பேய்

குறளிப் பேய்தான். அரைவாசி அழுகின, அருவருப்பான, அசிங்கமான தோற்றம்கொண்ட, எந்நேரமும் அழுதுகொண்டு திரியும் ஒரு சாமான்தான் குறளிப்பேயாமென்பார்கள்.

எந்த நேரமும் கையில ஒரு எலுமிச்சம் பழத்தோடதான் திரிவார் குஞ்சன் பூசாரி. மந்திரம் ஓதி, எலுமிச்சம் பழத்துல துப்பி உருட்டிவிட்டால் எதிரி உடனே குறளிப் பேயாகிவிடுவானாமெண்டு இவர் சொல்லுறத்தாலயும் இன்னும் எவரும் குறளிப் பேயாகயில்லை எண்டுறத்தாலயும்தான் ஊருக்குள்ள இவரக்கண்டாலே பயம்.

இவருக்குப் பிடிச்சது சாராயம். புடிக்காதது குளிப்பு. இஷ்ட தெய்வம் காளி. எதெற்கெடுத்தாலும் காளியைத்தான் துணைக்கு அழைப்பார்.

பாகவதர் முடி, நீண்டதாடி, முழங்காலுக்கு கீழே ஒரு துண்டு வேட்டி, ஒரு கையில் ஒரு தடி, மறுகையில் எலுமிச்சம் பழமொன்று இதுதான் பூசாரியின் தோற்றம்.

இவர் வீதிக்கு வரும்போது யாரும் சிறுவர்கள் இவரைச் சீண்டினா முதலில் எலுமிச்சம் பழத்தைக் காட்டிப் பயங்காட்டுவார். அதற்கும் அடங்காட்டி அண்டைக்கு காளியின்பாடு திண்டாட்டம்தான்.

வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே -
"காளி, நீலி, சூலி உண்ட புள்ளை நான். என்னப்போட்டு இந்த மானிடப்பயலுகள் படுத்துறபாட்ட நீ காணயில்லையாடீ... முண்ணடக்கண்ணி... உன்ன என்ன செய்யிறன் பாருடி..." எண்டு கொண்டே மெல்ல நடந்து மறைஞ்சிருவார்.

குஞ்சன் பூசாரியார் மேலும் ஊருக்குள்ள பிரபல்யமாகக் காரணமான இன்னொரு சம்பவமும்கூட இப்பவும் எனக்கு நல்லாய் நினைப்புல இருக்கு.

அப்பெல்லாம் ஊருக்குள்ள குஞ்சன்பூசாரிக்கு போட்டியா பூசாரி வேலை செய்ஞ்சவர்தான் கறுவல்பூசாரி. இவையள் ரெண்டு பேருக்கும் இடையில் எப்பவுமே முறுகல்தான்.

ஒருநாள் தண்ணியப் போட்டுக்கொண்டு நடுறோட்டுல ஆளையாள் கட்டிப்பிடிச்சி உருள, புதினம் பார்க்கு மட்டும் பார்த்துப்போட்டு, அடுத்த கட்டடத்துல ஊராக்கள்தான் பிரிச்சுட்டாங்க.

உரிஞ்சி கிடந்த வேட்டித்துண்ட தேடியெடுத்து, முக்கோணப்பாட்டுல கட்டி நீச்சல் உடை அழகிபோல அடித்தொடை தெரிய குஞ்சன் பூசாரியார் நிண்ட நேரத்துலதான் தெரிஞ்சுது தண்ட காதுல ஒரு துண்டு கறுவலுட வாயில அவ்விக் கிடக்கெண்டு.

"டேய் கறுவா...! எண்ட காதையோடா கடிச்சிப் பிச்ச, நீ இரிக்கமாட்டாய்டா... இப்ப சொல்லுறன்டா, எண்ணி எட்டு நாளைக்குள்ள உன்னய பலியெடுக்காம உடமாட்டண்டா... டேய்.... கேட்டுக்கொள்.... நீ செத்தாலும் உண்ட கட்டையைக்கூட வேக உடமாட்டண்டா..." எண்டுற்று, குண்டலம் அறுந்த கர்ணனப்போல காதப் பொத்திக்கொண்டு ஓடிற்றார்.

குஞ்சன்பூசாரி தன்ன எப்ப சூனியம் செஞ்சி சாக்காட்டுவானோ எண்டு பயந்து நடுங்கித் திரிஞ்ச கறுவல்பூசாரியார், சொன்னாப்போல எட்டாநாளே நெஞ்சடைப்பு வந்து படுத்த பாயிலேயே செத்துக்கெடந்தார்.

செத்தாளக் கொண்டுபோய் நெருப்பக் குடுத்துட்டு வந்த அரைமணி நேரத்துல திரும்பவும் ஊர்சனமெல்லாம் சவக்காலைக்கு ஓடினாங்க. என்னெண்டு கேட்டா -

"எரிஞ்சபாதி எரியாதபாதியா, வெந்தபாதி வேகாதபாதியா அரை அவியலா கறுவல்பூசாரியார் எழும்பிக் குந்திக் கொண்டிருக்காராம்" எண்டிற்று சனமெல்லாம் தலையில பாஞ்சடிச்சிக்கொண்டு ஓடிச்சிகள். அப்பதான் குஞ்சன் பூசாரியார் அண்டைக்கொருநாள் சொன்னதும்கூட அவங்க நினைப்புல வந்திச்சி.

அடுப்புக்குள்ள விழுந்த அலுமினியச் சிராய் மாதிரி எழும்பி வளைஞ்சி குந்திச் சிரிச்சிக்கொண்டிருந்த கறுவல, திரும்பவும் படுக்கவைக்க ஆக்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமில்ல. எப்பிடியோ

கஸ்டப்பட்டு மக்க மக்லாக்கப் படுக்கவைச்சி, கழுத்துக்குக் குறுக்காலயும் நெஞ்சிக்கு நடுவாலயும் பாரமான இரும்புக்கட்டை போட்டு அமத்திவைச்சி எரிச்சி, சாம்பலோடதான் ஊராக்கள் போனாங்கள். அண்டையில இருந்து குஞ்சன் பூசாரியெண்டாப் பீப்பயம்.

காலத் திரைதான் எத்தினபேர மறைச்சிப்போட்டுப் போயிருக்கு. வாழ்வுச் சுமை எத்தினபேர மறக்கச்செய்திருக்கு.

யன்னல் ஓர பஸ் பிரயாணிர பார்வையில பட்டுமறையுற றோட்டோரத்து மரங்களப்போலத்தான் நம்மட வாழ்க்கையில நாம சந்திக்கிற சொந்தங்களும் பந்தங்களும். எட்டித் தொடவும் முடியாது கூடவே நிண்டுவிடவும் முடியாது. எண்டாலும் திரும்பயும் அந்த றோட்டோரத்து மரங்களப் பார்க்கக் கிடைக்கிற நேரத்துல நம்மளை அறியாம நமக்குள்ள பரவசமொண்டு ஏற்படத்தான் செய்யுது.

பூசாரியார கனகாலத்திற்குப் பொறகு பார்க்கப்போறன் எண்ணக்கோள எனக்கும் அப்பிடித்தானிருந்திச்சி.

நான் குறளிக் குஞ்சன் பூசாரியார்ர குடிலுக்குப் போனபோதில அதிக கூட்டமா இல்ல. நாலைஞ்சி பொண்டுகளும் ரெண்டுமூணு ஆம்புளைகளும்தான் இருந்தாங்க.

வாசலுல இறைஞ்சிக் கிடந்த பூக்களும் வேப்பிலைகளும். தண்ணிதெளித்து ஈரமான வாசலும், இன்னமும் பூசாரியாருக்கு மதிப்பு இரிக்கிறதச் சொல்லிற்று.

"பூசாரியார் குடிலுக்குள்ளதான் இரிக்காராம். ஏதோ விசேட பூசையாம்" வெளிலியிருப்பவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனக்கோ பூசாரியாரைப் பார்த்துவிட வேண்டுமே என்கிற அங்கலாய்ப்பு.

"பூசாரியார் வாறார்... பூசாரியார் வாறார்..."

கால்நீட்டி இருந்ததவர்கள் காலை மடக்கி பவ்யமாக இருக்கிறார்கள்.

மெலிந்த தேகம், மேலும் பதிந்துவிட்டது போன்ற குள்ளமான

தோற்றம், கிருதா முடி - கொண்டையாகியிருந்தது, நீண்ட தாடி காவிபடிந்திருந்தது. அடையாளம் காணக்கூடிய அத்தனை அடையாளங்களுடனும்தான் இன்னும் பூசாரியார் இருக்கிறார்.

வெளியில்வந்த குறளிக் குஞ்சன் பூசாரியார் எல்லோரையும் ஒருமுறை பார்த்திற்று என்னிடம் வந்து -

"என்ன விசயம் தம்பி...?" என்கிறார்.

"கொஞ்சம் கதைக்கவேணும்"

"எதப்பத்தி..."

"எதப்பத்தியும் இல்ல...சும்மா கதைக்கவேணும்..."

"கொஞ்சம் நேரமாகுமே..."

"பரவாயில்லை... அவசரமில்ல, காத்திருக்கன்..."

தாடியைத் தடவி புன்னகைத்துவிட்டு குடிலுக்குள்ள போன பூசாரியார், மீண்டும் வெளியில் வந்தபோது கையில் ஒரு தும்புத்தடி, தும்பும் தடியும் தொடுப்பாகும் இடத்தில் சந்தனமும் - குங்குமமும், அதற்கு மேலே தும்பில் ஒரு பூ.

"வா... இனி வா...., நல்ல தும்புத்தடி வைச்சிருக்கன். நாலு சாத்துச் சாத்துனனெண்டா வந்தவழி எதெண்டு தெரியாம ஓடுவாய்..."

தும்புத்தடியை வாசல் பூவரச மரத்தில் சாத்திவிட்டு குடிலுக்குள் போனவர் மீண்டும் வெளியில் வந்தார். இப்போது கையில ஒரு செருப்பு. செருப்புக்கும் மூன்று விரல் திருநீறு சாத்தி நடுவில் பொட்டுவைச்சிருக்கு.

"தைரியம் இருந்தா இப்ப வா... வந்துபார்... செருப்பால அடிச்சி கடப்பால தள்ளுறனோ இல்லயோ பார். நான் ஊருல இல்லாத நேரம் பார்த்து வந்து சமக்கட்டுப் பார்த்துப்போட்டுப் போன மாதிரி இன்னும் ஒருதரம் வரலாமெண்டு நினையாத..."

தும்புத்தடிக்குப் பக்கத்துல மணலக் குவித்து, அதில் செருப்பை நட்டுவிட்டுப்போனவர் திரும்பவும் வந்தார். இப்போது அவரின் கையில் மஞ்சளிலும் குங்குமத்திலும் புரட்டியெடுத்த எலுமிச்சம் பழமொன்று.

''இந்த எலுமிச்சம் பழமொண்டு போதுமெனக்கு... உருட்டியுட்டனெண்டா உலகத்துல ஒரு சொட்டுமில்லாமப் போயிருவாய்..."

கைய நீட்டி முகத்துக்கு நேரே எலுமிச்சம் பழத்தை வைத்துக்கொண்டு ஏதோ மந்திரத்த உச்சரிக்கின்றார் குறளிக் குஞ்சன் பூசாரியார்.

"ஆருக்கு இதெல்லாம்...?"

பக்கத்துல இருந்த பெண்ணிடம் அப்பாவியாய்க் கேட்கிறேன். எனது பக்கம் திரும்பாமலே அந்தப்பெண் ரகசியமாக சொல்லுகின்றாள் -

"கடலுக்குத்தான்..."

எந்த அளவில் கடல்அடிபூகம்பம் ஏற்பட்டது? இனி வரும் சுனாமி எந்தளவில் வரும்? அப்படி வருமாயின் முன்னெச்சரிக்கை அறிவிப்புக்களுக்கான தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்காக எவ்வளவு செலவிடவேண்டி வருமென்றெல்லாம் அமெரிக்கன் தலையைப் பிய்த்துக்கொண்டிருக்கின்றானாமே...?

நான் இப்போதும் குறளிக்குஞ்சன் பூசாரியாரின் வருகைக்காகக் காத்திருக்கிறேன்...

எதுபற்றியுமில்லை. ஏதோவெல்லாம் அவரோடு பேசவேண்டும் போல் எனக்குள் ஓர் அங்கலாய்ப்பு...

0

அன்பு

**தபாலகத்தில்** மாதத்தின் முதல் வாரத்தில் அரச உதவிப்பணத்துக்காக காத்துக்கிடக்கும் ஏழை வயோதிபர்கள், "பணம் இல்லை, இன்று போய் நாளைவா" என்ற சொல்கேட்டு தளர்ந்த நடையும் சோர்ந்த முகமாய் திரும்பிப்போவதையும், "டாக்டர் ஐயா வரயில்ல விலத்திநில்லுங்கோ" என்கின்றபோதில் - சாயம்மங்கி, சுண்ணாம்பு சுரண்டியெடுத்த மருத்துவமனைச் சுவரில் தலைசாய்த்து சரிந்து படுக்கும் ஏழை நோயாளிகளையும், "விலத்திநில், பின்னால்போ அல்லது முன்னால் வா... இல்லையெண்டால் இறக்கி விட்டுடுவன்" என்ற அதட்டலுக்குப் பயந்து மனதையும் உடலையும் ஒடுக்கி, ஒதுங்கி நிற்கும் ஏழைப் பிரயாணிகளையும் பார்க்கும்போதிலெல்லாம் ஏனிப்படி இவர்கள் நடத்தப்படவேண்டுமென்ற கேள்வியொன்றே என்னுள் எழும்.

அன்றும் அப்படித்தான். மருதானைக்குச் சென்று, ஊருக்கு போகவேண்டிய பஸ்சுக்குள் உள்ளிட்டபோது இருக்கைகள் ஆட்களாலும் பொதிகளாலும் நிரம்பித்தானிருந்தது.

முன்கூட்டியே நான் ஆசனப்பதிவு செய்துகொள்ளவில்லை. "ஏதாவது ஒரு 'சீற்' கிடைக்கும், வாங்கண்ண பார்க்கலாமெ"ன்று சொன்ன நடத்துனன் பஸ்ஸின் மேலே நின்று சாமான்களை ஏற்றிக் கட்டிக்கொண்டிருந்தான்.

பின் பகுதி சீற்றுக்கள் காலியாகத்தான் கிடக்கின்றன. சரியான குலுக்கலாகவும், சூடாகவும் இருக்கும். ஆனாலும், அங்கேதான் இருக்கவேண்டி வரலாமென்று நினைத்துக்கொண்டு மீண்டும் ஒருமுறை பஸ்சுக்குள் நோட்டம் விட்டபோது - இருபத்திமூன்றாம் இலக்க சீற் காலியாகக் கிடந்தது காண, பைகளை மேலே இரும்புப் பலகை நெருக்கத்துக்குள் திணித்துவிட்டு இருக்கின்றேன். எனது அருகில் இடதுபக்க ஜன்னலோர சீற்றில் இருந்த பெண் பவ்யமாக முக்காட்டைச் சரிசெய்துகொண்டு சேலையை இழுத்துவிட்டுக் விட்டபடி என்னைப் பார்த்தவளாய் ஜன்னலோரமாக ஒதுங்கி இருக்கின்றாள்.

வயது ஐம்பதிற்குக் கொஞ்சம் கூட அல்லது குறைய இருக்கலாம். வலதுபக்க கீழ் வரிசையில் இரண்டு பற்களைத் தொலைத்துவிட்டிருந்தாள். சட்டென்று நான் திரும்பிப் பார்க்கக்கொள்ள வெல்லுகம் போன்றதொரு சுருக்குப் பைக்குள்ளேயிருந்து கடலைகளை எடுத்து உள்ளங்கையில் வைத்து கசக்கி, கோதுகளைப் பறக்கவிட்டிற்று வாய்க்குள்ள எறிஞ்சிற்று, கடலை மாவு கசறு படிந்திருந்த கடவாய் இரண்டையும் விரலுகளால துடைச்சிவிட்டிற்று கீழே பரவிக்கிடந்த புடவையத் தூக்கி ஒதுக்கி ரெண்டு காலுகளுக்குமிடையில் இடுக்கிக்கொண்டு இன்னும் தன்னை ஒடுக்கிக்கொண்ட கொஞ்ச நேரத்துல பஸ் நகரத்தொடங்கிற்ற.

"திருமறையின் அருள் மொழியில் நிறைந்திருப்பது என்ன...?"

நாகூர் ஹனிபாவின் கேள்வியை அடுத்து "அப்பிடிப்போடு... போடு..."வுக்கு ஒலிப்பதிவு நாடாவை மாற்றிவிட்டு ரிக்கற்

புத்தகத்தோட வந்த நடத்துனப் பையன் ரிக்கற்றுக்களைச் சரிபார்த்து பணத்தைப் பெற்றுக்கொண்டவன் என்னிடமும் ரிக்கற் கேட்ட நேரத்துல -
"வாங்கண்ண பார்க்கலாம்"மெண்டு அவனே சொன்னத நான் நினைப்பூட்ட என்னைப் பார்த்துவிட்டு பக்கத்து இருக்கை பெண்ணையும் பார்த்தவன் -

"அண்ணன், நீங்க இவடத்துல இரிக்கோணாம். உங்களுக்கு வேற நல்ல சீற்றொண்டு தாறன்... பொறுங்கோவா!..." எண்டிற்று எனது பின் இருக்கைக்காரரின் ரிக்கற்றை வாங்கிப் பார்த்ததுவிட்டு -

"ஒங்கட சீற்று இதெல்லுவா...? நீங்க ஏன் அங்கிள் அங்க இரிக்கயள், வாங்க... வந்து இதுல இரிங்க... அண்ண! நீங்க ஒழும்பி பின்னால இரிங்க..."

நடத்துனப் பையன் எனக்கும் எனது பின் இருக்கைக்காரருக்கும் மளமளவெண்டு கட்டளையிட, கேக்கக்கூடாததக் கேட்டதப்போல பின் இருக்கைக்காரர் ஆவேசமா எழும்பி -

"என்ன வாப்பா விளையாட்றயா...? நான் அங்க வரக்கிரயில்ல... இதுலதான் வாப்பா இரிப்பன்..."

சொல்லிவிட்டு ஆணி அடிச்சி அறைஞ்சாப்போல அசையாமல் இருந்திற்றார்.

என்னை ஏன் பின் இருக்கைக்குப் போகச்சொல்லி இவன் வற்புறுத்துகிறான்? பின் இருக்கைக்காரர் ஏன் என் இருக்கைக்கு வர மறுக்கிறார்? இருந்த இடத்திலேயே அவரவர் இருந்தாலென்ன? எழும்பிவிடுவதிலும், இடம்மாறுவதிலும் என்ன லாபம் என்ற ரகசியங்களெல்லாம் எனக்குப் பிடிபடவில்லை.

"நீங்க புக் பண்ண சீற்று இதெண்டா நீங்க இதுலதானே அங்கிள் இரிக்கோணும். கணகாட்டுப்படுத்தாம ஒழும்புறயளா?"

நடத்துனப் பையன் பின் இருக்கைக்காரரிடம் கெஞ்சுகின்றான்.

"புக் பண்ணுனா... பக்கத்து சீற்று சனியன பார்க்கையில்லையா நீ...? அதுக்குப் பக்கத்துல மனிசன் இருந்து வருவானா? ஒள்ளம் றோசினை பண்ணிப்பாரு வாப்பா..."

பின் இருக்கைக்காரரின் குரல் அழுவாரைப்போல உடைந்து வருகின்றது.

"தம்பி நான் இதுலேயே இருந்துகொள்றனே. எனக்கு எதுவும் பிரச்சினையில்ல..."

நான் அப்பாவியாக சொல்ல-

"இல்லண்ண, நீங்க இதுல இரிக்கத் தேவையில்லை. ஒள்ளம் பொறுங்கோ சொல்லுறன்" எண்டவன், பின்னால இருந்த வெறும் சீற்றுக்களைப் பாத்திற்று-

"கோ... உம்மா ஒழும்புகா... ஒழும்பி பின்னால போய் இரி. நெறைய சீற்றுக் கெடக்கு... அழகா படுத்துக்கெடந்து வரலாம். ஒழும்புகா..."

ஓசிப் பிரயாணியை எழுப்புவதுபோல அதட்டி வெருட்டுகின்றான் அவன்.

"யேன் வாப்பா... நானென்ன ஓசியிலையா பிரயாணம் பண்ணுறன். நானும் காசி குடுத்துத்தானே கிளி வஸ்சில ஏறிரிக்கன், அதுகும் மூணு நாளைக்கி முன்னெல்லுவா நான் சீற்று புக்குப்பண்ணின..."

"கோ... கனக்க கதையாம ஒழும்பி புறகால போய் இரிகா"

"நெக்கொண்ணா வாப்பா... இதென்னவாப்பா ஒண்ட கத புதுனமான கதையாக்கெடக்கு... காசி குடுத்து வுக்குப்பண்ணின எண்ட சீற்ற உட்டுப்போட்டு புறகால போய் இருந்து குலுக்குப்பட நெக்கென்ன வெசறா...? என்னய சும்மா உடுவாப்பா... நான் எண்ட எடத்திலய இரிக்கன்..."

"ஆ... புறகால இருந்தா மட்டும்தான் குலுக்குப்படுமாக்கும் இல்லாட்டியெண்டா..."

முகம் தெரியாத குரலொண்டுக்காக எல்லோரும் 'கொல்'லென்று சிரிக்கிறார்கள்.

"மௌத்தெண்டு சொன்னாங்களே... இன்னுமில்லையாமா...?"

இன்னொரு பின் குரலுக்கு மீண்டும் ஒருமித்த சிரிப்பொலி கேட்கின்றது.

"கோ... ஒழும்புகா... ஒழும்பி புறகால போய் இரிகா"

மீண்டும் பையன் அதட்டுகின்றான்.

"யேன் வாப்பா, நானென்ன ஒண்ட தலையிலையா குந்தியிருக்கன்... ஒழும்பிப்போக...?"

"எங்ககா கெடந்தநீ இம்புட்டு நாளும்... வாற நீ ரெண்டு மூணு நாளைக்கு முந்தி வாறயில்லையா...?"

"யேன் வாப்பா... ரெண்டு மூணு நாளைக்கு முன்னாலதான் னொக்கு கலியாணம் நடந்திச்சாக்கும்..."

அவளின் பேச்சுக்கும் ஒருசிலர் சிரிக்கிறார்கள்.

"இல்ல... வந்திருந்தா, வந்த சுனாமி அலையில ஒன்னையும் தள்ளியுட்டிருக்கலாமெண்டுதான்..."

பையன் சொல்ல மீண்டும் சிரிப்பு.

எனக்கு எதுவும் புரியவில்லை. வேட்டை நாய்கள் மத்தியில அகப்பட்ட பிராணியொன்றைப்போல இந்த மனிசி மட்டும் இவர்களுக்குள்ள அம்பிட்டு வார்த்தைகளால சித்திரவதைப்படுவதற்கான காரணம் மட்டும் எனக்குப் புரியாமல்தான் இருந்தது. ஆனாலும், கடைசிவரைக்கும் தன்னுடைய

இருக்கையை அவள் விட்டுக்கொடுக்காததில் நான் சந்தோசப்பட்டுக்கொண்டிருப்பதை யாரும் அறிந்திருக்க முடியாது.

"பரவாயில்லையப்பா, நான் இதே இடத்திலேயே இருந்துகொள்ளுறன். நீ உன்ர வேலையைப் பாரு..." என்று கடுமையாகச் சொன்ன பிறகுதான் பையன் இடத்தைவிட்டு நகர்ந்தான்.

பின் இருக்கைக்காரன் பெரிசா ஒரு நிம்மதிப்பெருமூச்சி விட்டதும் கூட எனக்குக் கேட்டது.

தற்செயலாகத்தான் மீண்டும் அந்தப் பெண்ணைத் திரும்பிப் பார்த்தேன். அழுதுகொண்டு முந்தானையால் மூக்கை உறுஞ்சிக்கொண்டவள் நான் பார்த்ததை அவதானித்துவிட்டாள்.

"என்ட நெஞ்சிக்குள்ள கெடக்குற எண்ணம், கவலை இந்த ஹறவாப்போவானுகளுக்குத் தெரியுமா?... என்னய இப்பிடிக் கக்கிசப்படுத்துறானுகளே... இவனுகள் நல்லாவா இரிப்பானுகள்...?" தனக்குத்தான் பேசிக்கொள்கிறாள். என்றாலும் எனக்கும் கேட்கிறது.

'எஹலியகொடவில்' இரவுச் சாப்பாட்டுக்கு பஸ் நிறுத்தப்பட நானும் இறங்கி றோட்டோரமா இருட்டுக்குள் நின்ற போது, "என்னண்ணன் சாப்பிடயில்லையா?" என்று கேட்டுக் கொண்டு வந்த நடத்துனன் பையனிடம் கேட்டேன்.

"ஏன் அந்தப் பொம்பிளைய எல்லாருமா சேர்ந்து பகடி பண்ணினியள்...?"

"அவ ஒரு மாதிரி பொம்பிளையண்ண அதான்.."

"ஒரு மாதிரியெண்டா எப்படி...?"

"ஒருமாதிரியெண்டா அப்பிடித்தான்... என்னண்ண தெரியாதமாதிரிக் கேக்குறயள்..."

"உனக்கென்னெண்டு தெரியும்...?"

"எனக்கு தெரியாது ஆக்கள்தான் சொல்லுவாங்க"

"உனக்கெத்தின வயசு"

"பதினேழு"

"அந்தப் பொம்பளை அப்பிடி இப்பிடியா இருந்த காலத்துல நீ பிறந்திருக்கக் கூடமாட்டாய் அப்படித்தானே"

றைவர் கூப்பிட என்னுடைய கேள்விக்கு பதில் சொல்லாமலேயே ஓடி விட்டான்.

மூத்திரம் முட்டிக்கொண்டு நிற்க, கடைக்குப்பின்னால் நான் இருட்டுக்குள் நடந்த போது

"கவனம் வாப்பா கொள்ளிக்கட்டையெல்லாம் கெடக்கு"

இருட்டுக்குள்ளிருந்து வந்த குரலுக்கு சொந்தக்காரி எனது பக்கத்து இருக்கைக்காரிதான் என்பது எனக்குப்புரிந்தது. பதிலுக்கு எதுவும் சொல்லிக்கொள்ளாமல் இரண்டுமூன்றடி நடந்த போது மீண்டும் அவளின் குரல்.

"எண்டவாப்பா அங்கால போகாதகிளி பீயும் மூத்திரமும் சுரியாக் கெடக்கு காலுல அளைஞ்சிடுவாய்"

நான் வேறோரு இடம் பார்த்து விசயத்தை முடிச்சிற்று திரும்புகையில் சாப்பாட்டுக்கடையின் பின் கதவு திறந்த போது, வெளிப்பட்ட வெளிச்சக்கீற்றொன்று முறைத்த முகங்களோடு கிடந்த மொக்கு கொள்ளிக்கட்டையில் குந்தியிருந்தவளை அடையாளம் காட்டிற்று மறைந்தது.

கூத்துக் களரிக் கலைஞர்கள் ஓய்வெடுப்பது போல் அவள் குந்திக்கொண்டிருந்தாள்.

"எந்த எடம் வாப்பா ஒங்களுக்கு?"

கேள்விக்கு பதில் சொன்ன நான் அவளின் இடத்தையும் கேட்டுத்தெரிந்து கொண்டேன்.

"ஊர உட்டுப்போயி கனவருசமாச்சி, பத்து வரிசமிருக்கும். அப்ப போன நான், மறுகாலும் இப்பதான் வாறன் வாப்பா..."

"பத்து வருசத்துக்குப்புறகா? ஏன் இவ்வளவு காலம் கழிச்சி...?"

"சவூதியில இருந்தன் வாப்பா. இப்ப அங்க இருந்துதான் வாறன். ஊருக்குப் போக புறியமில்லாமத்தான் வாறன் வாப்பா"

"ஏன்"

"என்னெண்டு வாப்பா...? பெத்தபுள்ளையும், பேரப்புள்ளையள் ரெண்டையும் கடல் கொண்டு போனாப்புறகு என்னத்துக்கு வாப்பா அந்த ஊருக்குப் போகணும்"

பஸ் புறப்படப்போகுதெண்டுறது அறிஞ்சவுடன அவசரமாக ஓடிப்போய் ஏறிக்கொள்கிறேன்.

இடைவேளைக்குப் பிறகு திரை நீக்கம் செய்யும் நாடக மேடைபோல விட்ட இடத்திலிருந்து மீண்டும் அவளை கேலி செய்து சிரிக்கத் தொடங்குகின்றார்கள்.

"எண்ட வாப்பா... ஒங்களுக்கும் உம்மா, ராத்தா, தங்கச்சி இருக்கும் தானே... தனிய வஸ்சுல வாற பொம்பிளையப் போட்டு இந்தப்பாடு படுத்துறயளே... நீங்க நல்லா இரிப்பியளா?"

திரும்பவும் முந்தானையால் முகத்தை மறைச்சி அழத்தொடங்குகின்றாள்.

நான் அயர்ந்து தூங்கி முன்சீற்றுல தலைய முட்டி கண்விழிச்சி நிமிர்ந்து பார்க்கும்போது இறங்கப்போறன் கொஞ்சம் வழியுடுறயளா என்று கேட்பது போல் அவள் எழும்பி நிற்கிறாள்.

"பண்டி எறங்கப் போகுதா...?"

"செய்த்தான் தொலையட்டும் வழிஉடுங்க..."

அவள் எப்படிப்பட்ட பாவமான ஈனச்செயல்களைக் கூட செய்திருந்தாலும் கூட ஒரு பெண் தனிமையில் பிரயாணம் செய்யும் போது இப்படிப்பட்ட இம்சைக்குள்ளாவதென்பது மிக மிக கொடுமையான விசயம். அவள் இறங்க நான் அவளின் இருக்கைக்கு மாறி ஜன்னல் வழியே பார்க்கிறேன்.

மேலே ஏறிநின்ற நடத்துனன் பையன் அவளின் பொருட்களை வேண்டா வெறுப்பாக கீழே இறங்கிப்போடுகிறான்.

பஸ் நிற்குமிடம் ஒரு தேனீர் கடையடி, கடைக்கு முன்னால் படுத்துக்கிடந்த மாடுகள் இரண்டும் எழும்பி விலகிப் போகின்றன.

சாமான்களை இறக்கிப் போட்டுவிட்டு பஸ்ஸூக்குள் பையன் ஏறவந்த போது -

"எண்ட வாப்போ, ஒள்ளம் பொறுங்கவாப்பா. எண்ட பாட்டாவ காணயில்ல. ஒள்ளம் ஏறி தேடிப்பார்த்து எடுத்துக்கிறன் வாப்பா" என்று ஏற முற்படுகிறள்.

"பாட்டாவா?... சீற்றுக்காலுல பாட்டாவா கட்டிப்போட்றயில்லையா நீ - அது எங்கயும் மேயப்போயிருக்கும் இனியெங்க கண்டுபுடிக்கிற, போகா... போ... றைவர் எடுங்க..."

அவன் வெளியில் இருந்து சொல்ல பஸ்ஸுக்குளிருந்தவர்கள் எல்லோரும் சிரிக்கின்றார்கள்.

பஸ் மெதுவாக நகரத் தொடங்க நான் எட்டிப்பார்த்த வேளையில்... நடுவீட்டுக்குள் சவம் கிடத்தியிருந்த வேளையில் துக்கம் தொண்டையை அடைத்து பிரமை பிடித்தவள் போல் இருக்கும் பெண், சவத்தை தூக்கியவுடன் எழும்பி நெஞ்சில் அடித்து கத்திக்

கதறுவாளே, அது போலத்ததான் அவளும் இரண்டு கைகளையும் தூக்கி ஆகாயத்தை நோக்கி விரித்தபடி- "எண்ட வாப்போ... எண்ட வாட்டா வாப்பா... தந்துப்புட்டு போங்க கிளியாள்..." என்றபடியே பஸ்ஸின் நகர்வோடு ஓடிவருகிறாள்.

நான் கால்களால் தடவிப்பார்க்கிறேன், என் காலில் தட்டுப்பட்ட செருப்பு ஜோடியை எடுத்து கீழே எறிய, நிவாரணப் பொட்டலங்களைப் பொறுக்கும் அகதிகள் போல, அவள் ஓடி வந்து பாட்டா இரண்டையும் பொறுக்கி எடுத்துக்கொள்கிறாள்.

முள் கிரீடம் ஏந்திய ஏசு நாதரைப் பார்ப்பதுபோல் பஸ்ஸுக்குள் இருந்தவர்கள் என்னை பார்க்கிறார்கள் என்பதும் எனக்குப் புரிகிறது.

'பெண்களுக்கெதிரான வன்முறைகள் மறைக்கப்படக் கூடாதது மட்டுமல்ல மன்னிக்கப்படக் கூடாததும் கூட'

யாரோ ஒருத்தன் மூத்திரம் போக, மறைவாக இருந்த அழகான அந்த எழுத்துத் தட்டி மின்சார விளக்கு வெளிச்சத்தில் முகத்தை காட்டிவிட்டு என் பார்வையிலிருந்து மறைகின்றது. பஸ்ஸூக்குள் வந்த பையன் ஒலிப்பதிவு நாடாவை ஓடவிடுகின்றான்.

"ரேடியோ சத்தத்த கொஞ்சம் கூட்டி வை தம்பி" என்ற என்னை திரும்பிப்பார்க்கிறான்.

"நாகூர் ஹனிபாட பாட்டெண்டா எனக்கு நல்ல விரும்பம் தம்பி."

இந்த ஆள் என்ன சொல்லுறான் என்று யோசித்தவன் போல சத்தத்தக் கூட்டுகிறான்.

"திருமறையின் அருள்மொழியில் நிறைந்திருப்பது என்ன...?"

நாகூர் ஹனிபாவின் கேள்விக்கு ராணி பெரிய சத்தமாக பதில் சொல்லுகின்றா-
"அன்பு"

0

முனிவராய் தேவராய்...

**இது** என்னோட நிரந்தரப் பாதையல்ல.

ஆறு மாதத்துக்கு முன்பு வரை நான் இந்தப் பாதையைக் கண்டவனுமில்ல.

குழந்தைகளின் குதூகலிப்பில் குலுங்கிக்கிடந்த என் பொழுதுகள், அவர்களின் பிரிவினால் நீண்டாதான காரணத்தால்தான் இப்பாதையை தேர்வு செய்யவேண்டியிருந்தது.

வேலை முடிந்து போய் நான்கு சுவர்களுக்குள் அடைந்து கொள்ளும் சூனியத்தை குறைத்துக் கொள்ளவே இப்பாதையை தேர்வு செய்தேன்.

எனது வேலையிடத்துக்கும் இருப்பிடத்துக்கும் இடைப்பட்ட இரண்டு மைல் தூரத்தினையிடையில் ஒரு மைல் நீளத்துக்குள்ளான இந்த ஒத்தயடிப்பாதையை பூங்கா என்று சொல்வதா...? அல்லது விளையாட்டு மைதானம் என்பதா...? ஏதோ ஒன்று என்றாலும் நான்

இப்போதெல்லாம் இவ்வழியால்தான் எனது நடை பயணத்தை தொடர்கிறேன்.

இப்படித்தான் அமைப்பதென்று முதலிலேயே படம் வரைந்து நட்டுவிடுகிறார்கள். எப்படி முடிகிறதோ? படத்தில் உள்ளபடியே செய்தும் காட்டுகிறார்கள்.

வடிகாலுக்காக வெட்டப்பட்ட ஒரு மைல் நீள கால்வாயில் சல சலத்து ஓடுகின்ற தண்ணீர். கால்வாய் வெட்ட தோண்டியெடுத்த மண்ணை உயரப் பரப்பி, அமைத்த, நீண்ட, உயர்ந்த, ஒற்றையடிப் பாதை. நடைபாதையின் இரு பக்கமும் நடப்பட்ட உயர்ந்த ஊசியிலை மரங்கள் குடையை மடக்கிப் பிடித்தது போல் ஒடுங்கி உயர்ந்து நிற்கும். அங்கங்கு போடப்பட்டிருக்கும் இரும்பு இருக்கைகள்.

பழைய கட்டிடங்களிலும் சோகமான சிலைகளிலும் ஆங்கிலேயனுக்கு ஏன்தான் இத்தனை மோகமோ? பாதையில் இரு பக்கமும் வைத்திருக்கும் நவீனத்துவ சிலைகளும் இந்நாட்டு காலநிலை போல சோகமாகத்தான் இருக்கும். என்றாலும் அதைகூட ரசிக்கும்படி வைப்பதுதான் ஆங்கிலேயனின் கைவண்ணம்.

பின்னேரம் நான்கு மணிக்கு இருளாகும் குளிர்காலங்களில் அந்தப்பாதையில் நடந்து போவதே மனதுக்கு தனிச்சுகம்.

உயர்ந்த மரங்கள் ஒன்றோடொன்று முட்டி கூடாரம் போல் செய்துவிடும். பாதையின் தொடக்கத்திலிருந்து பார்த்தால் அந்த ஒற்றையடிப் பாதை ஒரு குகைபோல் தெரியும். எப்படித்தான் வடிவமைத்தார்களோ தெரியாது. மின்சார விளக்குகளிலிருந்து வரும் ஒளி வெளிச்ச நூல்களைப் போல்தான் தெரியும்.

இந்த ரம்மிய பாதையில் ஆறுமாதமாக நடந்து கொண்டிருக்கின்றேன்.

நடக்கும்போது ஒரு இருக்கையில் அமர்ந்துகொள்வேன். சலசலத்து ஓடுகின்ற நீரோடையைப் பார்க்கும்போது, இந்நேரம் எங்கோ ஒரு

தொலைவு மூலையிலிருந்து ஒரு காட்டுக்குருவி கத்துமாயின் எப்படி இருக்குமென்று நான் இழந்த வாழ்வியல் சூழலை கற்பனையில் பார்த்துக்கொண்டிருப்பேன். இப்படியாய் நான் இருந்த ஒரு நாளில்தான் அவனும் வந்து எனது இருக்கையின் அடுத்த முனையில் இருந்து கொண்டான்.

முதல் நாள் நானோ அவனோ எங்களுக்குள் எந்த வார்தையையும் பரிமாறிக்கொள்ளவில்லை.

பரந்த உலகம். சுதந்திர நாடு. எவரும் வரலாம், எங்கும் இருக்கலாம். தேவையில்லாமல் பார்ப்பதைக்கூட குற்றமென்று சொல்லி கூண்டில் ஏற்றக்கூடிய சட்டம் நிறைந்த ஊர். என்பாட்டில் நான் இருந்துவிட்டு எழுந்து போய்விட்டேன்.

அடுத்த நாளும் எனது இருக்கையில் நான் இருக்க திடீரென்று தோன்றியவன்போல் அவனும் வந்து இருந்துகொண்டான். குளிருக்காக அணிந்திருந்த ஜக்கற்றில் பொருத்தியிருந்த தொப்பியால் தலையை மூடியிருந்தான். தற்செயலாக திரும்பிப்பார்த்தபோது தலையை மேலே உயர்த்தி சிரித்துவிட்டு பெருவிரலை உயர்த்தினான். நானும் பதிலுக்கு தலையை ஆட்டிவிட்டு இருந்து விட்டேன்.

"நல்ல குளிர் என்ன...?"

திரும்பிப் பார்த்தேன். என்னிடம் தான் கேட்கிறான் என்பதை உணர்ந்து நானும் தலையாட்டினேன்.

"வேலை முடிந்து வருகிறாயா?"

அவன் பேசும் ஆங்கிலம் இங்கு பிறந்தவனாய் காட்டவில்லை. என்றாலும் சிறு பிள்ளையில் வந்து வளர்ந்த தேர்ச்சி அவனின் ஆங்கிலத்தில் தெரிந்தது.

"நீ எந்த நாடு?"

நான் எனது நாட்டைச் சொன்னேன்.

"ம்... அழகான நாடு?"

"உனக்கு எப்படி தெரியும்...?"

"ரெலிவிசனில் ஹொலிடே புறோக்கிறாமில் பார்த்திருக்கின்றேன்" என்றான்.

அழகான நாடு என்பது ஒன்றைத்தவிர என் நாட்டைப்பற்றி, அந்த நாட்டின் அழகுக்குள் நடக்கும் அழிவுகள் பற்றி அவன் எதுவும் அறிந்திருக்கவில்லையே என்றுதான் நினைத்தேன்.

யாரையோ எதிர்பார்த்திருந்தவன்போல அதிக நேரம் இருந்தவன். எனக்கு முன்னால் ஒற்றையடிப்பாதையில் ஒரு கறுப்பு வாலிபன் நடந்து போவதைக் கண்டதும், திடீரென்று எழுந்து அவன் பின்னால் இவனும் நடந்து போனான். தாவரக்குகை வழியாக இருவரும் நடந்தவர்கள் தூரத்துக்குப் போனதும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டு போவதையும் அவர்கள் புள்ளியாய் மறைந்ததையும் பார்த்துக்கொண்டிருந்த நான், எனது சிந்தனையை வேறுபக்கம் திருப்பிவிட்டுக்கொண்டு இருந்தேன். அரைமணி நேரம் கழிந்திருக்கும், எனது இருக்கையின் அடுத்த நுனியில் அவன் வந்து இருந்ததைக் கவனித்தேன்.

முன்பைவிட இப்போது அவன் என்னைப்பார்த்து அதிக தடவை சிரித்தான். இரு கைகளினாலும் பின்பக்கமாகத் தலையைத் தாங்கி வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். முதல் நாள் அனுபவமும் அறிமுகமுமென்பதால் தொடர்ந்தும் நான் அவ்விடத்தில் இருக்கவோ அவனோடு பேசவோ விரும்பாமல்,

"நான் வருகிறேன்..."

என்று விட்டு எழுந்தபோது -

"சந்தோசம் போயிற்று வா" என்று சினேகமாய் சிரித்து வழியனுப்பினான்.

அதற்குப் பிறகு அவனை இனிக் காணாமாட்டேனென்றுதான் நினைத்தேன்.

நான் நினைத்ததுபோல் இல்லாமல் அடுத்தடுத்த நாட்களிலெல்லாம் அவனும் அவ்விடத்துக்கு வருவதும் என்னோடு பேசிக்கொண்டிருப்பதும் தொடர்ந்தது. அந்த கறுப்பு வாலிபன் வரும்போது இவன் பின்னால் போவதும், பின்பு வந்து வானத்தைப் பார்பதும் சிரிப்பதும் என்னோடு பேசிக்கொண்டிருப்பதும் ,தொடர்ந்து கொண்டேதானிருந்தது. இந்த நடவடிக்கையில் நான் ஒன்றை மட்டும் கவனிக்கத் தவறவில்லை. அந்த கறுப்பு வாலிபன் பின்னால் போவதற்கும் திரும்பி வந்து என்னோடு பேசுவதற்குமான நேர இடைவெளியில் அவனுக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது.

அன்றும் அப்படித்தான் கறுப்பு வாலிபன் பின்னால் போனவன் விரும்பி வந்தபோது, அவனின் விரல் இடுக்குகளில் மெல்லிய நீளமான சிகரட் போன்றதொன்று இருந்தது. வந்தவன் அதைப் புகைத்து இழுத்து வெளிவிட்டபோது வித்தியாசமான மணம் வர நான் அவனை திரும்பிப் பார்த்தேன்.

"என்ன வேணுமா...?" என்று என்னிடம் நீட்டினான்

"என்னது?"

"கங்... புகைச்சிப்பாரேன்"

"இல்லை, எனக்குப் பழக்கமில்லை"

"பழக்கமில்லாதது நல்லதுதான் பழகிக்கொள்ளாதே"

சொல்லிவிட்டு ஒரு இழுவை இழுத்து அண்ணாந்து புகைவிட்டுவிட்டு என்னைப் பார்த்து சிரித்துக்கொண்டான்.

"இதை ஏன் புகைக்கின்றாய்?"

"ஏன் புகைக்கக்கூடாது"

வானத்தைப் பார்த்துக்கொண்டே என்னிடம் கேட்டான்.

"இது புகைப்பது சட்டப்படி குற்றம் உனக்குத் தெரியுமா?"

அவன் என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு-

"உனக்குத் தெரியுமா- லைசென்ஸ் இல்லாமல், றோட்ரக்ஸ் இல்லாமல் றோட்டில் கார் ஓடுவதும் குற்றம்தான். இதெல்லாம் இல்லாமல் இந்த நாட்டில் எத்தனை கார்கள் ஓடிக்கொண்டிருக்கு. அதெல்லாம் கூட சட்டப்படி குற்றம்தான். அது தெரியுமா?"

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் இல்லைதான் ஆனா அந்த சட்டமீறல்கள் ஏற்படுத்துகின்ற பாதிப்பைவிடநான் தனியொரு மனிசன் புகைக்கிறதால எந்தப் பாதிப்பும் வரப்போறதில்ல..."

"போதைப் பொருட்களாலதான் சட்டமீறல்கள் நடக்குதென்று சட்டம் சொல்லுறது"

"அதெல்லாம் பொய். சட்டத்தைப்பற்றி சொல்லுறவங்கள்ற சட்டைப்பைக்குள்ளேயும் கொஞ்சம் கஞ்சா இருக்கும். இந்நாட்டுல கணிசமான வீதமானவங்க இதப் புகைக்கிறாங்கெண்டு புள்ளி விபரம் சொல்லுது. அதிலையும் நடுத்தர வர்க்கமும், பணக்காரரும்தான் அதிகம் எங்களைப்போலவங்களைத்தானே போதைப் பொருள் பாவனைப்பட்டியலில சேக்கிறாங்க"

இப்போது அவனோடு தொடர்ந்து பேச்சுக் கொடுக்க வேண்டும் போல் இருந்தது எனக்கு.

"அவர்களையெல்லாம் விடு நீ ஏன் இதைப் புகைக்கின்றாய்?"

ஏன் என்று எனக்கே தெரியாதென்பது போல தோளைக்குலுக்கி உதட்டைப் பிதுக்கினான்.

"இதப் புகைக்கிறத்தால உனக்கு என்ன பிரயோசனம் அதச்சொல்லன்"

இப்போது அவனிடம் கதை கேட்கும் சுவாரஸ்யம் எனக்கு. கொஞ்ச நேரம் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தவன் ஆடாமல் அசையாமல் அதே நிலையில் இருந்துகொண்டே பேசத் தொடங்கினான்.

"கட்டாயம் நீ தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றாய்தானா?"

"ம்... சொல்லன்... நமது பொழுதும் கழியுமே"

"சரி சொல்லுறன் - ஒரு ஆண் எப்பிடி நடக்கவேண்டும் தெரியுமா. ஆடாமல் நெழியாமல், விஞ்ஞானம் கண்டு பிடித்த 'றொபர்ட்' மனிசன் நடக்குறாப்போல நிமிர்ந்து திடமாக நடக்கவேணும். இந்தக் கஞ்சாவை புகைச்சால் நீயும் அப்படித்தான் நடப்பாய்"

"கம்பீரமாய் நடக்குறத்துக்காகவா கஞ்சா புகைப்பார்கள்?"

"அவசரப்பாடாதே ஆரம்பத்தைத்தான் சொன்னேன். புகைக்கத் தொடங்க அந்தக் கம்பீரம் வரும். படுக்கைக்குப்போய் வெளிச்சத்த அணைத்து விட்டு தலையணையில் தலை பதித்து அண்ணாந்து படுப்பன். இருட்டுக்குள் பல வர்ணங்கள் தெரியும், என்னை அறியாமல் என் உடம்பு படுக்கையிலிருந்து எழும்பி மிதந்து, நான் ஊஞ்சலில் ஆடுவேன். யாரும் தூரத்தில் பேசுவது காதருகில் பேசுவது போல் இருக்கும். இது வரையில் காணாத கேள்விப்பாடாத உருவங்களும் காட்சிகளும் எனக்குத் தெரியும். அந்தக்காட்சிகளை எனக்கு தகுந்தமாதிரி மாற்றிக்கொள்வேன். எனக்கு விருப்பமான உருவங்களை நானே செய்து பார்த்துக்கொள்ள என்கைகளில் நிறையவெண்கழி கிடைக்கும் நான் விரும்பியபடி பிசைந்து விளையாடுவேன்"

"இதெல்லாம் சிறுபிள்ளைத்தனமான கற்பனைதானே"

"அதைத்தான் நானும் சொல்லுகின்றேன். சிறுபிள்ளையாகத்தான் இருப்பேன். என்மனதில் எந்த விதமான பகைமையே பழிவாங்கும் உணர்வோ இருக்காது. எனது எதிராளியின் கருத்தைக் கூட

நியாயமானதென்று ஏற்றுக்கொள்வேன். எதிராளியை நியாயப்படுத்தி என்னைக் குற்றவாளியாக்க முடியும். பல தவறுகள் நியாயமானதாக தெரியும். வேண்டுமென்றால் நியாயத்தைக்கூட தவறாக நியாயப்படுத்தலாம். அமெரிக்காவில் நடந்த விமானத்தாக்குதலையும் நியாயப்படுத்தலாம். ஈராக்கில் அமெரிக்கன் போய் இறங்கியதையும் நியாயப்படுத்தலாம். எனக்கு தேவையான தத்துவங்களையெல்லாம் எனக்குள் நானே தயார்படுத்திக்கொள்வேன்."

"ஓ... இதைத்தான் முனிவர்களாய் தேவர்களாய் ஆனமென்று எங்கள் ஊரில் சொல்வார்கள்."

இப்படி நான் அவனிடம் சொல்லத்தான் நினைத்தேன் அதைப் புரியவைக்க எனக்கும் தெரியவில்லை. புரிந்து கொள்ள அவனுக்கும் நிதானமில்லை. சட்டைப்பைக்குள்ளிருந்து எடுத்த இன்னுமொரு சிறிய சுற்றுச் சுருளை வாயில் வைத்து பற்றவைத்து புகையை இழுந்து விட்டுக்கொண்டான்.

"இன்னுமா? இவ்வளவு நேரமும் நீ புகைத்தது போதாதா?"

எனக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தை வெளிக்காட்டிவிட்டேன். அவன் சிரத்துக் கொண்டான்.

"இவ்வளவு நேரமும் நான் சொன்னதெல்லதாம் பதமாக சுற்றி அழவோடு புகைத்தால் மட்டுத்தான். இன்னும் கொஞ்சம் கூடுதலாக புகைத்தால் என்ன நடக்கும் என்பதை உனக்கு சொல்லவா?"

"ம்... அதையும் தான் சொல்லேன்..."

"இப்போது நான் இருக்கின்றேனே, இந்த இருக்கை இது இரண்டாக பிரிந்து போகும் அடுத்த பாதியிலும் நானொருவன் இருப்பேன். என்னோடு நானே பேசிக்கொள்வேன். சில வேளைகளில் பூமியும் இரண்டாக பிரியும் நான் குனிந்து பார்ப்பேன். அதுவே படுக்கையாக இருந்தால் இருட்டுக்குள் பல வர்ணங்கள் தெரியும் என் உடம்பின் ஒவ்வொரு பாகமும் என்னிடமிருந்து கழன்று விலகும். சொன்னால்

சிரிப்பாய்... ஒரு இரவு என் ஆணுறுப்பு என்னைவிட்டு விலகிப்போய் அந்த இடம் வெறும் பள்ளமாக இருந்ததை உணர்ந்தேன். இதையெல்லாம் கொஞ்சம் கூடுதலாக புகைத்தால் மட்டும்தான் உணரமுடியும்"

"ம்... எங்கள் ஊரிலும் பலர் நீரில் மிதந்து நெருப்பில் நடந்ததாகவும் சொல்லியிருக்கின்றார்கள்"

"சந்தேகமேயில்லை அவர்கள் நிச்சயமாக கஞ்சாப்பிரியர்களாகத்தான் இருக்கவேண்டும்"

அவன் சொன்னதை நான் மறுக்கவில்லை. கொஞ்சநேரம் இருந்துவிட்டு நான் எழும்பி வந்துவிட்டேன்.

அடுத்த நாளும் அதே இடம். அதே சந்திப்பு.

குளித்து முழுகியிருக்கவேண்டும். தேவகுமாரன் போல் அழகாக இருந்தான். அறபு நாட்டில் பிறந்து வளர்ந்த செழிப்பு அவன் முகத்தில் தெரிந்தது. மூன்று வயதிலே குடும்பத்தோடு இந்த நாட்டுக்கு அகதியாய் வந்தார்களாம். சினேகிதர்களோடு நடந்த கைகலப்பில் ஒருவனை அடித்து காயப்படுத்தியதால் மூத்த தமையன் ஆறு மாதம் சிறையிலிருந்துவிட்டு இப்போதுதான் வெளியில் வந்திருக்கின்றானாம். தம்பிக்கு பதினாறு வயது, பள்ளிக்கூடம் போகின்றானாம். தம்பி பிறந்த உடனேயே தகப்பன் தாயை விட்டு பிரிந்து போய்விட, மூன்று மகன்களையும் தாய்தான் பார்க்கின்றாளாம். அவனாக சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. நானாகக் கேட்டுத்தான் அதையெல்லாத்தையும் சொல்லிக் கொண்டிருந்தான்.

என்னோடு பேசிக்கொண்டிருக்கும் போதிலெல்லாம் அவனின் பார்வை எதையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

அவன் எதிர்பார்த்தபடியே அந்த கறுப்பு இளைஞன் நடந்து வர, இவன் அவனுக்குப் பின்னால் போனான். இவன் எதுவோ கேட்க

கறுப்பு இளைஞன் இல்லை என்பது போல் தலையாட்ட இவன் கெஞ்சிக்கொண்டே நடந்து, மர நுனிகள் முட்டிய குகை வழிக்குள் மறையும் வரை நான் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

பத்தே நிமிடங்கள்தான் கடந்திருக்கும். திரும்பி வந்து என்னருகில் குந்திக்கொண்டிருந்தவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். எதையோ எதிர்பார்த்துப்போய் கிடைக்காமல் வந்த சோகம் அவனின் முகத்தில் தெரிந்தாலும் என்னோடு பேசும்போது மட்டும் முகத்தை மலர்ச்சியாகத்தான் வைத்துக்கொண்டான்.

"உனது தகப்பன் உங்களை விட்டுப் போகாமல் இருந்திருந்தால் நீ இப்படியாகியிருக்கமாட்டாய் என்று நினைக்கின்றேன் சரியா?"

நான் கேட்டதும் சட்டென்று என்னைத் திரும்பிப்பார்த்தவனின் முகத்தில் சின்ன கோபம் தெரிந்தது. கேட்டக் கூடாத கேள்வியைக் கேட்டு விட்டேனோ என்று கூட கொஞ்சம் பயந்து கொண்டேன். அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இஞ்ச பார், எனக்கு இருபத்தொரு வயது. இருபது வயதில் இதைப் பழகினேன். இந்த வயதில் எனது தகப்பன் இருந்திருந்தால் கூட என்னைத் தடுக்க முடியாது. உலகமறிந்த நானே உழைக்கும் வயதில் இதைப்பழகியதற்கும் என் தகப்பனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதுவும் இல்லாமல் பிள்ளைகள் கெட்டுப்போவதற்கு தாய் தகப்பனை காரணம் சொல்லுவது எனக்குப் பிடிக்காது. எனது மூத்த தமயன் சிகரட் கூட பிடிக்கமாட்டான். எதுவுமே குடிக்கவும் மாட்டான். ஆனால் முன்கோபக்கார நல்லவன். நியாயமில்லாததைக் கண்டால் கோபப்படுவான். அவன் அப்படி, நான் இப்படி..."

அவன் சொல்வது எந்த வகையில் நியாயம் என்பதில் எனக்கே குழப்பமாக இருந்தது.

"உனது தாய் பாவமில்லையா...? நீ அவளைப் பற்றி கவலைப்படமாட்டாயா"

"பாவம்தான்... கவலைதான்... நான் இரவில் எத்தனை மணிக்குப் போனாலும் எனக்காக சாப்பாட்டோடு காத்துக்கொண்டிருப்பாள். எனது தாய் அருமையானவள், அவள் மேல் எனக்கு எப்போதுமே அன்புண்டு. ஐ லவ் மை மம்"

சொல்லிவிட்டு வானத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தவன் -

"உன்னிடம் இருந்து எனக்கொரு பத்து பவுண்கள் கிடைக்குமா...?"

என்று அவன் கேட்டதை நான் எதிர்பார்க்கவில்லை. எனது சட்டைப்பைக்குள் பணம் இருக்கிறதா? இல்லையா? என்பது பற்றி அவனுக்கு தெரியாது. இல்லையென்று சொன்னால்கூட அவன் என்னை ஒன்றும் செய்து விடப்போவதில்லை. நான் கொஞ்ச நேரம் யோசித்துக் கொண்டேயிருந்தேன்.

"இல்லையென்றால் பரவாயில்லை - இருந்தால்கொடு திருப்பிக் கட்டாயம் தந்துவிடுவேன்"

அவன் கேட்ட முறை எனக்குப் பிடித்திருந்தது - சட்டைக்குள் கைவிட்டு பத்து பவுணை நான் எடுத்துக்கொடுத்ததை அவனாலேயே நம்ப முடியவில்லை. நான்கைந்து முறை நன்றி சொன்னான். நன்றி சொன்ன போதிலெல்லாம் திருப்பித் தந்துவிடுவேன் என்று அடிக்கடி சொன்னவன், இதோ இருந்துகொள் வந்துகொள்ளுறன் என்று விட்டு அவன் ஓடிய ஓட்டத்தைப்பார்க்க எனக்கு சிரிப்பு வந்திற்று.

போனவன் அரைமணி நேரம் கழிந்து வந்து எனது அருகில் குந்திக்கொண்டான். வார்த்தையில் தடம்புரள்வு கண்களில் மயக்கச்சோர்வு, ஆனாலும் நிதானமாகவே பேசினான். தாகமெடுத்து பாலைவனத்தில் அலைந்தவனுக்கு தண்ணீர் கிடைத்த சந்தோசம் அவன் முகத்தில் தெரிந்தது.

"இப்போது திருப்தியா" என்றேன்.

ஏதோ சொர்க்கத்தைப் பார்ப்பது போல் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு சிரித்தவன் -

"நீ எனது நண்பன். நான் நினைக்கவேயில்லை, கேட்டதும் தருவாயென்று. நீ எனது நண்பன்..."

என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான்.

"சரி இருட்டாகிவிட்டது நான் போகப்போறேன் நீ போகயில்லையா...?" என்றேன்.

"இரு நானும் வருகிறேன்" என்று விட்டு ஜக்கற்றுக்குள் கையை விட்டு இரண்டு மெல்லிய கஞ்சா சிகரட்டை எடுத்து பார்த்தவன், ஒன்றை பைக்குள் வைத்துவிட்டு மற்றதைப் பற்றவைத்து புகைத்துக்கொண்டே என்னோடு நடந்தான்.

"மற்றது என்ன நாளைக்கா இல்லை அதையும் இரவுக்கே புகைத்து முடித்து விடுவாயா...?"

நான் கேட்டதும் பைக்குள் கையைவிட்டு வெளியில் எடுத்துக்காட்டி - "இதையா கேட்கிறாய்...?" என்றான்.

நானும் "ஆமாம்" என்றேன்.

"இல்லை இது எனது தம்பிக்கு. பாவம் அவன் எனக்காக காத்துக் கொண்டிருப்பான். நேற்றும்கூட கொண்டுவருகிறேன் என்று விட்டு ஏமாற்றிவிட்டேன். இண்டைக்கு இதைக் கொடுத்தால்தான் சந்தோசப்படுவான்"

நான் அவனின் முகத்தை பார்க்க முற்பட்டபோது, வெளிச்சத்திலிருந்து இருட்டு வீதிக்குள் இறங்கி அவன் அவனின் வழியில்போக - எனது இருப்பிடம் நோக்கி நான் போய்விட்டேன்.

அடுத்தநாள் வருவான், எனது பத்துப்பவுண்களைத் தருவானென்றுதான் நினைத்துப்போனேன். நான் நினைத்தது போல் அவன் வரவும் இல்லை தரவும் இல்லை.

நான் யாரோ அவன் யாரோ. பயணவழிச் சந்திப்பு. இனி அவனை எங்கு காண்பது? அவனெப்போ பணம் தருவது? என்று நான் நினைத்து ஒரு வாரம் கடந்த பின்பு, ஒரு நாள் நான் வழமையாக இருக்குமிடத்தில் இருந்து கொண்டு மரநுனிகள் முட்டும் கூடார குகை வழியையே பார்த்துக்கொண்டிருந்த போது தூரத்தில் அவன் நடந்து வாறது தெரிந்தது.

நான் இருப்பதை கண்டிருக்கவேண்டும். அவன் வேகமாக நடந்து எனதருகில் வந்து நின்று பத்து பவுண் நோட்டொன்றை என்னிடம் நீட்ட நான் அவனை நிமிர்ந்து பார்த்ததேன்.

"மன்னித்துக்கொள் நான் சொன்னபடி அடுத்தநாள் வந்து உனது பணத்தை தரமுடியாமல் போய்விட்டது"

"ஏன் என்ன நடந்தது?"

"அண்டைக்கு உன்னோடு வந்து நான் வீட்டுக்குப் போறவளியில என்னை பொலிஸ் பிடித்துவிட்டது. அதுதான் வரமுடியாமல் போய்விட்டது. இப்போதும் பொலிஸ் என்னையே நோட்டமிட்டுக் கொண்டிருப்பார்கள் நான் இன்னும் இவடத்தில் நின்றால் உனக்கும்தான் சரியில்லை நான் வாறன்"

என்று விட்டுப் போனவன் திரும்பி வந்தான்.
"ஒன்று சொல்ல மறந்திட்டன். இனிமேல் நான் உன்னை இங்கு காணுவேன் என்பது சந்தேகம்தான்"

"ஏன் என்ன பிரச்சினை"

"நாளைக்கு எனது வழக்கொன்று கோர்ட்டுக்கு வருகுது. அனேகமாக சிறைத்தண்டனைதான் கிடைக்கும். அப்படி நடந்தால் இனி உன்னை இங்கு சந்திக்க முடியாதுதானே"

"சிறைத்தண்டனையா எதுக்கு...?"

"நான் முன்பு வேலை செய்த இடத்தில் பணத்தை கையாடினேன் என்று முதலாளி கொடுத்த புகாருக்கு"

"நீ உண்மையிலேயே பணத்தை கையாடினாய்தானா"

"இல்லை என்று ஏன் பொய் சொல்லவேண்டும்? தேவைப்பட்டது எடுத்தேன். ஒத்துக்கொள்ளப்போகிறேன். ஒத்துக்கொண்டால் சிறைத்தண்டனைதானே"

அவனை புரிந்து கொள்ளவே முடியாமல் இருந்தது என்னால். போனவனைக் கூப்பிட்டேன் திரும்பி வந்து "என்ன" என்றான்.

"இவ்வளவு காலத்துக்கும் உனது பெயரை நீசொல்லவில்லையே" என்றேன்.

"என்னுடைய பெயரா...? முஸா, அதுசரி உனது பெயர்...?"

நான் எனது பெயரைச் சொன்னதும், உச்சரிக்கமுடியாமல் இரண்டு மூன்று முறை சொல்லிப்பார்த்து, எனது பெயரை சரிப்படுத்திக் கொண்டு போய்விட்டான்.

இது நடந்து பல மாதங்களாகிவிட்டது. அந்த இடத்துக்கு நான் போய் இருக்கும் போதெல்லாம் அந்த மர நுனிகள் முட்டும் குகைவழிப்பாதையை அடிக்கடி திரும்பிப் பார்ப்பேன். அவன் வருகிறானா என்று.

ஒரு நாள் எனது இருக்கையில் நான் இருந்தபோது அடுத்தநுனியில் ஒரு பையன் வந்து குந்தினான். என்னையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான். எனது பெயரைச் சொல்லி-

"நீதானா அவன்"

என்று என்னை விசாரிக்க-

"நீசொல்லும் பெயருக்குரியவன் நான்தான்..., அது சரி நீயார்...?"

"நான்தான் முஸாவின் தம்பி. எனது பெயர் அலி எனது அண்ணன் முஸா சிறையில் இருக்கின்றான். பார்க்கப்போனபோது உன்னைப் பற்றி சொன்னான். உனது சுகத்தை விசாரித்ததாக சொல்லச் சொன்னான்"

அவன் சொன்னதற்கு மேல் அவனிடம் எந்தக் கேள்வியும் கேட்க நான் விரும்பவில்லை. அதிக நேரம் இருவரும் பேசாமலேயே இருந்தோம். திடீரென அந்தக் கறுப்பு இளைஞன் எனக்கு முன்னால் நடந்து போக இவனும் எழும்பி, அவன் பின்னால் நடந்து போய் அவனுடன் பேசிக்கொண்டு குகை வழிப்பாதை முடிவில் மறையும் வரை பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

கொஞ்ச நேரத்தின் பின் திரும்பிப் பார்த்தேன். அவன் மட்டும் நடந்து வருவது தெரிந்தது. முஸா நடந்து வருவது போலவேயிருந்தது.

அவன் எனது இருப்பிடத்தை நெருங்கும் முன் நான் எழும்பி நடக்கத் தொடங்கிவிட்டேன்.

நடந்து வந்து நின்று திரும்பிப் பார்த்தேன் அவன் மட்டும் அந்த இருக்கையில் ஒற்றையாய் குந்திக் கொண்டிருப்பது தெரிந்தது.

இப்போதெல்லாம் நான் அந்தப் பாதையால் போவதை நிறுத்திக் கொண்டேன்...

0

# தடாகத் தவளைகள்

காரிலிருந்து இறங்கி வாசலுக்குப்போய் கதவுத் துவாரத்துக்குள் சாவியைத் திணித்து, திருகித் திறக்கும்போதே கவனிக்கிறேன்.

நடு அறையில் பிள்ளைகளோடு ரெலிவிசன் பார்த்துக்கொண்டிருந்த மாமி எழும்பி ஓடுகின்றா.

நான் கதவைத் திறந்து உள்ளே போனபோது, மாய மோகினிபோல் மாமி குசினிக்குள் மறைந்துவிட பேய் சாத்துவதுபோல குசுனிக் கதவும் மூடப்பட்டுகின்றது. நான் எதுவும் பேசிக்கொள்ளாமல் மேலே போய்விட்டேன்.

இன்று மட்டுமல்ல, ஒருவாரமாகவே இப்படித்தான் நடக்கின்றது. என்னதான் நடந்திருந்தாலும் இப்போதெல்லாம் மாமிமேலிருந்த கோபம்போய், அவவில் பரிதாபந்தான் ஏற்படுகிறது எனக்கு.

வழமையாக நான் வேலைமுடிந்து வந்தால் என்னைக் கண்டதுமே எழும்பி சேலையை இழுத்து இறக்கிவிட்டு, இடுப்பை மறைத்துக் கொண்டு -

"என்ன சாப்பிடுறியளோ இல்ல... ரீ ஒன்டு போட்டுத்தாறதோ" என்பா.

மகள் ரெலிவிசன் பார்த்துக்கொண்டிருந்தால் -

"வேலை முடிஞ்சி களைச்சிப்போய் வந்திருப்பார்... போய் என்ன எவடமெண்டு ரெண்டு வார்த்தை பேசாம, உண்ட பாட்டுல படம் பார்த்துக்கொண்டிருக்கிறாய், எழும்பி ஏதும் முட்டையக் கிட்டைய பொரியனம்மா" என்று மகளைப் பேசுவா.

எப்போதுமே என்னில் மரியாதை கலந்த இரக்கத்தோடு பழகும் மாமி ஒருவாரமாய் ஓடி ஒளிவதற்கான காரணம் எனக்கும் அவவுக்கும் மட்டும்தான் தெரியும். இல்லையில்ல மாமியின் சொலிசிற்றருக்கும் தெரியும்.

அண்டைக்கு நான் மாமிய சொலிசிற்றருக்கிட்ட கூட்டிப்போனன். ஆனால் வரும்போது, நான் தனியாக வர, மாமி பஸ்பிடித்து ரெயின் ஏறித்தான் வீடு வந்து சேர்ந்தா.

"இந்தக்குளிருக்குள்ள வயசுபோன காலத்துல அம்மா ரெயின், பஸ் ஏறி இறங்கி வந்து கிடக்குறா, நீங்கள் அவவ விட்டுப்போட்டு தனிய வந்திருக்கிறயள்"

என்ன விசயமெண்டு மனைவி கேட்டபோதிலும், எல்லாம் உன் அம்மா சொலிசிற்றருக்கிட்ட சொன்ன ஒரு வார்த்தைதான் காரணமென்று நான் அவளிடம் சொல்லவில்லை.

இந்த நாட்டுக்கு வந்து சேர்ந்தவர்களின் எல்லா பொய்யும், புரளியும், சுத்துமாத்துகளும் - இருத்தலுக்காகவும், வதிவிடத்துக்காகவும்தானே என்ற உண்மையை நான் உணர்ந்தபோதுதான் மாமிமேல் எனக்கிருந்த கோபமும் விலகிற்று.

மாமியையும் அவரின் கடைசி மகளையும் நான்தான் காசுகட்டி ஏஜென்சி மூலமாக இந்த நாட்டுக்கு கூப்பிட்டேன்.

"நான் பெற்ற பிள்ளைகள் செய்யாததை நீங்கள் செய்திருக்கின்றீர்களே" என்று மாமி சொல்லிக் கொண்டேயிருப்பா.

மனைவியின் தங்கை இலங்கையில் இருக்கும்போது முதலில் இந்திய ஆமி கற்பழித்ததாகவும், பின்பு இலங்கை ஆமியும் கற்பழித்ததாகவும் கொழும்பு வந்த போது மீண்டும் மீண்டும் யாராரோ கற்பழிக்க முற்பட்டதாகவும், ஆகவே இனியும் அந்த நாட்டுக்கு திரும்பப் போகும் பட்சத்தில் அவர் மேலும் மேலும் கற்ழிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றது. ஏனெனில் இவரை கற்பழிப்பதென்ற ஒன்றையே இலங்கையில் உள்ளவர்கள் நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது போல்தான் கேஸ் பைல் பண்ண வேண்டுமென்பதே என் மனைவியின் ஐடியா.

கற்பென்று ஒரு பொருள் உடம்பில் ஒட்டடிக்கொண்டிருக்கிறதில்ல. அதைப் பலைமுறை அழிக்க- அது ஒன்றும் பேப்பரில் எழுதி, றபரால் அழிக்கும் விசயமுமில்ல. வேண்டுமானால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டாள் என்று சொல்லாமென்ற எனது திருத்த வேண்டுகோளுக்கிணங்க அப்படியே வழக்கும் தொடரப் பட்டுவிட்டது. எனது இந்த வேண்டுகோள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக நான் சோறு தண்ணியற்று சத்தியாக்கிரகப் போராட்டமே நடத்த வேண்டியிருந்தது என்பது வேறு விடயம்.

மூன்று வருட வாய்தாவுக்குப் பின்பு ஒரு நாள் நீதிபதி கூப்பிட்டு மனைவியின் தங்கையை உத்துறங்க பார்த்துவிட்டு, இவள் கற்பழிக்கப்பட்டிருப்பாளென்பதை நம்புகிறேன் என்று சொல்லி அவளுக்கு நிரந்தர வதிவிட விசா கொடுத்துவிட்டு, தாயாரைப் பார்த்து. இரைப்பற்றிய தகவலின்படி, டொக்டரின் கருத்தின்படி, இவர் எந்த வித அதிர்ச்சியடைந்ததாகவோ, இவருக்கு எதுவித மனநோய் இருப்பதாகவோ நான் நம்புவதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்பதால் இவரின் வதிவிட விண்ணப்பத்தை நிராகரிப்பதுடன், இவர் கூடிய விரைவில் இந்த நாட்டைவிட்டு போகலாமென்றும் தீர்ப்பளிக்கிறேன் என்று சொல்ல, உண்மையிலேயே மாமி பயித்தியம் போலத்தான் ஆயிற்றா.

நீதவான் நல்லவன், இவன்... இவன் சொலிசிற்றன்தான் கேஸ குழப்பிப்பேட்டானென்டும், திரும்பவும் ஒருக்கா சொலிசிற்றன

சந்திப்போமெண்டும் மாமி சொன்னதாலதான் நான் அண்டைக்கு கூட்டிப்போக வேண்டியதாயிற்று.

சொலிசிற்றரும் எனக்கு பழக்கப்பட்டவர்தான். அரசியல் இலக்கிய கூட்டங்களின் சந்திப்புகளில் ஏற்பட்ட அறிமுகத்தால் எங்கு கண்டாலும் சினேகமாக பல விசயங்கள் பற்றியும் பேசிக் கொள்வதுண்டு.

மாமியை சொலிசிற்றரின் அறையில் விட்டிற்று வெளியில போயிற்று வாறதாகப் போய், பத்து நிமிடத்துக்குள்ளேயே நான் திரும்பி வந்தபோது சொலிற்றரின் அறைக்குள் மாமி சத்தமாக கதைப்பதும், அதற்கு சட்ட நுணுக்கங்களைச் சொல்லி தனது படிப்பின் மரியாதையை காப்பாற்றும் விதமாய் சொலிசிற்றர் பதில் சொல்லிக் கொண்டிருப்பதும் என்காதில் பட, முன் விறாந்தை கதிரையில் குந்திக்கொண்டு உள்ளே கதைப்பவற்றுக்கு காதைக் கொடுத்து கொண்டிருந்தன். நான் வெளியில் இருப்பது மாமிக்கோ சொலிசிற்றருக்கோ தெரியாது .

"இஞ்ச பாரும் தம்பி எவ்வளவு காசைக்கட்டி என்னை என்னுடைய மருமகன் கூப்பிட்டிருக்கிறார் தெரியுமே? திரும்பப் போகச்சொன்னால் என்னென்டு போறது? கொஞ்சம் யோசித்துப் பார்த்தியளே...?"

"இதென்னம்மா... என்னவோ நான்தான் போகச்சொல்லுற மாதிரியெல்லோ கதைக்கிறயள். உங்களுக்கு மூளை பிசகெண்டு கேஸ் போடச்சொன்னியள், போட்டன். அத நீதவான் நம்பயில்ல போகச் சொல்லிற்றான். அதுக்கு நான் என்ன செய்ய...?"

"உங்க எத்தனையோ பேர் என்னென்ன சுத்துமாத்தெல்லாம் பண்ணுகினம் அதெல்லாம் உந்த வெள்ளைக்கார விசரன்களுக்கு தெரியாது, என்ர கேஸத்தான் பெரிசாக் கண்டுபிடிச்சிருக்கிறான்."

"அம்மா... எங்கடையாக்களின்ர சுத்துமாத்தெல்லாம் அவங்களுக்கு தெரியாமலில்ல, அவங்கள் கண்டும் காணாமல் இருக்குறாங்கள். ஏனென்டால் இதுகெளுக்கு பின்னாலயெல்லாம் அலைய

அவங்களுக்கு நேரமில்ல. அதுக்காக வெள்ளளைக்காரங்கள மண்டைக்குள்ள ஒண்டுமில்லாத விசரங்களெண்டு நினைக்கிறதால, நம்மள நாம புத்திசாலியெண்டு நினைச்சிக்கொண்டிருக்கிறம். அத விடுங்கோ இனி நடக்குறதப் பாருங்கோ..."

"என்ன..? இனியும் என்ன நடக்க இருக்கு...? உதுக்குள்ள சீட்டொண்டையுமல்லோ தொடங்கிற்றன். திடீரெண்டு போகச் சொன்னால் என்னெண்டு...?"

சொலிற்றரின் நெஞ்சில் விரல் குத்தி கேள்வி கேட்டது போலதான் மாமியின் குரல் உயர்ந்து ஒலித்தது.

"என்ன செய்யுறது உங்கட மகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாகியிருக்கலாமெண்டு நம்புனவர்கள், உங்களுக்கு விசர் எண்டு சொன்னத நம்ப மறுக்கிறாங்கள். எழுபது வயசுல நாட்டுக்குப்போய் வாழ்றதுல எந்தக் கஸ்டமும் இருக்காதென்டுறாங்கள். அதோட வயசு போன காலத்துல உங்களைப்போல ஆட்கள் தங்கட நாட்டுக்கு பாரமாக இருக்கிறதாகத்தான் இவர்கள் கருதுகிறார்கள். அதனால் நீங்கள் ஊருக்குப் போறதுதான் நல்லதெண்டு நான் நினைக்கிறேன் அங்கயும் மகன், மகள் பேரப்பிள்ளைகள் இருக்கிறாங்கள்தானே ஊரோட போய் சந்தோசமாக இருங்கோவன்"

"ம்... நல்ல கதையிது லட்சக்கணக்குல ஆட்கள் வாறாங்கள். அவையளெல்லாம் இந்த நாட்டுக்குப் பாரமில்ல, நான் ஒருத்திதான் பாரமாயிற்றானாக்கும். எனக்கும் சட்டம் தெரியும். நங்களொண்டும் கிணத்துத் தவளைகளில்லத் தம்பி"

"சரி அம்மா நீங்கள் கிணத்து தவளைகள் இல்ல, ஒத்துக் கொள்ளுறன். இப்ப மேற்கொண்டு என்ன செய்ய வேணுமெண்டு நினைக்கிறயளோ அதச்சொல்லுங்கோ பிளீஸ்..."

"என்ன சொல்லுறது... எவ்வளவு செலவெண்டாலும் பரவாயில்ல. உங்களுக்கு மேல ஒரு நல்ல லோயரப்போட்டு புதுசா கேஸொண்ட பைல் பண்ணுங்கோ"

"புதுசா கேஸா...? என்னெண்டு...?"

"என்னெண்டு..., என்ர மகளக் கற்பழிச்சவங்கள் என்னையும் கற்பழிச்சாங்களெண்டுதான்..."

சொலிற்றரிடமிருந்து எந்த பதிலும் இல்லை. மாமியை எட்டி அறைந்து விட்டாரோ என நினைத்த கணத்தில் கதவைப் பலமாக இழுத்துத் திறந்துகொண்டு வெளியில வந்தவர் கைகள் நடுங்க படபடத்தபடி, சிகரட் ஒன்றை எடுத்து பற்றவைத்து புகையை உள்ளே இழுத்து ஆசுவாசமாக வெளியிட்டபோதுதான் நான் உட்கார்ந்திருப்பது அவருக்கு தெரிந்தது. தலையைக் குனிந்து கொண்டேன்.

"நீரும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறீரோ? கேட்டீரே கதையை, கிணத்துத் தவளைகளில்லையாம் இவையள். கூட்டிக்கொண்டுபோய் வேறொரு லோயரப் புடிச்சிக்குடும் ஐசே... நம்மள விட்டால் போதும்"

சொல்லிற்று ரொயிலட் பக்கம் போயிற்றார். வெளியில் சொலிற்றர் யாரோடோ கதைப்பதுகேட்டு மாமி கதவைதிறந்து எட்டிப் பார்த்தபோது நான் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தேன்.

எல்லாமே வதிவிடமெண்ட ஒன்றுக்காகத்தான் என்ற உண்மையை ஒரு வாரத்தின் பின்பாய் நான் உணர்ந்த போதுதான், அதுவரைக்கும் எனக்கு மாமிமேல் உள்ள கோபம் விலகிற்று.

மேலேயிருந்து சாப்பிடலாமென்று வருகிறேன். நடு அறையில் ரெலிவிசன் பார்த்துக்கொண்டிருந்த மாமி எனது காலடிச்சத்தம் கேட்டு மாயமோகினிபோல் குசினிக்குள் ஓடுகின்றா.

"மாமி"

"கூப்பிட்டயளே தம்பி...?"

திரும்பிப்பார்த்தேன். நீளச் செவ்வக கதவிடவெளியில் பாதியாக நின்று கொண்டிருந்தா மாமி,

எனக்குள் சிரிப்பு.

0

தமிழ்த் தூண்

"என்ர செல்லக்குட்டி, உன்னை விட உன்ர பேர்தானடி எனக்கு நல்லாப் பிடிச்சிருக்கு. உனக்கு உந்தப் பேரை வெச்சதில உன்ர தகப்பன நினைச்சி நான் பெருமைப்படுறன்"

முழந்தையை வாங்கி மடியில் வைத்துக்கொள்கிறார் மாமா.

"அகல்யா எண்டால் என்ன சும்மாவே?... ராமன் கால் பட்டதால சாப விமோசனம் பெற்றவளெண்டுதான் உன்னப்பற்றி எல்லோரும் சொல்லுறது. ஆனால் என்னைப் பொறுத்தமட்டுல அது அப்பிடியில்ல. ராமரின்ர கால்களையே புனிதப்படுத்தின பெருமைக்குரியவள் நீ. ஏனெண்டால், காட்டுல அலைஞ்சி திரிந்த ராமன் எத்தினியோ கல்லுகள கண்டிருப்பார். அவைகளையெல்லாம் மிதிக்காமல் உன்னைமட்டுமே மிதிச்சவர் இல்லையே...? ஆக, உன்னால்தான் அவர் பெருமைப்பட வேண்டுமெண்டுறதான் விதி. அதனாலதான் அவர் உன்னை மிதிச்சிருக்கிறார். என்னடி செல்லக்குட்டி...."

மாமாவின்ர சேட்டை... இனி கொழும்பிலிருந்து எந்த வாருதிகளும் வரவேண்டியிருக்காது. விட்டால் ராமரும் அகலிகையுமெண்டுற தலைப்புல பிறந்தநாள் வீட்டுல கதாகாலட்சேபமே நடத்திடுவார் போலத்தான் கிடக்கு.

பியர் நுரையும், எச்சில் நுரையும் சேர்ந்து ஒட்டிப்பிரிய கஸ்டப்பட்ட கடைவாயை 'ஆ' வென்று விரித்து சுட்டுவிரலால் துடைத்துக் கொண்டு மடியிலிருந்த குழந்தையை என்னிடம் தந்துவிட்டு,

"வாருங்கோ..., வாருங்கோ... வணக்கம்... வணக்கம்..." என்று மாமா வருபவர் இருவரை வரவேற்ற நேரம் என்னிடம் இருந்த குழந்தை வேறொருவர் கைக்கு மாறிவிட்டது.

கைமாறும் ஒவ்வொரு தடவையும் அவரவர்-
"ஹப்பி பேர்த்டே செல்லம்"எண்டதெல்லாம் ஒரு வயது அகல்யாவுக்கு என்னவென்று புரியும்.

ஆட்கள் வரத்தொடங்கிய அரை மணித்தியாலத்துக்குள்ளான முறைத்துப் பார்த்தல், புன்முறுவல், மறுத்தல், ஒருவரோடொருவர் பேசாது மௌனித்தல் போன்ற தமிழர்களின் சர்வசாதாரண சம்பிராயங்களின் பின்பாய், பெண்கள் குசினிப் பக்கமாய் ஒன்றுகூடத் தொடங்கிவிட்டார்கள். ஆண்கள் குடிக்கத் தொடங்க, தொட்டுக் கொள்ள சுனாமியையும், திருகோணமலை புத்தர் சிலையையும் வாயில் எடுத்துக் கொண்டுவிட்டனர். போதாக்குறைக்கு ஜனாதிபதி எலக்சன்வேறு காரசாரமாயிருந்தது.

மேலேயுள்ள அறையில் குழந்தைகள் கொம்பியூட்டர் கேம் விளையாடும்போது, இன்னும் சில சிறுமிகள் தங்களுக்குள் பேசிச் சிரித்துக்கொண்டிருக்க- பதினாறும், பதினாலும் வயதுடைய மாமாவின் மகள்கள் இரண்டும் கீழே ரெலிவிசனுக்கு முன்னால் இருந்துகொண்டு, மேலேயும் போகமுடியாமல் கீழேயும் இருக்கப் பிடிக்காமல் திரிசங்கு நிலையில் நெழிந்துகொண்டிருக்கிறது எனக்குப் புரியாமல் இல்ல.

பிள்ளைகள மேலேபோய் விளையாடச் சொல்லலாமோ மாமா என்று கேட்க நான் நினைத்தபோதுதான், கதவைத் திறந்துகொண்டு சுரேந்திரன் உள்ளே வாறான்.

'அட கோதாரி... இவனும் வந்திட்டானே... இண்டைக்குத் திருவிழாதான்...' நான் மனிசியைப் பார்த்த நேரம் அவளும் அதையே தான் நினைச்சிருப்பாள் போல, கொடுப்புக்குள்ளால ஒரு நமுட்டுச் சிரிப்பொண்டக் காட்டிற்று குசினிக்குள் போக பின்னால போன சுரேன் கோழிக்காலும் கையுமா நிக்கிறான்.

சுரேன் என்ர சினேகிதன். சினேகிதனெண்டால் சும்மா நேற்று இண்டைக்கு கண்ட சினேகிதமில்லை. ஒண்டாகப் படிச்சதில இருந்து இயக்கத்தில சேர்ந்தது, ஜெயிலுக்குப் போனது, சிறைமீண்டு வந்து சவூதிக்குப் போக காசு கட்டி ஏமாந்து கொழும்புல அலைஞ்சது, கடைசியா லண்டனுக்கு வந்து சேர்ந்து இண்டுவரைக்கும் என்ர நல்லது கெட்டதுகள்ல கலந்து கொள்ற சினேகிதம்தான் எனக்கும் அவனுக்கும் இடையில உள்ள சினேகிதம்.

சுரேனில்லாமல் என்ர வீட்டுல ஒரு விசேடமில்லத்தான். எண்டாலும் மாமா வந்திருக்கிற இண்டைக்கு அவனும் வந்திருக்கத்தான் வேணுமா என்டுறதுதான் என்ர யோசினை.

விதண்டாவாதம் செய்து, வில்லங்கமா பேசி, கிண்டல் அடிக்குறதுல சுரேன் விண்ணன். எப்பிடித்தான் கேலியாக பேசினானெண்டாலும் அவைகள நியாயப்படுத்துறதுக்குரிய பொயின்ருகளோடதான் பேசுவான். ஆரையும் விதண்டத் தொடங்கினானெண்டால் எதிர்த்தரப்பாளும் ஸ்ரோங்கான பொயின்றுகளப் போட்டிற்றா இவனுக்கு அண்டைக்கு முழுக்கக் கொண்டாட்டம்தான். ருசிகண்ட பூனைமாதிரி அந்த ஆளையே சுத்திச் சுத்தி வருவான். இப்ப இவன் ருசிகண்டு சுத்திசுத்தி வாறதெல்லாம் மாமாவத்தான்.

மாமா, தன்னத் தமிழ்த் தூணெண்டும், தன்னாலதான் தமிழ் தலை நிமிர்ந்து வாழுதெண்டும், தான் உயிரோட இருக்கிறவரைக்கும் 'தமிழ்

இனி மெல்லச் சாகா'தெண்டும் நினைச்சிக்கொண்டிருக்கிறவர். பெற்ற பிள்ளைகளுக்கும் பொஞ்சாதிக்கும் தமிழ்தான் கதைக்கவேணும், கால்சட்டை போடக்கூடாது, கால் மயிர் வழிக்கக்கூடாது, கண் இமை மயிர் பிடுங்கக் கூடாது எண்டெல்லாம் தமிழின் பெயரால பல கட்டுப்பாடுகளையும் உத்தரவுகளையும் பிறப்பித்துக் கொண்டிருக்கிறவர்.

போனவருசம் அகல்யாட தலைவழிப்பண்டைக்குத்தான் மாமாவும், சுரேனும் சந்திச்சிக்கொண்டவையள். ஊருல இருந்த நேரம் சுரேனும் என்கூட மாமாவீட்டுக்கெல்லாம் வந்திருக்கிறான். ஆனால் மாமாதான் அவன மறந்திற்றார். அண்டைக்கு நடந்த விசயம் இண்டைக்கு நடந்தால்போலதான் கிடக்கு.

எதையோ கொடுத்து எதையோ புண்ணாக்குன கதைபோல மாமாதான் அவனிட்ட வாயக்குடுத்து வாங்கிக் கட்டிக்கொண்டவர்.

தலைவழிப்புக்கு வந்த சுரேன் மாமாவுக்கு பக்கத்துல கிடந்த கதிரையிலதான் இருந்தான். எப்பிடித்தான் அவனால முடியுதோ, யாரும் எதுவும் பேசாத நேரத்துல அப்பாவிபோல நல்ல டீசன்டானவன் மாதிரித்தான் சுரேன் முகத்த வச்சிக்கொள்வான்.

அண்டைக்கும் அப்பிடித்தான், அப்பிராணிபோல இருந்தவனிட்ட - "தம்பி ஆரு அகிலனுக்கு சினேகிதமே...?" எண்டு மாமாதான் முதன்முதலா கதை குடுத்தவர். அண்டைக்கு பிடிச்சதுதான் இண்டைக்கு வரைக்கும் அவரத் தொடருது.

கேட்ட கேள்விக்கு 'ஓமோம்' எண்டு ஒற்றைவரியில பதில் சொன்னவன சும்மா விடாமல் "யாழ்ப்பாணத்துல எவடம் தம்பி நீரெ"ண்டு அவனிட்ட கேட்டிருக்கத் தேவையில்லை.

"ஏன் ஐயா, இலங்கையில யாழ்ப்பாணம் மட்டும்தான் இருக்கோ? அல்லது யாழ்ப்பாணத்தாக்கள் மட்டும்தான் வெளிநாட்டுல இருக்காங்களோ...?"

"மன்னிக்க வேணும் தம்பி, அகிலன்ர சிநேகிதமெண்டபடியால் அப்பிடிக் கேட்டன். நாட்டுல எவடம் தம்பி, கொழும்பே...?"

"ஏன் அகிலன்ர சினேகிதமெண்டால் கொழும்புக்காரனாத்தான் இருக்க வேணுமோ...?"

"அப்பிடியில்லை தம்பி, எவடமெண்டு கேட்டன்..."

"அதுக்கேன் சும்மா சுத்திவளைப்பான். நான் அம்பாறை ஐயா"

"அம்பாறையே...? தம்பி முஸ்லீமே...?"

"ஏன் அம்பாறையில தமிழர் இருக்கக்கூடாதே...?"

"அங்க முஸ்லிம்களும் சிங்களவரும்தானே பெரும்பான்மை.."

"அப்ப சிறுபான்மையை நினைக்கக்கூட மாட்டியளோ?... அம்பாறையிலையும் தமிழர்கள் இருக்கிறாங்கள் எண்டு எங்கள்ல பலபேருக்கு 'சுனாமி'க்குப் பிறகுதானே தெரிய வந்தது..."

"அப்பிடியெல்லாம் இல்லதம்பி... ஊரு எவடமெண்டாலும் நாங்களெல்லாரும் தமிழர். அதில சந்தோசம்... ம்... சாப்பிடுமேன்..."

முன்னால இருந்த பலகாரத்தை எடுத்து நீட்டினார்.

வில்லங்கத்த விலைகொடுத்து வாங்கி விருந்தும் வைக்கிறார் மாமா.

"டேய் ஏனடா அம்பாறையெண்டு மாமாட்ட பொய் சொன்னநீ...?"

குசினிக்குள் வந்த சுரேனை மடக்கிக் கேட்டேன்.

"பின்ன என்னடா... நாட்டுல இருக்கைக்க எத்தின தரம் உன்னோட சேர்த்து என்னக் கண்டிருப்பார். இப்ப எதுக்கு இந்த தடிப்பு. இரு... இருந்து உன்ர மாமனக் காய்ச்சிற காய்ச்சலப்பாரன்..."

நானும் பார்த்துக்கொண்டுதான் இருந்தன். நல்லவேளை மாமாவின்ர பக்கத்து கதிரையில வேறொரு ஆள் வந்திருந்ததால மாமன்

தப்பிற்றார். அண்டையான் தொடர்ச்சி இண்டைக்கும் இருக்கும் போலத்தான் தெரியுது.

சொல்லிவச்சாப்போல கோழிக்காலும், பியர் கிளாசுமாக வந்த சுரேன் மாமாவுக்குப் பக்கத்துலதான் இருக்கிறான்.

பாதைய தவறவிட்ட குடும்பமொண்டுக்கு தொலைபேசியூடாக வழி சொல்லிவிட்டு நானும் போய் சுரேனுக்கு பக்கத்தில இருந்துகொள்ளுறன்.

மாமாவின்ர பிள்ளைகள் ரெண்டும் பேயன் பிலாப்பழத்த பாக்குறாப்போல வந்தாக்களையும், எங்களையும், டீவியையும் மாறிமாறிப் பார்க்குதுகள். இடைக்கிடை மேலையும் அண்ணாந்து அண்ணாந்து பார்க்குதுகள். அதுகளின்ர வயதையொத்த பிள்ளைகளெல்லாம் மேல விளையாடும்போது இங்க அதுகளுக்கு என்னெண்டு இருப்புக்கொள்ளும்.

பிள்ளைகள் இருப்புக் கொள்ளாமல் வளைஞ்சி நெளியுறத சுரேன் கண்டுற்றான்.

"ஏன் ஐயா, மேல எல்லாப் பிள்ளையளும் விளையாடுகினம். உங்களின்ர பிள்ளைகளையும் போய் விளையாடச் சொல்லலாமே...?"

சுரேனின் வாய் சும்மா கிடந்திருக்கலாம்.

"இல்ல தம்பி... நான் ஒரு நாளும் போய் வாற வீட்டுகள்ல சின்னாக்கள் பெரியாக்களெண்டு பிரிச்சிப் பழக விடுறதில்லை... அப்பிடி செய்யுறதுதான் எங்கடை ஆட்கள் விடுற பெரிய பிழை தெரியுமே...?"

"எனக்கு விளங்கயில்ல... அப்ப ஏன் ஐயா சின்னப்பருவம், பெரிய பருவமெண்டு இருக்கு. எல்லாரும் பியர்கேனும் கையுமா பெரியாக்களாகவே பிறந்திருக்கலாமே...?"

"உமக்கு விளங்கயில்ல தம்பி... நாங்கள் தமிழ், தமிழ் எண்டுகொண்டு

சனி ஞாயிறுல ரெண்டு மணித்தியாலம் தமிழ் பள்ளிக்கூடத்துக்கு பிள்ளைகள கொண்டுபோய் விட்டால் போதுமே...? அங்க எத்தின தமிழ் சொல்லுகள இந்தப் பிள்ளைகளால பிடிக்க முடியும்...?"

"எனக்கு விளங்கயில்லைத்தானய்யா சொல்லுங்கோ..."

"பள்ளிக்கூடத்துல மிஞ்சிப்போனால் ஒரு பத்து இருபது சொல்லுகளத்தான் பிடிக்கமுடியும். அதவெச்சி என்னெண்டு தம்பி தமிழ வளர்க்கிறது. அதனாலதான் நான் என்ர பிள்ளைகள பெரியாக்கள் இருக்குற இடத்திலயே இருக்க வைக்கிறன். ஏனெண்டால் ரெண்டு ஸ்ரோங்கான தமிழ் சொல்லுகளையும் பிடிக்குங்களெல்லே...?"

"எங்கள நாங்களே பெரியாக்கள் எண்டு சொல்லிக் கொள்ளுறம் எண்டுறதுதானய்யா உண்மை. நாங்கள் கதைக்கிறதுல நிறைய சின்னப் பிள்ளைகளின்ர காதுகள்ளேயே விழக்கூடாது... அப்பிடிச் சின்னத்தனமாகவெல்லாம் நாங்கள் கதைக்கிறமெண்டு உங்களுக்குத் தெரியுமோ...?"

"தெரியும் தம்பி, சின்னப் பிள்ளைகள் அன்னப் பறவைகள் மாதிரி தண்ணிக்குள்ளயிருந்து பால உறுஞ்சிறதப்போல நல்லத மட்டும்தான் அதுகள் எடுத்துக்கொள்ளுங்கள்..."

"ஐயா... சொல்லுறனெண்டு குறைநினையாதையுங்கோ. உந்த அன்னப் பறவை, பீனிக்ஸ் பறவையெல்லாம் உங்கட கற்பனைப் பூழல்கள். அதையெல்லாம் விட்டுப்போட்டு சின்னப் பிள்ளைகளின்ர சுதந்திரத்த பறிக்காமல் பிள்ளைகள மேலே போய் விளையாடச் சொல்லுங்கோ..."

"உமக்கு விளங்குதில்லை தம்பி... நாங்கள் தமிழுக்கு உயிரைக் கொடுகிறது உமக்கு விளங்குதில்லை. இண்டைக்கு மரக்கறி வாங்க தமிழ்க்கடைக்கு போறதெண்டால்கூட எங்கட பிள்ளைகளையும் கூடவே கூட்டிக்கொண்டுதான் போறம். ஏனெண்டால்

அங்கனைக்கும் ரெண்டு தமிழ்ச் சொல் தெரிஞ்சிகொள்ளுங்களே எண்டுதான்..."

"நீங்கள் தழிழுக்கு உயிர்கொடுக்கயில்ல. அங்க உயிர் கொடுக்குறவங்களால இங்க நீங்கள் உயிர் வாழ்றயள். அதுதான் உண்மை. அதைவிடுங்கோ. அப்ப Buy one get one free மாதிரி மரக்கறிக்கு காசுகுடுத்துட்டு தமிழ இலவசமா பெற்றுக்கொள்ளுறயள்"

நோகாம ஊசி ஏத்துறதுல சுரேன் கெட்டிக்காரன். நான் மாமாவுக்கு தெரியாமல் அவன் தொடையை கிள்ளிவிட்டன்.

"தம்பி உமக்கு பகிடி கூடிப்போயிற்றெண்டு நினைக்கிறன். உது நக்கலடிக்கிற விசயமில்ல. சீரியசான விசயம் தெரியுமே...?"

"ஐயா கோவிக்க வேண்டாம். சின்னப்பிள்ளையள்... மேலே போய் விளையாடட்டும்... தங்கச்சியவையள் மேலே போய் விளையாடுங்கோம்மா"

சுரேன் சொல்ல கட்டறுந்த கன்று தாய்முலை தேடி ஓடுறாப்போல மேலே ஓடுன பிள்ளைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார் மாமா.

"பார்த்தீயளே ஐயா. அவையள் எவ்வளவு அங்கலாய்ப்போட இருந்திருக்கினமெண்டுறத பார்த்தயளே...?"

"புரியுது தம்பி... விளங்காமலில்ல... என்ன செய்யுறது... உந்த நாடு அப்பிடியல்லே இருக்குது. அதனாலதானே கவனமாக இருக்கவேண்டி கிடக்கு..."

"ஏன் ஐயா இந்த நாட்டுக்கு என்ன பிரச்சனை...?"

முகத்த அப்பாவிபோல வைச்சிக்கொண்டுதான் கேக்கிறான் சுரேன்.

"ம்... நாடே இது...? கலாச்சாரமற்ற நாடு... குப்பை நாடு..."

மாமாவின்ர பியர் கிளாஸ் திரும்பவும் நுரையால் நிரம்பி வழிகின்றது.

"எங்களையெல்லாம் வரச்சொல்லிற்று மகாராணி ஏயார்போர்ட்டில கம்பளம் விரிச்சி வரவேற்க நிண்டவவே...? இல்லையே...?"

"இல்லத்தான்... எண்டாலும் வந்திட்டமே... வந்து மாட்டிட்டமே..."

"இப்பவும் என்னய்யா... யாரும் பிடிச்சிழுக்கயில்ல, விரும்பினால் நாளைக்கெண்டாலும் நாட்டுக்குப் போகலாம்..."

"நக்கல்...! உது நக்கல்... உந்த நக்கலும் நையாண்டியும்தானே கூடாதென்டுறது..."

"இதென்னய்யா நக்கல்... நான் சீரியசாகத்தான் சொல்லுறன். விருப்பமில்லையெண்டால் போகவேண்டியதுதானே..."

"நாங்களும் என்ன தம்பி விருப்பப்பட்டோ உங்கனைக்கு கிடக்குறம். எங்கட நாட்டுப் பிரச்சினை தீர்ந்தால் இண்டைக்கெண்டாலும் போகத் தயார்..."

"பிரச்சினை தீராதெண்ட தைரியத்தில கதைக்கிறயள்..."

"உமக்கு விளங்குதில்லை தம்பி... ஒரு முடிவில்லாம, உந்தப் பிரச்சினைக்க போய் திரும்பவும் ஓடித்திரியேலுமே...?"

"உந்தப் பிரச்சினைக்கையும்கூட அங்கயும் எங்கட சனங்கள் வாழுதுகள்தானே?... அவையள் என்ன மனிசரில்லையே...?"

"நீர் விதண்டாவாதம் கதைக்கிறீர் தம்பி. இங்க பிறந்த பிள்ளைகள் அங்க போனால் அந்த குண்டு வெடிப்புக்கயும் கண்ணிவெடிக்கயும் வாழுங்களே...?"

"அதையெல்லாம் பழகவேணுமெண்டுதானே இங்க ஒரு நாளுல நாலஞ்சி இடத்துல தொடந்து குண்டு வெடிச்சிது. பயப்படாதீங்கோ ஐயா குழந்தைகள் பழகிடுங்கள்"

"பச்சக்குழந்தைகள், வளரும் பயிர்கள் தம்பி. தமிழையும் வளர்த்துக்கொள்ளட்டும் எண்டுபார்க்கிறன்..."

"வாழ்த்துக்கள் ஐயா... உங்களின் தமிழ் வளர்ப்பு முயற்சிக்கு என்ர வாழ்த்துக்கள்... இருங்கோ வாறன்..." எண்டுட்டு என்னிட்ட முன்னால தொட்டுக்காட்டிற்று மேல ஓடுனவன் பத்து நிமிசமாகியும் கீழே வரக் காணயில்ல.

வந்தாக்களுக்கு சாப்பாடு குடுக்குறமாதிரி வந்துபோன மனிசியும் - "எங்கேயப்பா சுரேனைக் காணயில்ல"

என்று இரண்டு தரம் கேட்டுற்றாள். எனக்கும் யோசனைதான். மேலே பிள்ளைகள் விளையாடுதுகள், இவன் விதண்டாவாதக்காரன், சின்னாள் பெரியாள் எண்டில்லாமல் விதண்டிக்கொண்டேயிருப்பான். மூத்திரம் பேயப் போன பேயன் இவ்வளவு நேரத்துக்கு என்ன செய்யுறான் எண்டு நினைச்சி எண்ட மண்டை குழம்பப்பார்க்குது.

மாமாவும் சாப்பிடத் தொடங்கிற்றார். சின்னப் பிள்ளைகள் மணல் அள்ளி விளையாட்ற மாதிரி சோற்றை அள்ளி வாயில் வைத்து உதிர்த்துகின்றார். வாய்க்குள் பாதி கோப்பைக்குள் மீதி விழுகின்றதைக் கண்ட மாமி தண்ணிக் கோப்பையோடு வந்து மாமாவின் கையைப் பிடித்துக் கழுவி விட்டபோது -

"அப்ப எனக்கு என்ன வெறியெண்டே நினைக்கிறாய்...?" என்று மாமா கேட்க -

"அதுதானே சும்மா இருக்கிறவர நீங்கள்தான் வெறிகாரராக்குறயள்..." என்று பக்கத்திலிருந்தவர்கள் கேட்டு மாமியின் முகத்தில் கரியைப் பூசுகிறார்கள்.

இதுக்கு மேலேயும் விட்டால் பிழைச்சுப்போயிடும். போய் அவன இறக்கிக்கொண்டு வருவமெண்டு நினைச்சி மேல ஏறப்போன நேரம் -

"தம்பி உந்தச் சின்னதுகள் ள்மிள மறந்து ங்ங்கிலிசில் நிண்டு விளையாடுவினம். அப்பிடியேனும் குளப்படி பண்ணினாங்கள் எண்டால் தமிள்ள கதையுங்கோ எண்டு நல்லா பேச்சுக்குடும்..."

மாமாவின்ர நாக்குப் புரண்டாலும் தமிழ்ல விடாப்பிடியாகத்தான் இருக்கிறார்.

நான் மேல ஏறி நிமிர்ந்து பார்க்கிறேன். ரொயிலற்கதவு பூட்டியிருக்கு இவன் நிலையில சாய்ஞ்சி கொண்டு நிற்கிறான் மற்ற அறைக்குள்ள புள்ளைகள் கதைச்சி, சிரிச்சி, ஓடி விளையாடுகிற சத்தம் கேட்குது. உவன் ஏன் இதுல நிற்கிறான் ரொயிலற்றுக்க ஆரும் நிற்கிறாங்கள், அவையள் வரும்வரை காத்து நிற்கிறானோ எண்டும் கூட நினைச்சன். ஏண்டா மூதேவி சாத்தி வைச்ச வைரவர் சிலை மாதிரி உதுல நிற்கிறாய் எண்டு கேப்பமெண்டு வாயத்திறக்க முன்பே, காந்தித்தாத்தாட மூண்டு குரங்குல ஒரு குரங்குபோல 'பேசாத' எண்டு விரல வாயில வைச்சி கட்டளை போட, நான் எதுவும் பேசாமல் போய் பக்கத்துல நிண்டு "என்னடா" என்டு ரகசியமாகக் கேட்கிறன். "எதுவும் பேசாம உள்ளுக்குள்ள கதைக்கிறத்துக்கு காதக்குடு" என்கிறான்.

அந்தக் காலத்துல நிலவு வெளிச்சத்தில வாசலில இருந்து நொடி சொன்னமாதிரி, விடுகதை, கடி ஜோக் சொன்ன மாதிரித்தான் இந்த நாட்டுலயும் பிள்ளைகள் சேர்ந்தால் விளையாடுங்கள். நாடுகள்தான் வேற, ஆனாலும் சிறுபராயத்து விளையாட்டு எந்த நாட்டுலயும் ஒரே மாதிரித்தான் இருக்கும்போல. அதைத்தான் இப்ப இங்கயும் பிள்ளைகள் செய்துகள். அவர்கள் திடீர் திடீரென விளையாட்டை மாற்றியிருக்கிறார்கள். விடுகதையிலிருந்து ஜோக்குக்கு மாறியவர்கள் இப்போது ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்த தமிழ் சொல்லுகளுக்கு அர்த்தம் கேட்கிறார்கள். இரண்டு பிள்ளைகளின் கேள்விக்குப் பிறகு மாமாவின் மூத்த மகள் கேட்கிறாள் -

"WHAT IS THE MEANING OF PANIYARAM?"

அப்பாவியாய் கேட்ட மூத்தவளை மற்றப்பிள்ளைகள் ஏய்..ஏய்..என்று வெருட்ட -

"WHAT?... MY MUM SAYING THIS SOMETIMES

மூத்தவள் சர்வ சாதாரணமாக சொல்லி முடிக்க இரண்டாவது பெட்டை தொடர்டகிறாள் -

"WHAT IS THE MEANING OF THE THEVADIYAL?"

"OH MY GOD! WHO TOLD YOU THIS?"

"MY MUM CALLS ME THIS SOMETIME"

"OH... THIS IS VERY BAD"

சக பிள்ளைகளும் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டுத்தான் கேட்கிறார்கள். அடுத்து மூத்தவள் தொடர்கிறாள் -

"WHAT IS THE MEANING OF THE PUN....?"

இந்தக் கேள்விய மற்றப் பிள்ளைகள் எதிர்பார்காதது போல அதிர்ச்சியில் கொஞ்ச நேரம் எவரும் எதுவும் பேசயில்ல. அறை நிசப்தமாகவே இருக்கின்றது.

"WHAT?"

மாமாவின் மூத்த பெண் தான் கேட்கிறாள் -

"THIS WORD IS EVEN WORSE THEN THE FIRST"

பிள்ளைகள் ஒருவர் பின்னால் ஒருவராக மாறி மாறி கேள்வி கேட்க பயந்து விட்டாள் மூத்த பெட்டை -

"I DON'T KNOW. I JUST HEARD THE TAMIL BOYS SAYING IT IN SOMESHOP"

"OH THIS IS VERY VERY RUDE"

நான் சுரேன பார்த்தன். அவன் உதட்டக் கடிச்சி தலையாட்டிக் கொண்டு இறங்க, நான் முதுகுப்பக்க சேர்ட்டப்பிடிச்சி இழுத்து "என்னடா எங்கடா போறாய்" எண்டன்.

"விடடா எங்கடா உண்ட மாமான். அவனிட்ட இண்டைக்கு நாலு கேள்வி கேட்காமல் விடுறயில்லடா..."

"டேய் ஆட்கள் வந்திருக்கிற இடம் பிரச்சினை பண்ணாத.. என்னடா கேட்கப்போறாய்..."

"நீ வளர்த்த தமிழ்ப் பயிர் விளைஞ்சி நிற்குது, வந்து அறுவடை செய்ஞ்சிகொள் எண்டு சொல்லப்போறண்டா"

சொல்லிற்று எனக்குமுன்னால ஓடி கீழ இறங்குனவன் அதே வேகத்தில் திரும்பி என்னைப் பார்த்து எதுவும் சொல்லாமல் அடக்கமுடியாமல் சிரிக்கிறான்..... தலையை சுவரில் முட்டி முட்டி சிரிக்கிறான்.

"டேய் என்னடா ஏனடா விசரன் மாதிரி சிரிக்கின்றாய்?..."

"டேய் தமிழ் தூணே சரிஞ்சி கிடக்குது, ஆரிட்டடா கேள்வி கேட்குறது?"

சொல்லிற்று மீண்டும் சிரிக்கத் தொடங்க...டேய்.. போடா போய் சாப்புடு என்றுவிட்டு நான் கீழே போய் பார்க்கிறேன். சவத்தை நிமிர்த்தி சாய்த்து வைத்தது போல் மாமா குறட்டை விட்டுக் கொண்டிருக்கிறார். சுரேன் சொன்னது போல் தமிழ் தூண் சரிந்துதான் கிடக்கின்றது.

0

# அப்பாவின் அறை

**நான்** அப்பா செல்லம், எனக்கு எப்போதுமே அப்பாவைப் பிடிக்கும். அவரின் பேச்சை சிரிப்பை எப்போதுமே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் போலவே இருக்கும்.

அதற்காக அம்மாவிற்கு என்னை ஒரேயடியாக பிடிக்காதென்றும் சொல்லிவிடமாட்டேன் ஆனாலும் தம்பி மேல் உள்ள விருப்பத்தை விட என்னில் அவவுக்கு விருப்பம் கொஞ்சம் குறைவுதான்.

அப்பா என்னில் பாசம் வைத்திருப்பதை பார்த்து பொறாமைப்படுவது போலத்தான் அவவின்ர நடவடிக்கையெல்லாம் இருக்கும்

அம்மா ஆறு சகோதரிகளோடு பிறந்தவவாம். ஆண் சகோதரர்களே கிடையாதாம்.

நான் வயிற்றில் இருக்கும் போதே பிறக்கப்போவது ஆண் குழந்தைதான் என்று நம்பி பெயர்களெல்லாம் எழுதி வைச்சிக்

கொண்டிருந்தாவாம். நான் பிறந்து அவவை ஏமாற்றியதில் அவவுக்கு என்னில் விருப்பம் கொஞ்சம் குறைவுதான்.

அப்பா அப்படியல்ல தம்பியும் நானுமென்றால் அவருக்கு உயிர்.

அம்மாவுக்கு என்னில் விருப்பம் குறைவென்பது அப்பாவிற்கு நல்லா தெரியுமென்பதால் அப்பா என்னில் எப்பவுமே இரட்டிப்பு அன்பு காட்டுவார்.

நான் தன்னுடைய அம்மா மாதிரியென்று அப்பா அடிக்கடி சொல்லுவார். அப்பாவின் சொந்தக்காரர் வீட்டுக்குப் போற நேரமெல்லாம் அவையளும் அப்படித்தான் சொல்லுவினம்.

அப்பா ஊரிலே இருந்து கொண்டுவந்த அல்பத்தில உள்ள அவர்ர அம்மாவின் கறுப்பு வெள்ளை படத்தை அடிக்கடி பார்க்கும் போதெல்லாம் என்னையும் நிமிர்ந்து பார்த்திட்டு -

"என்ரை அம்மா..." எண்டுகொண்டு என்ர நெத்தியக் கொஞ்சிவிடுவார்.

கொஞ்சம் பெருத்த உதடு, அடர்ந்த புருவங்கள், வட்ட முகமெண்டு அப்பம்மா போட்டவுல அழகாத்தானிருப்பா.

நான் பிறந்து வளர்ந்து இந்நாள் வரைக்கும், எனக்கென்று நான் ஆசைப்பட்டோ, அல்லது தான் ஆசைப்பட்டோ அம்மா எனக்கு எதுவும் வாங்கித்தந்ததில்லை. எல்லாமே அப்பாதான் வாங்கித் தந்திருக்கிறார்.

நான் நித்திரையான பின்பு வேலை முடிந்து வரும்போதும், நான் எழும்ப முன் அவர் வேலைக்கு போகும்போதும் அப்பா என் நெற்றியில் முத்தமிட்டுப் போவது எனக்குத் தெரியாமலில்லை. எனக்குத் தெரியும் என்பதை நான் ஒருபோதும் காட்டிக் கொண்டதுமில்லை. ஏனென்றால் என் நெற்றியில் விழுந்து கிடக்கும் தலை மயிரை மேலே தடவி எடுத்துவிடும் அப்பாவின் விரல்களின் பரிவு எனக்குப்பிடிக்கும்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாசனை உண்டென்பது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது. ஆனால் அப்பாவுக்கென்றொரு தனி வாசனை இருப்பதென்பதும், அது அடிக்கடி என் சுவாசத்தோடு கலக்கும் போதெல்லாம் நான் அப்பாவை நினைப்பதென்பதும் உண்மையே.

என்னோடும் தம்பியோடும் அப்பா வைத்திருந்த அன்பையும் அப்பாவில் நாங்கள் வைத்திருந்த அன்பையும் அம்மாவால் ஏன்தான் புரிஞ்சு கொள்ள முடியாமல் போயிற்றோ தெரியாது.

தண்ட பிழைகளை மறைக்க தான் சண்டைக்கு முந்திக்கொள்ள வேண்டுமென்றாப்போல அப்பா வேல முடிஞ்சி வீட்டுக்குள்ளே வரமுன்னமே அம்மா கத்தத் தொடங்க, அப்பா எங்கட முகத்துகள பாத்திட்டு எதுவும் பேசாம மேல போறத பார்க்க எனக்குப் பாவமாய் இருக்கும்.

எங்களுக்காக எல்லாத்தையும் பொறுத்துக் கொண்டதுதான் அப்பா விட்ட பிழையோ எண்டுகூட நான் இப்ப நினைக்கிறேன். இல்லையெண்டால் இப்ப இந்த நிலைமை வந்திருக்காதே.

என்னையும் தம்பியையும் கூட்டிக் கொண்டு அம்மா அங்கெல்லாம் போனதுதானே இதுக்கெல்லாம் காரணம்.

ஆரம்பத்துல அம்மா எங்களக் கூட்டிக்கொண்டு போனத அப்பா பெரிதாக எடுத்துக்கொள்ளாதத அம்மா தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, தன்ர போக்குல நடந்த நேரம்தான் அப்பாவும் மெதுவா கவனிக்கத் தொடங்கினார்.

நாளடைவில் என்னையும் தம்பியையும் கூட்டிக்கொண்டு அங்கெல்லாம் அம்மா போய்வரும் ஒவ்வொரு நாளிலும் வீட்டிலிருந்த சாமிப்படங்களும், கடவுள் சிலைகளும் ஒவ்வொன்றாக தலைமறைவானதுதான் அப்பாவின் கோபத்தைத் தூண்டிவிட்டது.

நானும் தம்பியும் எப்பவுமே ஒரு அறையில்தான் தூங்குவோம். எனக்கும் தம்பிக்கும் ஒரே சண்டைதான். எனக்கு தனியறை

வேணுமெண்டு ஒரு நாள் நான் கேட்டபோது இப்போதைக்கு முடியாதம்மா கொஞ்ச நாள் போக பெரிய வீடாக வாங்கும் போது உனக்கு கட்டாயம் தனியறையொண்டு கிடைக்குமென்று அப்பா அன்பாகச் சொல்லி என்னை சமாதனப்படுத்துனார்.

இதையே அம்மா அவவின் பாசையில் சொல்லி என்னை அதட்டும் போது எனக்கு அவவில் கோவம் கோவமாக வரும்.

என்னதான் சமாதானம் சொன்னாலும் எனக்குள்ளிருந்த தனியறை ஆசை நாளுக்கு நாள் கூடிக் கொண்டுதான் போய்ச்சி.

எனக்கொரு தனியறை கிடைத்தால் அதை எப்படி வைத்திருக்க வேண்டும், என்னென்ன சமான்களை எங்கெங்கு வைக்கவெண்டும் என்ற கற்பனையிலே எனது ஒவ்வொரு நாள் தூக்கமும் கழிந்தது.

ஒரு நாள் அப்பா வேலை முடிஞ்சி வந்த நேரம் முன்னறையில் இருந்த ஆட்கள் பார்த்துச் சிரிக்க, அப்பா பதிலுக்கு எதுவும் சொல்லாம மேல போனதில அம்மாவிற்கு ஆத்திரம். கீழ வந்து அவையளோட கதைக்கச்சொல்லி அம்மா எத்தினதரம் கேட்டும் போகமறுத்திட்டார். வந்தவையளும் இருந்து பார்த்திட்டு திரும்பவும் ஒரு நாளைக்கு வாறமெண்டிற்று போயிற்றினம்.

''வீட்டுக்கு வந்தவையளோட ஒரு வசனம் கதைக்க வேணுமெண்டுற நாகரீகம் தெரியாதுகளோட நான் வாழவேண்டி இருக்கே''யெண்டு அம்மா தொடங்கிற்றா.

"இஞ்சபாரும் இவையள் வரவேணுமெண்டு நான் எதிர்பார்கவுமில்ல, இவையள வரச்சொல்லி நான் வட்டாவைக்கவுமில்லை. இதெல்லாம் வேலயில்லாததுகளின்ர பொழுது போக்கு... என்னை விடும்" எண்டார் அப்பா.

''என்ன...? கடவுள் இருக்கிறார்..., இவர்தான் கடவுள் எண்டு சொல்லுறதும், அத மற்றவையளுக்கு புரிய வைக்கிறதும் பொழுது போக்கு வேலையே...?" எண்டு முகத்த திருப்பி கோபத்தோட கேட்டா அம்மா.

''பின்னே என்ன... கொஞ்சநாள் ஆத்ம ஞானம் சற்சங்கமெண்டெல்லாம் சொல்லிக்கொண்டு சம்மானத்தில் இருந்தீர். பிறகு ஆச்சுவேய் என்றும், ஈஸ்ட்ஹாம் எண்டும் கோயில் கோயிலாக அலைஞ்சீர், அதுக்குப் புறகு புட்டபர்த்தி வரைக்கும் என்னை இழுத்துக் கூட்டிக்கொண்டு போய் அலைக்கழிச்சீர். இப்ப என்னடா என்டால் இன்னொரு கடவுள காணப்போறனெண்டுறீர். அது சரி இத்தன கடவுளையும் கண்டு என்னதான் கேக்கப்போறீர்..." எண்டு சத்தம் போட்டார் அப்பா.

நானும் தம்பியும் பயந்து போய் பார்த்துக்கொண்டு நிண்டம். எனக்கு ஒண்டுக்கு பெய்ய வேணும்போல இருந்திச்சி.

''என்னத்த கேக்குறது...... நாம செய்ஞ்ச பாவங்கள தீக்கச் சொல்லித்தான் எண்டு அம்மா சொல்லி முடிக்கமுன்ன-

"பொத்தடி வாய..." என அப்பா பெரிய சத்தம் போட்டார்.

"ஆருடி பாவம் செய்தது?... பாவமென்டா என்னென்டு தெரியுமே உனக்கு.. கொலை செய்யுறது, கொள்ளையடிக்குறது, குடிச்சி வெறிக்கிறது, விபச்சாரம் செய்யுறது, புருசனுக்கு பொஞ்சாதியும் பொஞ்சாதிக்கு புருசனும் நம்பிக்கை துரோகம் செய்யுறதும் தாண்டி பாவம். இதுகள்ல எந்தப்பாவமும் நான் செய்யயில்ல... எனக்குத் தெரியாம இப்படிபட்ட பாவங்கள்ல எதயெண்டாலும் செய்திருந்தால் நீ கட்டாயம் அவயளுக்கு பின்னாடி போகத்தான் வேணும்.... நீ போறதெண்டால் போ என்னை விடு"எண்டுபோட்டு அப்பா அறைக்கே போயிட்டார்.

அதுக்குப்புறகு அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஒவ்வொரு நாளும் சண்டைதான்.

நான் எங்க போனாலும், வந்தாலும் அதப்பற்றி பேசவோ தடுக்கவோ உங்களுக்கு எந்த உரிமையுமில்ல எண்டு சொன்ன நாளோட அப்பா வீட்ட விட்டுப் போயிற்றார்.

இப்ப எனக்கு தனியறை கிடைச்சிருக்கு.... தனி மேசை கதிரை,

மேசைமேல எனக்கெண்டொரு கொம்பியூட்டர், எனக்கெண்டொரு ரேடியோ, என்ரை உடுப்புக்கள வைச்சிக்கொள்ள அலுமாரி எல்லாமே என்னுடைய அறைக்குள்ளே இருக்கு.

ஆனால் அப்பா தான் வீட்டில் இல்லாமல் போய்விட்டார்.

அண்டைக்கொரு நாள் கூட பள்ளிக்கூடத்து வகுப்பறையில் நிக்கிறன் திடீரென அப்பாட வாசனை மாதிரி உணர திரும்பிப் பார்க்குறன் அப்பாதான் என்னை பார்க்க வந்து நிற்குறார். திடீரென என்னைப் பார்க்கவேணும் போல இருந்ததாம் வந்திட்டாரம் என்றார்.

இன்னொரு நாள் நித்திரை கொண்டிருந்த நேரம் அப்பாட கார் வாறாப்போல இருக்க எழும்பி ஜன்னலால் பார்த்தால் அப்பாட கார்தான் வீட்டுக்கு முன்னால் தெரியுது.

ஏனோ தெரியாது நான் நினைக்கிறபோதுதான் இதெல்லாம் தற்செயலாக நடந்ததா அல்லது இதெல்லாம் நடக்கும் போதுதான் நான் நினைக்கிறேனா என்கிறதெல்லாத்தையும் என்னால அறிய முடியாமல்தான் இருக்குது. அப்பாக்கிட்டையும் இதைப்பற்றிக் கேட்டேன். அப்பா சிரித்துக் கொண்டே என்னுடைய நெத்தியத் தடவி விட்டார்.

அப்பாட அறையில்தான் நான் இப்போது தூங்குவதும் இருப்பதும் படிப்பதும், அம்மாவும் தம்பியும் மற்றொரு அறையில் படுத்துக்கொள்ளினம். இரவெல்லாம் அம்மா தம்பிக்கு கதை சொல்லி சிரிக்கும்போது, நான் தனியே அப்பாவைப்பற்றியே யோசிச்சிக் கொண்டிப்பன்.

சனி, ஞாயிறு இரண்டு நாளும் அப்பா எங்கள தன்னோடு கூட்டிப்போய் வைத்திருந்துவிட்டு கொண்டுவந்து விடுவார். அந்த நேரத்தில் அப்பாவை பார்க்க பாவமாய் இருக்கும். எங்களை விட்டு விட்டுப் போகும்போது, நாங்கள் ஒருவரையொருவர் திரும்பிப் பார்த்துக் கொள்வோம். எனக்குள்ளிருந்து எதையே பிய்த்து உருவி

எடுக்குறாப்போல இருக்கும். இதுக்குமேல அந்த வேதனைய எனக்குச் சொல்லத்தெரியல, பெரியாக்களாய் இருந்தால் விளக்கமாய்ச் சொல்லுவாங்கள் போல.

அண்டைக்கு அப்பா அம்மாவிடம் சொன்னது எனக்கு இப்பவும் நினைவிருக்கு. அப்பா சொன்ன பாவங்கள்ல அம்மா என்ன பாவம் செய்திருப்பா என்கிறது எனக்கு இன்னும் தெரியாது. சிலவேளை அப்படிப்பட்ட பாவங்கள் என்ன மாதிரி எண்டு எனக்குப் புரியக்கூடிய வயசில்லையோ தெரியல்ல.

அந்த வயசு வரும்போது அம்மா செய்த பாவம் என்ன எண்டுறத நான் அறியக்கூடும்.

அப்பா வீட்டவிட்டு போனது எனக்குப் பெரிய கவலை. நான் தினமும் அப்பாவ நினைச்சி அழுறது யாருக்குமே தெரியாது.

இந்த அறையில் நிறைஞ்சிருக்குற அப்பாவோட வாசனை எப்போதும் என்ர சுவாசத்தோட கலந்திருக்கு. என்ர மேசையில இருக்கிற போட்டோவில் அப்பா என்னைப் பார்த்துச் சிரிச்சிக் கொண்டிருக்கிறார்.

யாரெல்லாம் வீட்ட வந்ததால அப்பா வீட்டவிட்டு போக நேர்ந்ததோ அவையள் இப்ப அடிக்கடி வீட்டுக்கு வந்து அம்மாட்ட சொல்லுகினம் - "கவலைப்படாதே..., கடவுள் இருக்கிறார்..., உனது கணவன் மீண்டும் வீட்டுக்கு வர அவர் துணைபுரிவார்..." என்று. அவியள் இப்படிச் சொல்லுறதக் கேட்டு இப்பெல்லாம் நான் எனக்குள்ளேயே சிரிச்சிக் கொள்ளுறன்.

அப்பா வீட்டில் இல்லாதது எனக்குப் பெரிய கவலைதான். என்டாலும் எனக்கு தனியறை கிடைச்சிருக்கே. அதுவும் அப்பாவின் அறை கிடைச்சிருக்கே அதுவும் சந்தோசம்தான்.

0

# பிறிதொரு துச்சாதனம்

**என்னதான்** இருந்தாலும் பாஞ்சாலியும் ஒரு பொம்புளைதானே. பொண்ணாப் புறந்த ஒருத்திக்கு இந்தளவு சோதனைகள் வந்திருக்கக்கூடாது. அவளும் எத்தனையத்தான் பொறுத்துக் கொள்ளுற.

குந்திக்கு எப்பயும் குந்துன குந்தும் யோசினையும்தான். பின்னென்ன? அவ செய்ஞ்ச வேலைக்கு யோசினை இல்லாமலோ இருக்கும்.

ஆத்தங்கரைக்குப் போனா கூட்டாளிப்பொட்டையளோட குளிச்சி முழுகி விளையாடிப்போட்டு வரவேண்டியதானே. அத உட்டுப்போட்டு சூரியன் வந்து ஒரு மந்திரத்த சொல்லிப் போட்டுப்போனா அத இவ ஏன் சொல்லிப் பார்த்து விளையாடோணும்...?

இந்தக் காலத்து புள்ளையள் மற்றாக்கள்ற பாஸ்வேர்ட்டக் கண்டு புடிச்சி வெப்சைட்டுக்க போற மாதிரி இவவும் மந்திரத்தச் சொல்ல வகுத்துல புள்ளையும் வந்திருக்கு.

புள்ளயப் பெத்து, பொட்டியில போட்டு, ஆத்துல மிதக்க உட்ட நாள்ல இருந்து தொடங்குன யோசனைதான், இண்டு வரைக்கும் தீந்தபாடில்ல.

இப்படியே யோசிச்ச மாதிரி, குந்தி குந்திக் கொண்டிருந்த ஒரு நாள் பொழுதுலதான் தம்பிமாரோட காட்டுக்கு வேட்டையாடப்போய் வந்த தருமன்,

"அம்மோ, நாங்க ஒரு கனி கொண்டாந்திருக்கம்மம்மோ" என்டு சொல்ல, யோசினையில இருந்த தாய்க்காரி குந்தியும், கொண்டாந்தா என்ன? அண்ணன், தம்பி அய்ஞ்சி பேருமா அடிபுடிப் படாம பங்கிட்டுத் தின்னுங்கோவன் என்டிற்றா.

சில வேளை தருமன் கன்னி எண்டு சொன்னதுதான் குந்திக்கு கனி எண்டமாதிரி கேட்டிச்சோ என்னவோ?

சரி அம்மைதானே சொல்லிற்றா இனி என்னெண்டுபோட்டு அண்ண், தம்பிமார் அய்ஞ்சி பேரும் பாஞ்சாலிய பொண்டாட்டியாக்கிற்றாங்கள்.

இப்படி யொரு விசயம் நடந்திற்றே எண்டு கேப்பார் பாப்பாரில்ல. சரியான முறைக்கு சொல்லுறதெண்டா இத எதிர்த்து ஒரு பெரிய ஆர்ப்பாட்டமே நடத்திருக்கவேணும். அப்பிடியொண்டும் நடக்காததாலதானே இண்டைக்கு நடுச்சபையில வைச்சி புடவையுரியுற கட்டத்துக்கு பாஞ்சாலிய கொண்டாந்திற்றாங்க.

அந்தக்காலத்துல பெண்ணியம் பற்றி கதைக்கிறத்துக்கோ, பெண்ணுரிமைக்காக போராடுறத்துக்கோ இல்லாம, ஏதும் மாதர் சங்கங்கள் எண்டாலுமோ இருந்திருக்கையில்லப்போல. இருந்திருந்தா நாட்டுல உள்ள பொண்டுகள் எல்லோரும் சேர்ந்து நடு வீதியில சக்கப்பணியக் கிடந்து யானைப்படையையும், குதிரைப் படையையும் போக உடாம மறியல் போராட்டம் செய்திருப்பினம்.

அரண்மனைக்குள்ள போய் மகாராசவுக்கு பக்கத்துல நிண்டு சாமரம் விசிக்கி உடுற பொண்டுகளும், அந்தப்புரத்துல மகாராணிமாருக்கு

கால் கை அமுக்கி உடுற பணிப்பொம்புளயள் எல்லாருமா சேர்ந்து பாஞ்சாலிக்கு நியாயம் கிடைக்கும் மட்டுக்கும் அரண்மனைக்கு வேலைக்கு வரமாட்டமெண்டு வேலை நிறுத்தத்துல ஈடுபட்டிருப்பாளுகள். அதுவுமில்லாட்டிப்போனா அரச சபையில காவலாளிகளாகவும், போர்வீரர்களாகவும் வேலைபாக்குற புருசமார்ர உறைவாளையும், நெஞ்சிப்பட்டியயும் எடுத்து மறைச்சி வைச்சிற்று ஏலுமெண்டா வேலைக்குப் போங்கவன் பார்ப்பமெண்டு வெருட்டியிருப்பாளுகள்.

அப்படியொண்டும் நடக்காததாலதான் இண்டைக்கு பாஞ்சாலி பலபேர்கூடின சபை நடுவுல, குளிக்கப்போனவளுக்கு தண்ணியக் கண்டு கூதல் கொடுகுன மாதிரி தலைவிரிகோலத்துல கையால நெஞ்சில புள்ளடி போட்டுக்கொண்டு பயந்து நடுங்கி நிக்கிறாள்.

பாஞ்சாலி நினைச்சிருந்தாக்கூட பல கேள்விகளக் கேட்டிருக்கலாம் - பொன்னவைச்சி, பொருளவைச்சி, ஊட்டவைச்சி, நாட்டவைச்சி சொத்துபத்து அத்தினையையும் வைச்சி சூதாடுனீயள். நான் எதுவும் கேட்டனோ? கேக்கேலாது. ஏனெண்டா, அது உங்கட சொத்து பத்து ஆதினம், ஆனா... என்னய வைச்சி ஆட உங்களுக்கெல்லாம் என்ன உரிமையிருக்கு எண்டும் கேட்டிருக்கலாம்.

இல்லாட்டிப்போனா இப்படியுங்கூடக் கேட்டிருக்கலாம் -

நான் தனிப்பட்ட மனிசி. எனக்கும் தனிமனித சுதந்திரம் இருக்கு. உங்க அய்ஞ்சி பேருக்கும் பாய் விரிச்சனெண்ட பேரெடுத்ததுக்கு நீங்க தந்த பரிசு இதுதானோ?

இப்பிடியெண்டுமட்டுமில்ல, ஏன் என்னய வைச்சி ஆடுன நேரம் கொம்மைய வைச்சி ஆடியிருக்கலாமே எண்டும் கூட அவள் கேட்டியிருக்கலாம்.

ஆனா கேக்கயில்ல.

ஏன் கேக்கயில்ல?

ஏனெண்டா- பாண்டவர் பொண்டாட்டி பலபேர் மத்தியில பல்லுல நாக்கப்போட்டு நறுக்கெண்ட மாதிரி நாலு கேள்வி கேட்டிற்றாளாமெண்டு நாளைக்கு நாலு சனம் சொன்னா அந்த அவமானம் தாங்க ஏலாம அய்ஞ்சி பேரும் நாக்கத் தொங்கப் போட்டுக்கொண்டு தூக்குல தொங்கிற்றாங்களெண்டா, அந்த கொலைப்பழியும் தன்னில வந்திடுமே எண்ட பயத்துலதான் பாஞ்சாலி எதுவும் பேசயில்ல.

துச்சாதனன பார்க்குற நேரமெல்லாம் ஈரக்குலை ஆடுறாப்போல இருக்கு பாஞ்சாலிக்கு.

"அண்ணே... அண்ணே... நான்தானண்ண புடவையுரியணு"மெண்டு முட்டாசி போத்தலக் கண்ட கடையடிப் பொடியன் கேக்குறாப்போல கேக்க, "உனக்கில்லாமலோடா உண்ட விருப்பண்டா தம்பி"யெண்டு துரியோதனன் சொன்ன சந்தோசத்துல துச்சாதனன் துள்ளிக் குதிச்சிக் கொண்டிருக்கிறத பார்க்கப் பார்க்க, காளி கோயிலுல தீ மிதிக்க மஞ்சள் குளிச்சிற்று நிக்கிற பொண்டுகள்ற உடம்பு நடுங்கிறாப் போல நடுங்குது பாஞ்சாலிக்கு.

கையோட கையத்தேச்சி பிசைஞ்சி சிரிச்சிக் கொண்டு சரிவு 'போசுல' துச்சாதனன் நடந்து வந்து நெருங்குறான். கறண்டுக் கம்பியத் தொடப்போறாப்போல பாஞ்சாலி நடுங்குறாள், துச்சாதானன் முன்னால நடந்துவாறான். கிட்டவந்திற்றான், புடவை முந்தானைய தொட்டுற்றான்.

தொட்டதுதான் தெரியும் முள்ளுச் சிராய் குத்தி துள்ளிக் குதிச்சாப்போல 'ஆய்....', 'ஆய்...' எண்டு கத்திக்கொண்டு கைய உயர்த்தி அண்ணாந்து பார்த்து-

கண்ணா...!
ஆவி பதறுதய்யோ - எந்தன்
ஆவி பதறுதய்யோ
பாவி இவன் எந்தன்
தேகம் நெருங்கி வந்து

மானம் போகச் செய்ய - எந்தன்
புடவை யுரியக் கண்டு
ஆவி பதறுதய்யோ - எந்தன்
ஆவி பதறுதய்யோ.

அண்ணாந்து பார்த்துக் கத்திக் கொண்டிருந்த பாஞ்சாலி கண்ணத் துறந்தா, முகட்டு வளையில கண்ணன் புடவை மூட்டையோட குந்திக் கொண்டிருக்கான்.

தலையில அழகான தங்கமுடி தகதகக்குது. புடரியில நல்ல வெளிச்சத்தோட சக்கரம் சுத்துது. கையில புல்லாங்குழல், கவலைப்படாத, நான் இருக்கிறன் என்றாப்போல சிரிச்சிற்று பக்கத்துல இருக்குற புடவை மூட்டையை தொட்டுக் காட்டுறான் கண்ணன்.

கண்ணனுக்கு புடவைக் கென்ன பஞ்சமோ? பொம்புளப் புள்ளயள் குளத்துல குளிக்கப் போற நேரமா பார்த்து ஒட்டி ஒழுஞ்சி போய் பிள்ளைகள் குளிக்கிற அழகையெல்லாம் பார்க்கும் மட்டும் பார்த்துப்போட்டு, கடைசியில் அந்தப் புள்ளயல்ற புடவை எல்லாத்தையும் களவெடுத்துக் கொண்டு ஓடி வந்தா கண்ணனுக்கிட்ட நிறையப் புடவைகள் இருக்கத்ததானே செய்யும்.

இந்தக் கண்ணன் செஞ்ச களவுக்கெல்லாம் அந்த வயசுல கண்ணனை கொண்டுபோய் சீர்திருத்தப்பள்ளியில விட்டிருக்கோணும். ஆனா ஆருமே அதச் செய்யயில்ல.

"கண்டவ நிண்டவள்ற ஊட்டுக்குள்ளயெல்லாம் போய் தயிரையும் வெண்ணெய்யையும் இப்பிடிக் களவெடுத்துத் தின்னுறயே, உன்னால எனக்கு வெளியில தலைகாட்டமுடியாம இருக்கேடா..." எண்டு தாய்காரி ஒருக்கா அடிச்சதுக்கே வாயத் துறந்து வாய்க்குள்ளே உலகத்த காட்டிப் பயம் காட்டினத்தோட தாயும் கண்டுகொள்ளாம உட்டிற்றா.

ஒள்ளமெண்டா, உலகத்த காட்டிடுவானெண்ட பயம் யசோதைக்கு.

என்னதான் இருந்தாலும் இண்டைக்கு துச்சாதனன் பாஞ்சாலிர புடவைய உரிஞ்சி மானபங்கப்படுத்துறான் எண்ணக்கோள கைகுடுக்க - புடவைகுடுக்க வந்திருக்கானெண்டா கண்ணனக் கையெடுத்துக் கும்புடத்தான் வேணும்.

பாஞ்சாலி உடுத்தியிருந்த புடவையை துச்சாதனன் உரிஞ்சி முடியப்போன கட்டம் பார்த்து மேல இருந்து கண்ணன் புடவைய கீழ உட "கண்ணா..." எண்டு கத்திக்கொண்டே புடவைய புடிச்சி தன்னில சுத்த அதையும் புடிச்சி இழுக்குறான் துச்சாதனன்.

ஒண்டோட ஒண்ட முடிச்சி புடவைகள கண்ணன் நீளமாக கீழ உட்டுக்கொண்டே இருக்க, துச்சாதனனும் இழுத்துக் கொண்டே இருக்கிறான்.

எண்ட புரிசன் பார்க்காத உலகத்த நான் பார்க்க வேண்டியதில்லை எண்டு சொல்லி தண்ட கண்ணுக்கும் கறுப்புச் சீலை கட்டிக்கொண்ட காந்தாரி, நல்ல வேளை கண்ணக் கட்டி மறச்சன். இல்லயெண்டா இந்தக் கறுமத்தையெல்லாம் பார்க்கவேண்டி இருந்திருக்குமே எண்டு நினைச்சிக் கொண்டிருப்பாளாக்கும்.

சீலை மறைப்புல நிண்டு தண்டபாட்டுல சுத்திக் கொண்டே கண்ணா, கண்ணா எண்டுகத்துறாள் பாஞ்சாலி.

மேல இருந்து புடவைகள உட்கொண்டேயிருந்ததுல கண்ணன்ட கைபுசமெல்லாம் நோவெடுத்திற்று.

சிம்மாசனத்துல இருந்து கொள்ளேலாம சந்தோசத்துல துள்ளிக்குதிக்கிறான் துரியோதனன்.

பொண்டாட்டிய வைச்சி சூது விளையாடுனவனெல்லாம் ஒரு ஆம்பிளையாடா? எண்டு கேக்குறாப்போல கர்ணனுக்கு ஒரு நக்கல் சிரிப்பு.

பூமி புழந்து அதுகுள்ள இறங்கி மறைஞ்சிரக்கூடாதோ எண்ணுறாப்போல பாண்டவர அவமானம் போட்டு கூனிக்குறுக்குது.

கண்ணன் உட்டு கொண்டேயிருந்த சீலைய இழுத்துக்கொண்டே இருந்த துச்சாதனன் அண்ணாந்து பாக்குறான்.

சிலைக்குவியல் மலை உயரத்துல இருந்ததக் கண்டு மயங்கி உழுந்திட்டான் துச்சாதனன்.

அதுகும் ஒரு வகையில நல்லதுக்குத்தான். ஏனெண்டா, கண்ணன்ட கையிலையும் இருந்தது கடைசி ஒரு சீலைதான். துச்சாதனன் மயங்கி உழுந்திருக்கையில்லையெண்டா பாஞ்சாலிர நிலைமை என்னாயிருக்கும்.

தட்டாமாலை சுத்துறாப்போல சுத்திக்கொண்டிருந்த பாஞ்சாலிக்கும் தலை கிறுகிறுக்கிறாப்போல வந்து மயங்கி உழப்போனவளை பார்த்துக்கொண்டிருந்தவையள் ஓடி வந்து தாங்கிப் புடிச்சிக் கொள்ளுறாங்க.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்து முடிந்தது. எது நடக்கவிருக்கின்றதோ அதுவும் நன்றாக நடக்கும். என்று கொண்டு கண்ணன் வந்த நேரம் புடரியில கொழுவியிருந்த சக்கரம் நல்லா பாஸ்டாகத்தான் சுத்திச்சி. முகட்டுல இருந்து கண்ணன்ட தலையில பூவெல்லாம் கொட்டுது.

கலைஞ்சி கிடந்த தலைமுடிய இன்னும் விரிச்சிக் கலைச்சிற்று. மயங்கிக்கிடக்கிற துச்சாதனனுக்கிட்டப்போய் குனிஞ்சி பார்த்துச் சொல்லுறாள் பாஞ்சாலி-

"டேய் துச்சாதனா என்னைய ஆரெண்டு நினைச்சிக்கொண்டு என் புடவைய உரிஞ்சாய்?.. என்னைய சின்ன ஆளெண்டு நினைக்காதை. அய்ஞ்சி பேர்ர பத்தினிடா நான், ஒண்டுக்கு அய்ஞ்சி புருசன்கள் வைச்சிருக்கண்டா நான். அவங்கள்ல ஒருத்தனக் கொண்டு உன்னையச் சாக்காட்டி, உண்ட நெஞ்சில இருந்து பீறிட்டுப்பாயுற ரெத்தத்துல தோய்ச்சித்தாண்டா நான் எண்ட தலைமுடிய முடிஞ்சி கட்டுவன் அதுவரைக்கும் விரிகூந்தலாகத்தாண்டா திரிவன் இது சத்தியம்... சத்தியம்... சத்தியம்..."

பாஞ்சாலி ஆவேசமாக கத்துன கத்தப்பாத்துட்டு எல்லாரும் கலைஞ்சிற்றாங்கள்.

பாஞ்சாலிக்கு சுத்துன களைப்பு, கண்ணனுக்கு சீலைய உட்டகளைப்பு, துச்சாதனனுக்கு இழுத்த களைப்பு.

களைப்பு போகட்டுமெண்டு ஆளாளுக்கு கால் போத்தல் வாங்கி அடிப்மெண்டு வந்தவையளுக்கு கொஞ்சம் ஓவராய் போனதால முதலுல பாஞ்சாலிதான் கொஞ்சம் தள்ளம்பாறத் தொடங்கிற்றாள்.

தனிய போக உட்டா வெறியில தள்ளாடி வேலிக்கம்பில புடவைய கொழுவஉட்டு பிய்ச்சிப் போடுவாளேயெண்டு கண்ணனும், துச்சாதனனும் பாஞ்சாலிர தோள்பட்டையில் ரெண்டு பக்கமும் கையப்போட்டு ஏந்தி நடத்தித்தான் கூட்டி வந்து வாசலுல உட்டாங்க.

மூண்டு பேரும் வாசலுல நிக்கிறதக் கண்ட சுபத்திரா குடிலுக்குள்ள இருந்து தலைய மட்டும் வெளிகாட்டி இஞ்ச ஒள்ளம் வாவனெண்டு கண்ணாலையும் கையாலையும் சைகை காட்டி கூப்புட ஒழும்பிப்போய் பாஞ்சாலி குடிலுக்குள்ள உள்ளிட்டு மறைய குடில் கதவும் 'சடா'ரெண்டு சாத்துப்பட்டிச்சி.

குடிலுக்குள்ளிட்ட பாஞ்சாலிய நேருக்கு நேரா பார்த்ததுமே, சுபத்திராட கோபம் இன்னும் கூடி பத்திரகாளி உருவந்தவள் போல அவள் முதல் பாய்ஞ்சி புடிச்சது பாஞ்சாலிர முந்தானையத்தான்.

சுபத்திரா இழுத்த இழுவைக்கு பாஞ்சாலியால ஈடுகுடுக்கேலாம ரெண்டு சுத்து சுத்த மூண்டாவது சுத்துக்கு சீலை சுபத்திராக்கு கைமாறிற்று. இப்ப பாஞ்சாலி மேல்சட்டையும், உள்பாவடையுமோட மட்டும் நிற்கிறாள். விரிகூந்தலக் கவனிச்ச சுபத்திரா ஓடிப்போய் முடியப் புடிக்க முற்பட சடக்கெண்டு முன்னால குனிஞ்ச பாஞ்சாலிர மார்புக்கூர் சுபத்திராட நெத்தியில பட "எண்ட அம்மோ!..." எண்டு நெத்தியப் பொத்திக்கொண்டு, பாய்ஞ்சி பிய்ச்ச பிய்ச்சல்ல பாஞ்சாலிர மேல் சட்டை முன்பக்கம் பிய்ஞ்சி சுபத்திராட கையோடவர சட்டைக்குள் இருந்த சிரட்டைமுலை கழண்டு நிலத்துல கிடக்குது.

பூட்டுன குடிலுக்குள்ள ஓட்டப்போட்டி நடக்குறாப்போல, நடுவுல தொங்குற ஏணையச் சுத்திச் சுத்தி ஆளையாள் துரத்தக்கோள பாஞ்சாலிர தலை முகட்டுல தட்டுப்பட, முகட்டு வளையில இருந்த ஆணியில தலைமுடி கொழுவி அது தலையில இருந்து கழண்டு வளையில தொங்க பாஞ்சாலி மொட்டைச்சியாயிற்றாள்.

தொங்குற முடிய கழட்ட எட்டியெட்டி பாஞ்சாலி உன்னுறாள்.

சுபத்திராவுக்கு பாஞ்சாலிர பாவாடை இடுப்பு இழுசுருக்கு நாடாவுலதான் கண். எப்பிடியாகுதல் அதப்புடிச்சிழுத்து பாவடையை அவுட்டுடோணுமெண்டுதான் அவள்ற அடுத்த திட்டம்.

மெது மெதுவாக நடந்து, தும்பி புடிக்கிறாப்போல விரலக் கொண்டுபோய் இழுசுருக்கு நாடாவ புடிச்சிளுக்க, திரையுளுந்தாப் போல பாவாடை கழண்டுழ லங்கோடோட நிக்காள் பாஞ்சாலி- இல்ல.. எல்லாம் கழண்டு கலைஞ்சாப்புறகு இனியுமென்னெண்டு பாஞ்சாலி எண்ணுற... பரமக்குட்டி எண்டு சொல்லுறதான் சரி.

கழண்டுழுந்த பாவாடையை எடுக்கக் குனிஞ்ச பரமக்குட்டிய சட்டெண்டு தள்ளியுட்டுப்போட்டு, டவக்கெண்டு பாய்ஞ்சி பாவாடைய அப்பி அள்ளி நெஞ்சோட அணைச்சிக்கொண்டு வெளியால வந்து திண்ணையில இருந்து பாவாடைய விரிச்சி உயர்த்திப் பார்த்தவள்.

"கண் கெட்டுப் போயிருவாய்.. அத்தா பத்தி பாவாடை.... ஒண்டே ஒண்ட வைச்சிருந்தன். அதையும் கூத்துக்குக் கட்டி கந்தலாக்கிக் கொண்டு வந்திருக்கயே...! நீ நல்லா இருப்பயோ...?"

தகப்பண்ட அரிதாரம் பூசுன முகத்தக்கண்டு ஏணைக்குள்ள கிடந்த ஆம்பிளப் புள்ள கெக்கலம் கொட்டிச்சிரிக்கிது,

"மூண்டு நாளா புள்ளை மூச்சுட ஏலாமக்கிடந்து கயிற்றப்படுகுது. சரி இண்டைக்காதல் கலவைக்கு கொண்டு போகலாமெண்டு அங்க இஞ்ச கடன தனிசப் பட்டுற்று புடவையுடுக்க பாவாடையத் தேடுனா

அத இந்த கண்கெடுவான் கொண்டு போய் உடுத்துக் கூத்தாடி, அந்திலி சிந்திலியாக்கிக் கொண்டந்திருக்கானே...! வேசம் கட்டி கூத்தாடுறாராம் கூடத்து... திண்டுக்க சோத்துக்கு வக்கில்ல, உடுத்துக்க நல்ல துணியில்ல, உனக்கு கூத்துதான் இப்பகுறைச்சல்... இனி ஆடிப்பார்... ஆடினயெண்டா நித்திரைக் கண்ணுல உண்டகால வெட்டுறனோ இல்லையோ பார்..."

சொல்லிற்று செத்தையில் குத்தியிருந்த ஊசி நூல எடுத்து பாவாடை பீய்த்தல தைக்கத் தொடங்கிற்றாள் சுபத்திரா.

பொஞ்சாதிர ஏச்சும் பேச்சும் வாசலுல நிண்டாக்கள்ற காதுல உழுந்திருக்குமோ எண்டுற அவமானத்துல செத்தை ஒட்டைக்குள்ளால கண்ண உட்டுப் பார்க்கிறான் பரமக்குட்டி.

தோள்ல கை போட்டுக்கொண்டு துச்சாதனனும் கண்ணனும் ஒழுங்கைக்குள்ளால நடந்து பொறது தெரியுது. கண்ணன்ட புடரியில சுத்துன சக்கரத்துர மோட்டாருக்குப் போட்டிருந்த எவரெடி பற்றரி, சார்ச் இறங்கிற்றோ என்னமோ? சக்கரம் சுத்துற மாதிரி தெரியயில்ல.

உதட்டுச்சாயம், முகத்துல அரிதாரம், மொட்டை, லங்கோடு, காலுல சலங்கை... தன்னைப்பார்க்கும் போது தனக்கே சிரிப்பாயிருந்திச்சி பரமக்குட்டிக்கு.

வறுமைத் துச்சாதனின் துகிலுரிப்பில் உள்பாவாடைக்கு வழியில்லாமல் போனதால் பீய்த்தலை தைத்துக்கொண்டே இருக்கின்றாள் சுபத்திரா.

0

## கடல் பேசுகிறது...

நெடுங்கதை



**இதுவரைக்கும** எதுவும் கதைக்கிறயில்லெண்டுதான் இருந்தன். கதைக்கிறவயள் கதைக்கட்டும், நமக்கேன் பொல்லாப்பெண்டுதான் கதைப்பார் கதைக்கிறதெல்லாத்தையும் காது குடுத்துக் கேட்டுற்று வாய்ப் பொத்திக்கொண்டிருந்தன். எண்டாலும் ஏலாமத்தானே இருக்கு. எத்தின நாளைக்கெண்டுதான் கதைக்கிறதையும் நடக்கிற புதினங்களையும் பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் இருக்க முடியும்? அதனாலதான் எண்ட நெஞ்சில பொத்தி வைச்சதெல்லாத்தையும் சொல்லுவமெண்டு நினைக்கிறன்.

வருசமும் ஒண்டாகப் போகுது. கண்டவன், நிண்டவன், வந்தவன், போனவனெல்லாம் வாய்க்கு வந்த மாதிரியெல்லாம் கதைச்சிற்றானுகள். இனியெண்டாலும் நான் வாய் திறக்கல்லெண்டா உள்ள மரியாதையும் போயிருமெல்லோ?

உலகத்துல இண்டு வரைக்கும் நான் பல நாடுகள பார்த்திருக்கன்.

எத்தினையோ மொழிகளையும் அறிஞ்சிருக்கன். அதனால மொழிப்பிரச்சினை எண்டுறது எனக்கில்ல.

பூலோகத்துல உள்ள நாடுகள் - நாடுகள்ல உள்ள பிரதேசங்கள் - பிரதேசங்கள்ல உள்ள ஊருகள் - ஊருகள்ல உள்ள குடியிருப்புகளெண்டு அத்தினையையும் அறிஞ்சிருக்கிறதால எனக்கெண்டா மொழிப்பிரச்சினை பெரிய பிரச்சினையேயில்ல. எந்த மொழியெண்டாலும் பரவாயில்ல. நான் சும்மா புழந்து கட்டிருவன். ஆனா நான் எப்பெப்ப எங்கெங்க இருக்கனோ அந்த இடத்து பாஷைதான் அப்போதய எண்ட பேச்சு மொழியா இருக்கும்.

மொழிப் பிரச்சினை இல்லையெண்டுறதுல எந்தப் பிரச்சினையுமில்லையெண்டுறத்தால, நான் விளங்கப்படுத்துனதுல எந்தப் பிரச்சினையும் இல்லையெண்டும்தான் நினைக்கிறன். ஆனாலும் பிரச்சினை என்னெண்டா நான் ஆம்பிளையா பொம்புளையாயெண்டுறது எனக்கே தெரியாதெண்டுறதுதான்.

அந்தப் பிரச்சினை எனக்குள்ள மட்டும்தான் இருக்குற பிரச்சினை. மத்தப்படி இப்ப என்னய எல்லாரும் பொம்புளையெண்டு நினைச்சிருக்காங்க. அப்படித்தான் என்னய எல்லாரும் கூப்பிடுறாங்க. இதெல்லாம் இந்த ஆம்புளயள் எடுத்துட்ட கதைதானே. அவங்களுக்கு எது தோதெண்டு படுகுதோ அதையே செய்து போடுவாங்க. தேவையெண்டா - தேவதையெண்டு தலையில தூக்கி வைச்சி கொண்டாடுறதுக்கும், இல்லையெண்டா போடி தேவடியாளெண்டு விரட்டியுடுறதுக்கும் தோதானவள் பொம்பிளைதானென்ட எண்ணம் இவங்களுக்கு. அதனாலதான் என்னையும் பொம்பிளைர லிஸ்ட்ல சேர்த்துட்டாங்களாக்கும். அதனாலதானே இது நாள்வரைக்கும் "அம்மா, தாயே" எண்டெல்லாம் கூப்பிட்டவங்கள்ற வாயால "அவளே, இவளே" எண்டெல்லாம் ஏச்சு வாங்கிக்கொண்டிருக்கிறன்.

அதிலையும் இந்த ஆம்புளைக் கவிஞர்கள் இருக்காங்களே!... அவங்க தான் சும்மா கிடந்த எனக்கு சீலைசட்டை உடுத்தி, பொட்டு

வைச்சி பொம்பிளையாக்குனாக்கள். அவர் ஒரு கவிஞர் அண்டைக்கு எழுதுனார். "நீலப்பட்டாடை கட்டி, நிலவென்னும் பொட்டு வைச்சி பால்போல சிரிக்கும் பெண்ணே... பருவப் பெண்ணே!" எண்டு. இப்பிடி எழுதி என்னய பொம்பிளையாக்குனவர் அதோட சும்மா உட்டிருக்கலாம். அப்பிடியில்லாம அவர் எழுதுறார்-

"கண்ணுறங்க மனமில்லையோ? காதலனார் வரவில்லையோ? கரையேறி ஓடுகிறாய் பருவப் பெண்ணே... எண்டு" இது எப்படி இருக்கு. இப்படியும் எழுதலாமோ? அதுவும் ஒரு பொம்பிளையப் பற்றி....

புருசன் நினைப்புல நித்திரை வராம படுத்த பாயில இருந்தொழும்பி, நடுச்சாமத்துலயும் ஆம்பிளை தேடி அலைஞ்சி திரியுறனாமெண்டு இவர் எழுதியிருக்காரே. ஒரு பொம்புளையப் பார்த்து கதைக்கிற கதையோ இது. இவர் மட்டுமெண்டில்ல. இன்னும் கனபேர் கவிஞர்கள் எண்டு சொல்லிக்கொண்டு என்னயப் பற்றி எழுதிப் புழைக்கத் தொடங்கியிருக்கானுகள். அவங்களப் பற்றியெல்லாம் கனக்கச் சொல்ல வேண்டியிருக்கு. அதுகளப் பிறகு சொல்லுறன். ஏனெண்டா இப்ப சொல்ல வெளிக்கிட்டா சொல்லவந்தத சொல்ல மறந்துருவனெல்லோ?

இப்பிடி இவங்கெல்லாரும் எனக்கு மேக்காப்பு போட்டு சோடிச்சுட்ட கதையாலதானே நான் பொம்புளையானன். போதாக்குறைக்கு 26.12.2004 அண்டைக்கு கொஞ்சம் உசரமாயும், வேகமாயும் வந்ததால எனக்கு சுனாமி எண்டும் பேர வைச்சிற்றாங்க. யாரோ ஜப்பான்காரன் வைச்ச பேராம். வைச்ச பேர சுனாமன் எண்டாகுதல் வைக்கயில்ல. சுனாமி எண்டுற பேரும் பொம்புளைப் பேரு மாதிரித்தானே இருக்கு. அதனால நானும் பொம்பிளையா நிண்டுதான் உங்களோட கதைக்கலாமெண்டு நினைக்கிறன்.

தாயே எண்டவங்களும், மாதா எண்டவங்களும், அலைமகள் எண்டெல்லாம் பூசை வைச்சவங்களும் இப்ப பாதகத்தியெண்டும், அம்மமுண்டி அமசடக்கி, இப்பிடி சொல்லாமக் கொள்ளாம வந்து

அள்ளிற்று போயிற்றேயடி, கொலைகாரி, கொள்ளைக்காரி எண்டெல்லாம் என்னய வாய்க்கு வந்தமாதிரி ஏசுறாங்க. ஏசட்டும். ஏசுவாங்கதானே, அவங்க ஏசுறத்துலையும் நியாயமிருக்குத்தானே. ஆனா ஒண்டுமட்டும் சொல்ல விரும்புறன். நானும் ரெண்டொரு கேள்வி கேக்குறன். அதுக்குப் பதில சொல்லிப்போட்டு ஏசுறாக்களெல்லாம் ஏசட்டும்.

நான் ஆரு? வெறும் தண்ணி. என்னய நீங்களெல்லாரும் 'நீா' எண்டு சொல்லுறதால மட்டும் நான் உயா்திணை ஆகிட முடியாது. ஆனா நீங்க ஆரு? ஆறறிவு படைச்ச மனிசா்.

படிச்சவனெண்டும், பட்டதாரியெண்டும், ஆன்றோனெண்டும், சான்றோனெண்டும், அறிவாளியெண்டும், புத்திஜீவிகளெண்டும், விஞ்ஞானிகளெண்டும், வெறும் ஞானிகளெண்டும், இடது சாரிகளெண்டும், வலது சாரிகளெண்டும், முற்போக்குவாதிகள் எண்டும் நீங்களே உங்களுக்குள்ள வகைவகையா ஆக்களப் பிரிச்சி வைச்சிருக்கிறயள்.

அறிவில்லாத நான் அறிவு கெட்டதனமா வந்து உசிரையும் உடைமைகளையும் அழிச்சிப்போட்டன். என்னால செத்தாக்கள் எத்தினையெண்டு 'சொலிற்றா' கணக்கும் எடுத்திற்றயள். ஆனா நீங்க இதுவரைக்கும் ஆளையாள் கொண்டதுல கணக்குல வந்தது எத்தினை? கணக்குல வராதது எத்தினை? எண்டுறதெல்லாம் ஆருக்குத் தெரியும்.

எனக்குள்ள வெட்டி எறியப்பட்ட தலைகள் எத்தினை? எனக்கு முன்னால குழிதோண்டி புதைச்ச தலையிலாத உடம்புகள் எத்தினையெண்டுற கணக்கெல்லாம் உங்களத்தவிர ஆருக்கும் தெரியாது. ஆனா, அத மறந்திற்று- அதான் அறிவுள்ள மனிசா் செய்ஞ்சதையெல்லாம் மறந்திற்று- நான் செய்ஞ்சத மட்டும் தூக்கிப் புடிக்கிறயள்.

சொல்லாம கொள்ளாம இப்பிடி வந்திற்றாளே கொடுசூரியெண்டு

எல்லாரும் என்னத்திட்டுறதும் எனக்கு கேக்காமலில்ல. நானும் தெரியாமலில்ல, தெரிஞ்சுதான் கேக்குறன்... அது சரி.... காத்துல மிதப்பன் - கடலுல நடப்பன், நெருப்புல குளிப்பனெண்டெல்லாம் கஞ்சா புகைக்குள்ள மறைஞ்சிருந்து கொஞ்சக் கூட்டம் கதைச்சிக் கொண்டுதிரிஞ்சுதே, அவங்களெல்லார்ரையும் ஞானக்கண்ணுக்கு தெரியயில்லையாமோ நான் வருவனெண்டு. எத்தினை கோயில், எத்தின கடவுள் உங்களுக்கு அதுல ஒரு கடவுளாகுதல் சொல்லியிருக்கலாமே நான் வருவனெண்டு. ஏன் சொல்லயில்ல எண்டு நான் கேட்டா பதில் சொல்லமாட்டயள். நான் மட்டும் சொல்லிப் போட்டு வந்திருக்கோணுமாம்... என்ன நியாயமடி இது?

வெளிநாட்டுக்காரன் எப்பயுமே நாட்டு மக்களையும், எதிர்கால பொருளாதார வளர்ச்சியையும், மக்கள்ற சுகாதாரத்தையும் பற்றியே சிந்திக்கிறவன். நாட்டு மக்கள் மட்டுமெண்டில்ல நாட்டுல உள்ள மாட்டுக்கு வருத்தமெண்டாலும் சரி, ஆட்டுக்கு வருத்தமெண்டாலும் சரி, பண்டிக்கு வருத்தமெண்டாலும் சரி சும்மா விடமாட்டான். ஒரு குழுவக்கூட்டி ஆடுமாடு, பண்டியையும் கொண்டு வந்து என்ன பிரச்சியையெண்டுறத கண்டு புடிச்சிருவானுகள். அவ்வளவு ஏன் ஒரு முட்டைக்கு பிரச்சினையெண்டாக்கூட மூணுபேர் சேர்ந்து ரெலிவிசனுக்குள்ளபோய், முட்டையும் கையுமாக இருந்து மூணு நாளைக்கு கதைச்சிருப்பானுகள். அப்பிடிப்பட்டவனுகள் என்னய சும்மாவோ உடுவானுகள். நான் எப்பிடிவந்தன், இனி எப்பிடி வருவன், இனி நான் வாறத எப்பிடி அறியலாம் எண்டுறது எல்லாத்தையும் ஆராய்ச்சிபண்ணத் தொடங்கிற்றானுகள். ஆனா நீங்க, நான் எப்பிடி வந்ததெண்டுறத ஆளாளுக்கு எப்பிடியெல்லாம் கற்பனைபண்ணி கதை சொல்லுறயளெண்டுறதும் எனக்குத் தெரியாமலில்ல.

ஒரு ஆள் சொல்லுறான்- எண்ணைச் சட்டிக்குள்ள வெண்ணை திரண்டு நிண்டாப்போல நான் கரையில இருந்து இறங்கிப்போய் நிண்டு ஆடுனனாம்.



அது அப்பிடியெண்டா, இன்னொரு ஆள் சொல்லுறான் - பாம்பு படமெடுக்குறாப்போல பனமர உசரத்துக்கு ஓழும்பிநிண்டு ஆடிப்போட்டு பாம்பு கொத்துறாப்போல கொத்துன கொத்துலதான் இந்த றோட்டெல்லாம் இப்பிடி பாளம் பாளமா பேந்திச்சாம். இதெல்லாம் என்ன கதை, இன்னொரு கதை சொல்லுறன் கேளுங்கோவன்...

நான் ஊருக்குள்ள வாறதுக்கு முதல், ஓட்டப்பந்தய வீரன் ஒள்ளம் பின்னால போய் முழங்காலுல குந்தியிருந்து உன்னி ஒழும்பி ஓடுவானே அது போலதான் நானும் கரையில இருந்து நல்லாய் தூரமா பின்னால போயிருக்கன், அப்ப நான் இருந்த இடமெல்லாம் வெறும் மண் தரையா தெரிஞ்சிருக்கு. அந்த நேரத்துல ஆக்கள் கண்டதாக சொல்லுற புதுனங்கள் இருக்கே அதுதான் பெரிய புதுனம்.

எப்பயோ தாண்டுபோன வெள்ளக்காரன் காலத்து கப்பலெல்லாம் கூட கண்ணுக்கு முன்னால தெரிஞ்சிச்சாமெண்டா அது உண்மைதான். ஏனெண்டா நானும்தான் எண்ட கண்ணால கண்டன். அது பரவாயில்ல. அதுகளத்தவிர இவர் ஆரு...? அவர்தான்... இந்த....

எந்த நாளும் கைய தலகாணி போல தலையில குத்திக் கொண்டு பொஞ்சாதி லெச்சுமிர மடியில காலப் போட்டுக்கொண்டு படுப்பாரே... அவர்... அவர்தான் மகாவிஷ்ணு, மற்றது ஆரு... ஆ... அடித்துடை தெரிய புலித்தோல் உடுத்திக்கொண்டு திரிவாரே பரமசிவன். அவரும் பொஞ்சாதி பார்வதியோட நடந்து திரிஞ்சாங்களாமெண்டா இதையும் ஆரும் நம்புவாங்களோ, நான் காணாததெல்லாத்தையும் இந்தாக்கள் எப்பிடிக் கண்டாங்க எண்டுறதுதான் புதுனத்திலையும் புதுனம்.

என்னதான் இருந்தாலும் இந்த அமெரிக்காக்காரனுக்கு இவ்வளவு எரிச்சலும் புகைச்சலும் இருந்திருக்கக்கூடாதாம். நான் வாரப்போறனெண்டுறத தெரிஞ்சிருந்தும் ஒரு சத்தம் சொல்லாம உட்டுட்டானே. சொல்லியிருந்தாலென்ன குறைஞ்சோ போயிருப்பானெண்டு கனபேருக்கு அமெரிக்காவுல கோவமாமே. என்னப் பொறுத்தமட்டுல அமெரிக்காக்காரன் சொல்லாம உட்டதுதான் நல்லதெம்பன். என்னடா இவள் இப்பிடிச் சொல்லுறாளே எண்டு நீங்களெல்லாரும் நினைப்பியள் எண்டுறதும் எனக்குத் தெரியும். ஏன் நான் அப்பிடி சொல்லுறனெண்டுறதையும் நீங்க பொறுமையாக் கேக்க வேணும் கண்டியளோ...

சரி... நான் வரப்போறனெண்டுறத அமெரிக்காக்காரன் சொல்லியிருந்தானெண்டு வைப்பமே... சொல்லியிருந்தா....
முதலுல இந்த பொண்டுகளெல்லாம் ஒண்டு சேர்ந்து எடியே சுனாமி வருகுதாமே வாங்கடி போய்ப்பார்ப்பமெண்டு படுத்தபாயும் சுருட்டாம அக்கம் பக்கம் உள்ளவளுகளையும் கூட்டிக்கொண்டு என்னப் பார்க்கக் கிழம்பியிருப்பாளுகள்.

காத்துவாக்குல கதை கேட்டவளுகளும் சுனாமி எண்டா என்னெண்டு அறிஞ்சிராதவளுகளும், கதைய ஒண்டப் பத்தாக்கி எடியே சுனாமியும் புருசனும் வாறாங்களாண்டி எண்டுசொல்ல, ஊருல உள்ள பொண்டுகளெல்லாம் கரையிலதான் நிண்டு விடியவச்சிருப்பாளுகள்.

தாய்மார் போனா புள்ளைக்கிளைகள் சும்மா நிக்குங்களோ.


"அம்மோ... அம்மோ... நானும் வாறங்கா" எண்டுகொண்டு, பேண்ட பாதி பேலாதது பாதி, திண்ட பாதி தின்னாத்து பாதியெண்டும், வடிஞ்ச கடைவாய கழுவாததுகளெண்டும் தாய்மார்ர முந்தானையப் புடிச்சிக்கொண்டு புள்ளையளும் வந்திருக்குங்கள். புள்ளை பொஞ்சாதியெல்லாம் போகுதுகளே நாமளும் போய் என்ன எவடமெண்டு பார்ப்பமேயெண்டு புருசன்மாரும் சைக்கிளத் தள்ளிக்கொண்டு கடற்கரைக்கு வந்து சேர்ந்திருப்பினம். இதென்னடா இவ்வளவு சனமெண்டு யோசிச்சவனெவனெண்டாலும் ஒருத்தன் ஓடிப்போய் சோடாவ வாங்கி வந்து கடையையும் திறந்திருப்பான். இதுக்கிடையில கிழங்குப் பொரியல், வறுத்த கச்சானெல்லாம்கூட விற்கத் தொடங்கியிருக்கும். இந்த மாதிரி உச்சகட்டத்துலதான் நானும் வந்திருப்பன். அப்பிடியொரு நிலமையில நான் வந்திருந்தா இன்னும் எத்தின பேர அள்ளிக்கொண்டு போயிருப்பன். இப்ப சொல்லுங்கோ அமெரிக்காக்காரன் சொல்லாம உட்டது நல்லதோ இல்லையோ? ஊரடங்குச் சட்டம் போட்டண்டைக்கித்தானே நீங்களொல்லாரும் புதினம் பாக்க றோட்டுக்கு வாற.

பைத்தியக்காரி பத்தையையும் செத்தையையும் பிய்ச்ச மாதிரி பட்டப்பகலுல நான் வந்து இப்பிடி பேயாட்டம் போட்டுற்று வந்திருக்கனே எண்டுறத நினைக்க நினைக்க, எனக்கே என்னில கோபமாத்தானிருக்கு.

அது சரி கத்தி, கம்பு, பொல்லு, தடியில்லாமத்தானே வந்தன். இது எப்பிடி. இவ்வளவு அழிவு வந்திச்சி. கோடிப்பேர் சேந்து சேனைப்படை கொண்டு, கூடிப் போர் செய்த மாதிரியெல்லோ இருக்கு. எண்டப்படப்பா இதென்ன அழிவப்பா இது. ஒவ்வொருத்தார்ரையும் முகத்தப் பார்க்க வகுறு கொதிக்குது.

தாய் தகப்பன இழந்த குஞ்சுகுராலுகள், புள்ளைகளப் பறிகுடுத்த தாய் தகப்பன், புருசன இழந்தவள், பொண்டாட்டிய இழந்திற்று மிஞ்சிக் கிடந்த புள்ளக் குஞ்சுகள மடியில போட்டுக்கொண்டு இனி இதுகள வளர்க்குறதுக்கு என்ன வழி எண்டு கொண்டு முகட்டப்

பார்த்துக் கொண்டிருக்கிற புருசன்மார், எடியே கண்கெட்டுப் போயிருவாய். உசிர் வேணுமெண்டா எங்கள அள்ளிக் கொண்டு போயிருக்கலாமேடி. இப்பிடி பட்ட மரத்துகள உட்டுப்போட்டு பச்சக் குருத்துகள அள்ளிக்கொண்டு போயிற்றையேடி எண்டு ஒப்பாரி வைக்குற வயது போனதுகளெண்டு ஒவ்வொருத்தரிண்ட முகத்தையும் பார்க்குற நேரமெல்லாம் ஈரக்குலை நடுங்குற மாதிரித்தானிருக்கு.
நினைக்க நினைக்க நமக்கேன் இந்த வாழ்க்கை, பேசாம வற்றி செத்துப் போயிடலாமோ? இல்லாட்டி ஆத்துல குளத்துல உழுந்து





செத்துடலாமோ எண்டும்கூட நினைக்கிறன். அதெப்பிடி முடியும் ஆறும் குளமும் என்னில உழுந்து சாகக்கோள நான் என்னெண்டு அதுகளுக்குள்ள உழுந்து சாகுற. எண்டாலும் மனம் கேக்குதில்லையே. கண்ணுக்குள்ள தூசி உழுந்து கரிக்கிறாப்போல அண்டைக்கு நடந்ததுகளெல்லாம் இண்டைக்கும் நெஞ்சப் போட்டு அறுக்குதே.



எனக்கு இப்பயும் நினைப்பிருக்கு!

தாய்க்காரி கிணத்தடியில இருந்து கோப்பை, பானைசட்டி கழுவுறாள். அய்ஞ்சு வயசு மகன் தாயிர தோளக்கட்டிப் புடிச்சிக்கொண்டு முதுகுல சாய்ஞ்சாடுறான். மூத்த மகன் மாட்டுக்கு தவிடு குழைக்கிறான். அவையள் சொன்னமாதிரி நான் சன்னதம் கொண்டு ஒழும்பி நிண்டு ஆடுறன். அத அந்தச் சின்னப் பொடியன் கண்டுற்றான். "அம்மோ... அம்மோ கடலுகா... கடல் வருகுதுகா" எண்டு கத்துறான். "என்னடா தலையால தெறிச்சிருவாய்... ஏண்டா இப்பிடி காதுக்குள்ள கத்துறாய்..." எண்டிற்று முழங்கையால மகன இடிச்சுற்றாள் தாய்க்காரி. "எலக்கோ அம்மா... கிறுகிப்பாருகா... கடல் வருகுதுகா. தம்பியத் தூக்கிக் கொண்டு ஓடிவாகா" எண்டிற்று மூத்த மகன் தவுட்டு வாளியில இடறியுழுந்தொழும்பி ஓடுறான். அப்பதான் தாய்க்காரி திரும்பிப் பாக்குறாள். பார்த்த பார்வைக்கு மலை மாதிரி எழும்பி நிண்ட என்னயக் கண்டவள் 'ஆ'வெண்ட வாய் மூடிக்கேலாம மலைச்சி போய் நிக்கிறாள். நான் போனபோக்குல தாயயும் புள்ளையயும் தள்ளி உழுத்தி அடிச்சி தள்ளிக் கொண்டு

போக ஒரு பள்ளக்கையில இருந்த பனமர வடலியில தலைமுடி சிக்குப்பட்டு தாய்க்காரி அம்புட்டுட்டாள். மேல அண்ணாந்து பார்த்தா மூத்த மகன் ஒரு மரத்துல ஏறி உச்சாரத்துல இருக்கான். எங்கடா அந்தச் சின்னப் பொடியனக் காணயில்லையே எண்டு பார்த்தா பொடியன் ஒரு புல்லுப் புட்டிய கட்டிப் புடிச்சிக்கொண்டு உசிருக்குப் போராடிக் கொண்டிருக்கான். கடைசியாப் பார்த்தா பொடியனுகள் ரெண்டு பேரும் தப்பிற்றானுகள். தாய்க்காரிதான் செத்துப் போயிற்றாள்.

என்னப் பெற்றதாய் உயிருக்குப் போராடுனதையும், அவள்ற உயிர் அடங்கி தண்ணியில அடைஞ்சி மிதந்ததையும், எண்ட அய்ஞ்சி வயசு தம்பி புல்லப் புடிச்சி உசிரக் காப்பாத்திக் கொண்டதையும் நான் எண்ட கண்ணால கண்டன். பெற்றதாய் செத்து மிதந்த, அவள்ற உயிர் பிரிந்த வினாடிகள நேருல கண்ட கொடுமையான அனுபவத்துக்குள்ளானவன் நான்தானெண்டு தப்பிப் புழைச்ச தம்பிக்காரன கட்டிப் புடிச்சி கதறிக் கதறி குழறி, ரி.வி. ஆக்களோட அந்தப் பொடியன் அண்டைக்கு கதைச்சத நினைக்கக்கோள எனக்கும்தான் தொண்டை அடைக்குது.

இன்னொரு சம்பவம் சொல்லுறன் கேழுங்கோவன். றப்பர் வேசனுல தண்ணிய நிரப்பி ஆறுமாதப் புள்ளையொண்ட குளிப்பாட்டிக் கொண்டிருக்காள் தாய்க்காரி. நிமிர்ந்து பார்த்தாள். நான் வாறன். இதென்ன புதுனண்டி இதெண்டுகொண்டு குளிக்கவார்த்த புள்ளைய உட்டுப்போட்டு ஊட்டுக்க ஓடுறாள். இதென்ன கொடுமையிது பெத்த புள்ளய உட்டுப்போட்டு ஊட்டுக்க ஓடுறாளே. இவளுக்கு புள்ளய விட நகைநட்டுத்தானோ பெரிசாப்போய்ச்சி, இவள சும்மா உடக்கூடாதெண்டு நானும் கிளப்பிக்கட்டிக்கொண்டு ஓடி அவள்ற வீட்டுக்குள்ள புகுந்து அவள இடிச்சி தள்ளுன தள்ளுல சுவருல மோதி உழுந்தவளப் பார்த்தா, இன்னொரு புள்ளைய கட்டிப் புடிச்ச மாதிரிக் கிடக்காள். வருத்தமாக் கிடந்த புள்ளையத்தான் தூக்க ஓடி வந்திருக்காள். இது தெரியாம இடிச்சுற்றனே எண்ட கவலையோட திரும்பி வரக்குள்ளதான் பார்த்தன். றப்பர் வேசனுக்குள்ள இருந்த



புள்ளைக்கு எதுவும் நடக்கயில்ல. அது அப்பிடியே தான் வேசனுக்குள்ள இருந்திச்சி.

நீங்கெல்லாரும் நினைப்பியள் இசமன் வாறது எருமை மாட்டுல எண்டுதான். நானென்டா அதெல்லாத்தையும் நம்பவேமாட்டன். ஏனெண்டா... அண்டைக்கு நான் வந்தநேரம் மனிசரெண்டு மட்டுமில்ல. ஆடு, மாடு, நாய் பூனை, கோழி, குருவி எண்டு எதையும் பார்க்காமத்தானே அள்ளிக்கொண்டு ஒதுக்கியுட்டன். அடிச்சிக் கொண்டுபோய் ஆத்துல இறக்கியுட்டுப்போட்டு நான் வாறன், பார்த்தா ரெண்டு பொம்புளைப் புள்ளையள் ஒரு எருமை மாட்டுர ரெண்டு கொம்புலையும் தொங்கிக் கொண்டிருக்குதுகள். எருமை மாடு அழகா நீந்திக்கொண்டு போகுது. அதுக்குப் புறகுதான் யோசிச்சன். எருமை மாட்டுல இசமன் வாறதெண்டுறதெல்லாம் இவங்கட சும்மா கதை.

ஆத்துவாழை எண்டொரு தாவரத்த நீங்க எல்லாரும் அறிஞ்சிருக்க மாட்டயள். பெரிய இலை, நாவல் கலருல பூ. வேர் கீழ தொங்க செடி தண்ணிக்கு மேலால மிதக்கும். ஏக்கர் கணக்குல ஆத்துக்குள்ள இடத்தப் புடிச்சி மிதக்கும். இதையெல்லாம் ஏன் சொல்லுறனெண்டா

நான் ஆக்களக் கொண்டு போய் ஆத்துக்குள்ள தள்ளியுட்டுப் போட்டு வந்திற்றன். எல்லாம் முடிஞ்சி ஆக்கள் ஆத்துக்குள்ள இறங்கித் தேடிப்பார்த்த நேரம் விரிச்ச பாயில படுத்துக் கிடக்குறாப்போல ஆத்து வாழைக்கு மேல கிடந்து, தப்புன குழந்தப் புள்ளயளையும் ஆக்கள் கண்டிருக்காங்களாம். இதுகள் மட்டுமெண்டில்ல. இன்னும் எத்தினையோ புதுனங்கள் இங்கெண்டில்ல, எல்லா இடத்திலையும் நடந்திருக்காமெண்டு இவள் காற்று வந்து எண்ட காதுக்குள்ள அடிக்கடி சொல்லிற்றுப் போவாள்.



அப்பிடித் தான். அண்டைக்குமொரு நாள் இவள் காற்று வந்தாள். வந்தவள் என்னோட எதுவும் பேசாம முகத்த நீட்டிப் புடிச்சிக் கொண்டிருக்காள். "என்னடி காத்து ஏதும் பிரச்சினையோ" எண்டு கேக்க, "என்னோட கதையாத. உண்ட முகத்தையும் இனிப் பார்க்கிறயில்லெண்டுதானிருந்தன். என்ன செய்யுற எல்லாரும் உன்னய திட்டி வாக்கக்கோள நானும் வரயில்லெண்டா தனிச்சுப் போயிருவேயேயெண்டுதான் வந்தன்" எண்டாள்.

"ஏங்கா... நான் அப்பிடி என்னத்த செய்து போட்டனெண்டு நீ இந்த கிளம்பு கிளம்புறாய்?"

"இஞ்சே... செய்யுறதெல்லாத்தையும் செய்ஞ்சிபோட்டு இப்ப குஞ்சிப் புள்ளைக்கு நடிக்காத...., அதுசரி சுனாமி எண்ட பேரோட நீ ஊருக்குள்ள ஓடுன அண்டைக்கு குடிச்சிக்கிடிச்சிருந்தயோ?"

"இஞ்சே.... மனிசரப்போல என்னயும் நினையாத. அதோட உன்னப் போலஇல்ல நான். நீதான் ஒரு இடமெண்டில்லாம அண்டரெண்டமெல்லாம் அலைஞ்சி திரிஞ்சி அவையளிவயள்ற அசிங்கத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு திரியுற. நான் அப்பிடியில்ல. உலகத்துல எனக்கெண்டு தனி இடத்த வைச்சிக் கொண்டு மரியாதையா இருக்குறன்"

"ஆ.... உண்மையைச் சொன்னா இப்பிடி கிளம்பி ஓழும்பிருவியே. குடிக்காமத்தானோ அந்த வெறியாட்டம் ஆடியிருக்காய்...?"

"தேவைக்கில்லாத கதைய உட்டுப்போட்டு சொல்லுறத்த சொல்லி முடி. இல்லாட்டிப் போயிரு"

"சின்னாள் பெரியாளெண்டு பாராம அள்ளிக்கொண்டு வந்தாய். மிஞ்சிக் கிடக்குறதுகளெண்டாலும் குந்திச் சீவிக்குறதுக்கு அதுகள்ற



குடியிருப்பையாகுதல் உட்டு வைச்சிருக்கயோ? குருடன் பொண்டிலப் போட்டு அடிச்சாப்போல என்ன பாட்டத்தான் படுத்திப்போட்டு வந்திருக்காய்?"

"ஆ... இதுக்குத்தானோ நீ இந்தப்பாடுபட்ட, அது சரி. நான் செய்தத மட்டும் தூக்கிப் புடிச்சிக் கொண்டு ஓடி வந்தயே. எழுபத்தெட்டாம் ஆண்டு சூறாவளியெண்ட பேருல நீ அடிச்ச கிளப் டான்ஸ மறந்திற்றையோடி?"

"இதானே... எடுத்ததுக்கெல்லாம் அந்த சூறாவளியப் பத்தித்தானே கதைப்பாய். இதுக்குத்தான் இப்பெல்லாம் நான் எண்ட பாட்டுல எண்ட வேலைய மட்டும் பார்த்துக்கொண்டிருக்கிற, நமக்கெதுக்கு அவள் இவள்ற கதை, நீ என்னவாகுதல் செய்து கொள்ளம்மா... நான் வாறன்"

புறு புறுத்துக்கொண்டு காத்து போயிற்றாள். எண்டாலும் எண்ட மனசாட்சிக்குத் தெரியும்தானே அவள் சொல்லுறதும் உண்மைதானெண்டு. நானும் என்ன சின்னச் சமக்கெட்டோ பார்த்திட்டன். வெங்கலக் கடைக்குள்ள ஆனை பூந்த மாதிரியெல்லோ நடத்தி முடிச்சிற்று வந்திருக்கன்.

பள்ளிக் கூடங்களெண்டும் பள்ளி வாசலுகளெண்டும், இந்துக் கோயில்களெண்டும், வேதக் கோயில்களெண்டும் என்னெத்த உட்டு வைச்சன். எல்லாத்தையுமெல்லோ அடிச்சுடைச்சிப்போட்டு வந்தன்.

"பள்ளிகள் பல இருந்தும் வாங்கோசை கேட்ட பின்பும் பள்ளி செல்ல மனமில்லையோ படைத்தவன் நினைவில்லையோ... படைத்தவன் நினைவில்லையோ..." எண்டு நாகூர் ஹனீபா காக்கா பாடுவார். இப்ப நான் வந்து போனதுக்குப் புறகு அந்த இடங்கள்ல பள்ளி வாசலுகள் இருக்குத்தான். ஆனா வாங்கோசைதான் கேக்குதில்ல. ஹறவாப் போனவள் நான். என்ன செயித்தான் வந்து என்ன புடிச்சி இப்பிடி ஆட்டிச்சோ தெரியாது. இல்லெண்டா குர்ஆன் ஓத வந்த புள்ளயளக் கூட உட்டு வைக்காம அள்ளிற்றுப் போயிருப்பனோ. நான் அடிச்சி முடிச்சிழுத்து வந்த நேரத்துல



புத்துக்குள்ள இருந்து வெட்டக்கிறங்கி வந்த ஈசலுகளப்போல அந்தப் புள்ளைக்குஞ்சுகள் கோருவக் கொடியா வந்தத நினைக்க, நினைக்க நெஞ்சு பதறுதே. எனக்கே இப்பிடி இருக்கெண்டா பெத்தவளுகள்ற வகுறு எப்பிடி பத்தி எரியும். உம்மாமாரே! அம்மாமாரே! கையெடுத்துக் கும்புட்டுக் கேக்கேன் என்னய மன்னிச்சுக் கொள்ளுங்கம்மா.

அண்டைக்கும் அப்பிடித்தான், தண்ணியில அடைஞ்சி நனைஞ்சி கிடந்த போட்டாக்களெல்லாத்தையும் வாசலுல காயவைச்செடுத்து, அதுல உள்ள தண்ட மகண்ட போட்டாவக் காட்டி, அண்டைக்கு வெளையாடப்போன நேரம் கடலு வாறத்த கண்டோடன, நான் உம்மாட்ட போகப்போறனெண்டிற்று எண்ட புள்ளை ஊட்டப்பார்த்த மாதிரித்தான் ஓடி வந்திருக்கான். கண்ணால கண்டாக்களும் இரிக்காங்க. எண்ட புள்ளை மௌத்தாகிரிக்கமாட்டான். ஆராவது எண்ட புள்ளையக் கண்டா சொல்லுறயளா கிளியெண்டு ஒரு தாய்க்காரி ஒழுங்கைக்குள்ள நிண்டு வாற, போற ஆக்களுக்கிட்ட கெஞ்சிக் கொண்டு நிக்கிறாவாம் எண்டு கேள்விப்பட்டன். எண்ட



வாப்போ ஆராவதுபோய் அந்த தாய்க்கிட்ட சொல்லுங்க வாப்பா, அந்தப் புள்ளை மௌத்துத்தானெண்டு. இது மட்டுமில்ல இன்னும் எத்தினையோ தாய்மாரெல்லாம் தங்கட புள்ளையள் உசிரோடதான் இருக்குதுகள் எண்டு நம்பிக் கொண்டிருக்காங்களாமே.



நான் வந்ததுக்கு முதல் நாள் ராவெல்லாம் வேதக்கோயிலுகள்ல பீக்கர் கட்டி பாட்டுப் போட்டு, மெழுகுதிரி கொழுத்தி, ஆராதனை செய்ஞ்சி சந்தோசமா இருந்திச்சிகள். "கேளுங்கள் தரப்படும்... தட்டுங்கள் திறக்கப்படும்... கேளுங்கள் கிடைக்குமென்றார்... யேசு கேளுங்கள் கிடைக்கும் என்றார்..." எண்டு பீக்கரோடு பீக்கரா சேர்ந்து பாடிற்றுவந்து படுத்ததுகள்ற ஊரு இப்ப உறங்கிப்போய் கிடக்கு. ராவப் பார்க்க இருந்ததுகள் வெள்ளாப்பப் பார்க்குறதுக்கு இல்ல. கேக்கப் பாக்க ஆளில்லாம, திறக்க கதவுமில்லாம வேதக் கோயிலெல்லாம் வெறிச்சோடிக் கிடக்குது.

"அகம்பாவம்கொண்டவர், ஆணவம்கொண்டவர், செருக்குப் பிடித்தவர், கோபம்கொள்பவர், பொறுமையிழப்பவர், பொறாமைப்படுபவர் இவர்களையெல்லாம் மரணத்தின் வாசல் நெருங்கிக் கொண்டிருக்கும்" எண்டு பைபிள்ல ஒரு அதிகாரத்துல சொல்லப்பட்டிருக்காமே. அப்ப சாத்தாண்ட கட்டளைக்கு கட்டுப்பட்டாப்போல இந்தளவுக்கு பொறுமையிழந்து பொங்கி வந்த எனக்கு என்னென்ன தண்டனையெண்டு பைபிள்ல சொல்லியிருக்கோ தெரியாதே? அத நினைச்சாத்தான் பயமா இருக்கு. மரணத்தின் வாசல மூடுகின்ற சாவி வேதாகமத்துலதானாமே இருக்கு. வேதாகமம் படிச்சித் தெரிஞ்சிகொள்ள நானென்ன பள்ளிக்கூடம் போய் எழுதிப்படிக்கவோ தெரிஞ்சிருக்கன். எல்லாம் அவரவர்ர தலையெழுத்துப்படிதானே நடக்கும்.

வேதக் கோயிலையும், பள்ளிவாசலையும் பத்தியே கதைக்காளே இவள் இடிச்சுதைச்ச இந்துக் கோயிலொண்டும் இவளுக்கு நினைப்பில்லையோ எண்டு நீங்க நினைப்பயளெண்டுறதும் எனக்குத் தெரியாமலில்ல.

அது சரி, இந்தத் தமிழ் கடவுளுகளெல்லாம் ஏன்தான் கும்பலாக் கூடி குடியிருக்காங்களோ தெரியாது. எல்லாரும் அங்க இஞ்செண்டு ஆளுக்கொரு பக்கம் பிரிஞ்சிருந்தா இப்பிடி அழிவெண்டு வரக்கோள ஒண்டு ரெண்டு பேரெண்டாலும் தப்பலாமெல்லோகா.



அப்பிடி இல்லாம எல்லாரும் ஒண்டா இருந்தாங்க. இப்ப பார்த்தயள்தானே என்ன நடந்திருக்கெண்டு.

முருகண்ட கையில இருந்த வேலக் காணயில்ல. அய்ஞ்சி கை கணபதி நாலு கையோட இருக்கார். அம்மோ எண்ட கையொண்டக் காணயில்லகா எண்டு சொல்ல, தாயத் தேடுனா பார்வதிர முழங்கையும் முறிஞ்சி தொங்குது. எப்பயும் ஒத்தக் காலுல நிக்கிற பரமனுக்கு மத்தக் காலுலயும் காயமாம். இதெல்லாத்தையும்விட பகுடி என்னெண்டா சென்றிப் பொயுன்டுல நிண்ட வைரவனையே காணயில்லையாமே. நேத்துக்கூட இந்தப் பொட்டை காத்துக்கிட்டச் சொல்லி ஒள்ளம் எண்ட தலைய உசத்திப்பாத்தன். இப்பயும் கோயில் வாசலுல அந்த தலையில்லாத மயில் நிண்டு கொண்டுதானிருக்கு. முருகண்ட பாடுதான் திண்டாட்டமா இருக்குமெண்டு நினைக்கிறன். ரெண்டு பொண்டாட்டிக்காரன். அந்திர அவசரத்துக்கு வாகனத்துக்கு என்ன செய்வாரோ தெரியாது. இந்த நேரம் பார்த்து திரும்பவும் மாம்பழப் பிரச்சினை வராம உட்டா சரிதான். மனிசர்ர பாடு பரவாயில்ல. கடவுளுகள்தான் பாவம் -அகதி முகாமும் இல்லாம,

சுனாமிக்காட்டுமில்லாம, நிவாரணமும் கிடைக்காம நிக்குறாங்க.

வந்தாள், அடிச்சாள், அள்ளுனாள், போனாள் எண்டெல்லாம் என்னயப்பத்தி நீங்க என்னெத்தத்தான் சொன்னாலும் ஒண்டு ரெண்டு விசயத்துக்காகுதல் நீங்க எனக்கு நன்றி சொல்லித் தானாகோணும். அதுகளும் என்னென்னெண்டு சொல்லுறன் கேட்டுக்கொள்ளுங்கோ.



ஒண்டு: நான் ஞாயிற்றுக் கிழமையாப்பார்த்து வந்ததுக்கு.

அப்பிடியில்லாம மற்ற மற்ற நாளுகள்ல நான் வந்திருந்தனெண்டு வைச்சிக்கொள்ளுங்கோ. இந்தப் பள்ளிக்கூடங்கள்லயும், கந்தோருகள்லயும், பள்ளிப் புள்ளையளெண்டும், வாத்திமாரெண்டும், உத்தியோககாரரெண்டும் எத்தினையோ பேர் இருந்திருப்பாங்க. அத்தினை பேர்ர நிலைமையும் என்னமா இருந்திருக்குமெண்டு கொஞ்சம் யோசிச்சிப்பாருங்கோவன்.

ரெண்டாவது: நான் ராவுல வராம, பகலுல வந்ததுக்கு.

பகலுல வந்தபடியாத்தானே என்னய கண்டஉடன இடறி தடக்கி உளுந்தாக்களத் தவிர மற்றெல்லாரும் 'கீரடி மாரடி' எண்டு கத்திக்கொண்டு சில்லாங்கொட்டை சிதறுன மாதிரியும், கிக்கிலிப்பேய் கலஞ்சோடுன மாதிரியும் ஆளுக்கொரு பக்கம் ஓடுனயள். இல்லாட்டி நான் நடுச்சாமத்துல வந்திருந்தனெண்டு வைச்சிக்கொள்ளுங்கோ! இல்லாததுகள் பட்டினியோட படுத்துக் கிடந்திருக்குங்கள், உள்ளாக்கள் அதுவும் நத்தார் நாளுமெல்லோ நல்லா மூக்கு முட்ட திண்டு குடிச்சிப்போட்டு, குறட்டையுட்டு அடைச் சாரையப்போல நெழிஞ்சி புரண்டு படுத்திருப்பாங்க. நான் வந்த வரத்துக்கு, படுத்தபாய் தலைகாணியோட அத்தினை பேரையும் அள்ளிக்கொண்டு வந்திருப்பன். இப்ப விளங்குதோ நான் ராவுல வராம உட்டதுர அருமை.

மூணாவது:

நான் பைத்தியக்காரி மாதிரி கதைச்சாலும் காரியமாத்தான் கதைப்பன். இதத்தான் நீங்க முக்கியமா கவனிக்க வேணும். என்னெண்டா நான் வந்து உங்கள்ல எத்தின குடும்பங்கள ஒண்டு சேர்த்திருக்கன் எண்டுறதும், ஒத்துமையாக்கி வைச்சிருக்கன் எண்டுறதும் உங்களுல ஆருக்காவது தெரியுமோ?

வெட்டுப்பகை, குத்துப்பகையெண்டிருந்த அண்ணன் தம்பியெண்டும், கூடிக்கொண்டோடிற்றாளெண்டு குடும்பத்த உட்டுப் பிரிச்சிவைச்ச தாய்தகப்பனெண்டும், செத்தாலும் இனியுண்ட முகத்தக்கூட பார்க்கமாட்டண்டியெண்டு வெட்டியுட்டுப் பிரிஞ்சிபோன புருசனெண்டும், கழுத்துல தொங்குற தாலியொண்டுக்காக காலமெல்லாம் உன்னோட கிடந்து கயிற்றப் படோணுமெண்டில்ல எண்டு அறுத்தெறிஞ்சிற்றுப் போனவள் எண்டும் இப்பிடி உட்டுப் பிரிஞ்சி, உறவறுத்து இருந்ததுகளெல்லாம் கத்திக் குழறி, கதறித் துடிச்சி ஓடி வந்து கடலுல போனதுகள்போக மிச்சமிருந்த ஆக்கள தேடி அலைஞ்சி கண்டுபுடிச்சி கட்டிப்புடிச்சி அழுதாங்களே. இது ஆரால நடந்தது? என்னால தான்

நடந்ததெண்ணுறத்த ஆரும் வாய் துறந்து இல்லெண்ணேலாது.

எல்லாம் சரி... எனக்கு இதொண்டுதான் இன்னும் விளங்கிக்கொள்ளேலாத விசயமாயிருக்கு. சோனி சொக்கட்டான் எண்ணுறயள், தமிழன் சிங்களவன் வேதக்காரனெண்ணுறயள். அது மட்டுமில்லாம யாழ்ப்பாணத்தானெண்டும், மட்டக்களப்பானெண்டும், திருகோணமலையான், வன்னியனெண்டும் ஆளையாள் பிரிச்சு பிரிச்சு சொல்லுறயள். அது காணாததுக்கு, அடிக்கடி ஆளுக்காள் மோதி அடிபுடியும் படுறயள். ஆனா இப்பிடி ஒண்டெண்டோன அத்தின பேரும் ஒண்டாச் சேர்ந்து 'ஒண்டடி மண்டடியாகி' ஆளாளுக்கு உதவுறயளே! எங்கயிருந்துதான் உங்களுக்கு இந்த ஒத்துமையும் பாசமும் ஓடி வருகுதோ தெரியுதில்ல. எனக்கே இதுகள பார்க்கப் பார்க்க ஒள்ளம் சந்தோசமான பொறாமையாத்தான் இருந்திச்சி.


என்னதான் சுட்டாலும், வெட்டுனாலும் சுனாமி எண்ட பேருல நான் வந்து சுழண்டடிச்ச நேரத்துல முதல்முதல் ஓடி வந்து உதவுனது ஆமிக்காராக்கள் தானாமே?

போட்டிருந்த சட்டையக் கழட்டி குடுத்தாங்களாம். குழந்தைப் புள்ளையத் தூக்கி உயர்த்திப் புடிச்சிக் கொண்டு ஒத்தக் கையால மரக்கப்பப் புடிச்சித் தொங்கிக்கொண்டு, "ஓடுங்கோ... ஓடுங்கோ..." எண்டு கத்துனாங்களாம். முதல் நாள் பட்டினியாக் கிடந்த அகதிகளுக்காக பள்ளி வாசலுகள்லயும், சோனகாக்களுக்கிட்டயும் போய் சாப்பாடு கேட்டு கண்கலங்கினாங்களாம். மையரிக் கிழங்கையும் சம்பலையும் கொண்டு வந்து குடுத்து இப்போதைக்கு இதுதான் கிடைச்சு சாப்பிடுங்கோ எண்டாங்களாம்.

"இந்த மக்களுக்கெதிராகத் தானே ஒரு நாளைக்கு துவக்க நீட்டப்போறயள், இண்டைக்கு உதவுற கையாலதானே நாளைக்கு எங்க குஞ்சு குராலையெல்லாம் சாக்காட்டுவயள், இந்தா கண்ணுக்கெதுக்க நிக்கிற உங்களால நாங்க எத்தினபேர் சாக

இருக்கமோ" எண்டு ஆரோ ஒராள் கேட்டதுக்கு ஆமிக்காரன் சொன்னானாம் -

"என்ன செய்யுறது... இது மனித தர்மம், அது யுத்த தர்மம்" எண்டு. நீங்களெல்லாம் அகதிமுகாமுகள்லயும், வயல்வெளிகளுக்குள்ளயும் கிடக்கயளாமெண்டு கேள்விப்பட்டு பத்தாம் கட்டை, மாந்தோட்டம் அங்கால அம்பாறைப் பக்கமிருந்தெல்லாம் இருந்து சிங்களப் பொண்டுகள் கட்டச் சம்பலும் சோறும், பாணும் சம்பலுமெண்டு கொண்டு வந்து தந்தாங்களாமே உண்மைதானோ? சிங்களத்தியோ, தமிழிச்சியோ ஆயிரந்தான் இருந்தாலும் ஒண்டெண்டோன ஓடி வந்து இதுதான் இருந்திச்செண்டு உள்ளதக் குடுத்தாளே அங்கதாங்கா மனிசர்ர மனச அறிய முடியுது.



எனக்கு இப்பயும் சிரிப்பாத்தான் இருக்குது. அடிக்கடி நினைச்சி நினைச்சி சிரிக்குறதும்தான்.

என்னெண்டு சொல்லாம நான் மட்டும் சிரிச்சா எப்பிடி...?

சொல்லுறன் கேளுங்கோவன். நான் வந்த வரத்துல ஊருக்குள்ள இருந்ததுகளெல்லாம் மண்ணுல புரண்டு, மரத்துல மோதி ஆத்துக்குள்ள உறுண்டுழுந்தெழும்பி நனையாவுறட்டியும், ஆத்துவாழையும் உடம்பு முழுக்க தொங்க தெப்பமா நனைஞ்சி எண்ட புருசனக் காணயில்லயே. எண்ட புள்ளையக் காணயில்லையே எண்டு தலையில பாய்ஞ்சடிச்சிக் கொண்டு மத்த மத்த ஊருக்குள்ள தொங்கோட்டமும் பெருநடையுமா போகுதுகள். அந்த நேரம் என்னெண்டு பார்த்தா ஊருக்குள்ள இருந்தாக்களெல்லாம் ஏதோ கதிர்காமத்துக்கும், உகந்தைக்கும் போறாப்போல மெசினுலயும், வேனுலயும் ஏறிப் போய்க் கொண்டிருந்தாங்களாம். எங்க போறயளெண்டு கேக்க கடல் வருகுதாம் அதான் போறமெண்டுற்று ஓடிற்றாங்களாம். அட கண் கெட்டுப் போயிருவியாள்... கடலுல அடிபட்டு வந்த நாங்களே கல்லுப்போல நிக்கிறம், நீங்க இந்த ஓட்டம் ஓடுறயளே எண்டதுக்கு ஆ.... புறகும் வந்தாலும் வருமெண்டிற்று ஓடியிருக்காங்க.

ஓடுனாக்களும் பயத்துல எங்க ஓடுறம் எவடத்துக்கு போறமெண்டு தெரியாமத்தான் ஓடியிருக்காங்க. ஓடிப்போய் நிண்டு நிமிந்து பார்க்கத்தான் தெரிஞ்சிருக்கு, நாம வந்திருக்கிற இடம் ஏழெட்டு கட்டை தாண்டுன இடமெண்டு. இவ்வளவு தூரத்துக்குத் துரத்திப் போய் இவையளப் புடிக்க எனக்கு வேற வேலையில்லையோ? வந்து சேந்திருக்குற இடம் நடுச் சோனகவட்டையெண்டுறதும் அதுக்குப் புறகுதான் அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு.

இப்பிடி சனமெல்லாம் பயத்துல பதறித்துடிச்சி வந்திருக்காமே எண்டு கேள்விப்பட்ட முஸ்லீம் ஆக்களெல்லாம் ஓடிவந்து என்ன ஏதெண்டு விசாரிச்சி தேவையான வசதியெல்லாம் செய்ஞ்சி குடுத்திருக்காங்க. வந்திருக்கிறது சைவாக்களெண்டும் தெரிஞ்சி மரக்கறி சோறும் குடுத்திருக்காங்க. இது மட்டுமில்லாம நம்மட ஊருக்குள்ள அகதிகளாக பொண்டுகள் புள்ளையளெல்லாம் வந்திருக்காக அதால நம்மட ஊட்டுப் பொண்டுகளெல்லாம் போய் அவுங்களோட மனம் உட்டு கதைச்சி சிரிச்சிக்கிட்டு வாங்கெண்டு

பள்ளிவாசல் பீக்கருலகூட சொன்னாங்களாம். இது மட்டுமெண்டில்ல, இதே மாதிரி சோனாக்களுக்கும் தமிழாக்கள் உதவியிருக்காங்களாம். இத ஏன் சொல்லுறனெண்டா ஆரும் கடமையெண்டோ கண் துடைப்புக்கோ செய்யாம, உதவி செய்யக்கோளயும் சமயத்தையும் மனநிலையையும் மதிச்சி செய்திருக்காங்களே அத மெய்ச்சத்தான் வேணும். இதென்னகா இது மனிசருக்கு மனிசர் உதவுறதென்ன புதுனமான விசயமோ? என்னமோ ஆடு முட்டையுட்ட மாதிரியும் கோழி குட்டி போட்ட மாதிரியும், பூமிபூலோகத்துல நடவாதது நடந்தது மாதிரியெல்லோ கதைக்காயெண்டு நீங்க நினைப்பயள் எண்டும் எனக்குத் தெரியும். என்ன செய்யுற, நீங்க ஒண்டுக்கொண்டு குத்துறதும் ஒண்டா சேர்ந்து கும்மியடிக்கிறதும் மற்றாக்களுக்கு எப்பிடியோ எனக்கெண்டா புதுனமாகத்தாங்கா இருக்கு.

உங்களுக்கொண்டு தெரியுமோ உங்கட ஊருக்குள்ள உள்ள பணக்காரர் குடுத்துதவுனத்த உட இல்லாததுகள் தங்களுக்கிட்ட இருந்ததுகள தூக்கிக் குடுத்து உதவுனதுதானாமே அதிகம்.

இது எனக்கென்னெண்டு தெரியுமெண்டா...? நான் வந்த நேரம் ஊருக்குள்ளயும் மாரி மழை வெள்ளம்.

இந்த இளந்தாரிப் புள்ளையளும் பொட்டைகளும் பொட்டி சாக்குப் பைகளோட முழங்காலளவு தண்ணி பாய்ஞ்சி ஊடு ஊடாப் போய் பிச்சைகேக்குறாப்போல அகதிகளுக்கு சாமான சேர்த்திச்சிகளே அப்ப அதுகள் அறிஞ்சவிசயம்தான் எண்டகாதுக்கும் எட்டிச்சி. மத்தபடி நானெண்டா அதுகளக் கண்ணாலயும் காணயில்ல. நாம கண்ணால காணாததயும் சொல்லக்கூடாதானே. அதுவும் கடலாச்சியெண்டு பேரவைச்சிக்கொண்டு, கண்ணால காணாத பச்சப் பொய்யெல்லாத்தையும் சொன்னனெண்டா பட்டப்பகலிலே கண்கெட்டு ஊத்தியுண்டு தட்டுத்திறாவித் திரியமாட்டனோ? ஆனா ஒண்டு சொல்லுறன். எண்ட கண்மாணிக்கமறிய நான் எண்ட கண்ணால கண்டது இது

என்னெண்டா, உருக்குள்ள உளுபட்டு அம்புட்ட ஆக்கள்



எல்லாரையும் அள்ளிற்று வந்திற்றன். கொண்டுவந்தத நானே வைச்சிக்கொள்ள அதென்ன சொக்கப்பானையோ. அதான் புல்லுத்திண்ட நாய் புரைக்கேறி சக்தியெடுத்தாப்போல எல்லாரையும் கரையில ஒதுக்கியுட்டுட்டு போயிற்றன்.

அடுத்தடுத்த நாள் வகுறு ஊதுனமாதிரியும் காலக்கைய உயர்த்தின மாதிரியும் புணமெல்லாம் ஆத்துலயும் மிதக்க தொடங்கிற்றாம். சரி... இனி ஊரெல்லாம் நாத்தமெடுத்து மூக்கு பதைக்கப்போகுதேயெண்டு எல்லாரும் பயந்து கொண்டிருந்த நேரம்பார்த்து எங்கிருந்துதான் ஓடி வந்திச்சிகளோ தெரியாது அந்தப் புள்ளையள். வந்த வரத்துக்கு முஸ்லீம், தமிழனெண்டு புறிவினை காட்டாம அந்த இளந்தாரிப் புள்ளையள் தூக்கிச் சுமந்து வெட்டித்தாட்ட புணங்களால அந்தப் புள்ளையளுக்கு புண்ணியம்தான் கிட்டும்.

புணமெல்லாம் கரையில அடையுதாமெண்டு கேள்விப்பட்ட உடனயே ஓடி வந்திற்றுகள். தமிழ் புணமெது முஸ்லீம் புணமெது எண்டெல்லாம் அதுகள் பார்க்கயில்ல. சுன்னத்து வைச்சதெண்டோ, முக்காடு போட்டதெண்டோ புணங்கள் புறிச்சிப் பார்த்து தூக்கிப் புதைக்கயில்ல. அங்கபாருடா நம்மட வேங்குல வேலை செய்யுற

புவனேஸ்வரா அக்காடா... எண்ட அல்லா...!! எண்டுகொண்டு கரையில கிடந்த புணத்த பேர்சொல்லி தூக்கிக் கொண்டு ஓடுதுகள். இது ஆருடா? நம்மட இறைச்சிக் கடை இப்றாகீம் காக்காடா எண்ட முருகோ...!! எண்டுகொண்டு தூக்கிக் கொண்டு ஓடுதுகள்.

சமரசம் உலாவுமிடமெண்டு சாவடக்க இடத்தச் சொன்னது சரிதானெண்டு அண்டைக்குத்தான் தெரிஞ்சிகொண்டன். எண்ட தம்பிமாரே உங்களுக்கொண்டு சொல்லுறன் கேட்டுக் கொள்ளுங்கோ. நீங்க நெத்தியில வைக்குற பொட்டும் தலையில போடுற தொப்பியும்தான் உங்கள என்ன சாதி, என்ன மதமெண்டு அடையாளம் காட்டுது. மத்தப்படி நீங்கெல்லாம் மனசளவுல ஒரு தாய் பெத்த புள்ளையளப் போல ஒத்துமையாத்தான் இருக்கயள், இருக்க விரும்புறயளெண்டுறதும் எனக்கு தெரியாமலில்ல. உங்களுக்குள்ள மூட்டியுட்டு புகைய வைக்கிறதும், பத்த வைச்சி கூதல் காயுறதும், ஆரெண்டுறத நான் சொல்லித்தான் நீங்க தெரிஞ்சி கொள்ளோணுமெண்டில்ல எண்டுறதும் எனக்குத் தெரியும்.

இஞ்ச மட்டுமெண்டில்ல. எல்லா ஊர் பகுதிலையும் இப்பிடி இளந்தாரிப் புள்ளையள் தொண்டு செய்ஞ்சிதானிருக்குதுகளாம். மறுகாயும் சொல்லுறன்... இதநான் சொல்லோணுமெண்டு நினைக்கக்கோளயே எண்ட உடம்பெல்லாம் சிலுக்குது. தம்பிமாரே உங்களுக்கு போற காலத்துலயாவது புண்ணியம் கிடைக்கும். நீங்க நல்லா இருப்பயள். நல்லா இருக்கோணுமெண்டு நான் மனமாற உங்கள வாழ்த்துறன்.

மற்றது இந்த TRO புள்ளையள் செய்த தொண்டையும் சொல்லாம இருக்கேலாது. ஆர் எவரெண்டு தெரியாது. புதுப்புது முகப் புள்ளையளெல்லாம் வந்திச்சுகளாம். ஆனா, முன்னம் பின்னம் தெரியாத மாதிரியே அந்த புள்ளையள் நடந்து கொள்ளயில்லையாமே? நாங்க ஆரு? உங்கட புள்ளையள். நீங்க ஆரு? இந்த தமிழீழத்தின்ர மக்களெண்டுகொண்டு எந்த நேரம்

எந்த இடமெண்டு பாராம பூந்து புறப்பட்டு உதவிச்சிகளாமே?

அம்பட்டு நாளைக்கும் என்ன எவடமெண்டு கேக்காம அமசடக்கா இருந்த உள்ளுர் அரசாங்க உத்தியோககாரார் கொஞ்சப்பேர் வெளிநாடுகள்ல இருந்து சாமானுகள் வருகுதெண்டு தெரிஞ்ச உடன, அப்பதான் அகதிகள்ல பாசம் பொங்கி, பேண்ட பீயில கொசு மொய்குறாப்போல வந்து மொய்ச்சாங்களாம். இந்த TRO புள்ளையளும் இல்லையெண்டா அவனுகளுக்கிட்டயிருந்து அந்தச் சாமானுகள்ல ஒள்ளம்கூட மிஞ்சிக் கிடைச்சிருக்காதாமே? இந்தப் புள்ளையளும் இல்லையெண்டா மறுகாயும் நாங்க கடலுலதான் உழுந்திருக்கோணுமெண்டும் ஆக்கள் சொன்னாங்களாம்.

அண்டைக்கு ஒரு பொம்புளை கதைச்சது எண்ட காதுக்கு வந்து சேர்ந்திச்சி. அங்கயும் இஞ்சயும், மழையிலயும், வெயிலிலயும் அலைஞ்சி, வந்த சாமானுகள ஒரு கல்லூட்டுக்குள்ள அடிக்கி வைச்சிற்று நடுச்சாமத்துல வந்து ஒரு பொடியன் அவவ ஒழுப்பி "அம்மா உடம்பெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு எனக்கொருக்கா குளிக்க வாத்துடுங்கம்மா" எண்டிருக்கான். ஆரு பெத்தாலும் இதுவும் நான் பெத்த புள்ளை மாதிரித்தானே எண்டு நினைச்சிற்று இவவும் போய் கிணத்துல தண்ணிய அள்ளிற்று திரும்பிப் பார்த்தா, ரெண்டு காலையும் கழற்றி வைச்சிற்று கதிரையில இருக்கானாம் அந்தப் பொடியன். இதக் கண்ட உடனயே மனசு தாங்காம குழறிற்றாளாம் மனிசி. வாளிப்பட்டய புடிச்ச மாதிரி கல்லுப்போல நிண்டவவப் பார்த்து "என்னம்மா..." எண்டு பொடியன் கேக்க, "இல்ல மனே இந்த நிலையிலயும் இப்பிடி ராப்பகலா ஓடித்திரியுறயே" எண்டதுக்கு, "அம்மா... நாங்க செத்தால் வித்தாகுவம், இல்லையெண்டா இருக்கும் வரை கிளை முறிஞ்சாலும் துளிர்த்துக் கொண்டுதான் இருப்பம்" எண்டானாம். அந்தப் பொடியன் மட்டுமில்லையாம் - காலில்லாம, கையில்லாமெல்லாம் பொடியனுகள் வந்து TROவுக்கு வேலை செய்யுறத பார்க்குற நேரம் இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும்

போராடித்தானே அந்தப் புள்ளையள் இண்டைக்கு கால, கைய இழந்து நிக்குதுகளெண்ட நெஞ்சு நிறைஞ்ச கவலையில துக்கம் தொண்டைய அடைச்சி ரெண்டு நாளா மனிசி சோறு தண்ணியில்லாமக் கிடந்தாவாம் எண்டும் கேள்வி.

இப்பிடிக் கனபேர், பல மாதிரியெல்லாம் உங்களுக்கு உதவியிருக்காங்களாம். அது மட்டுமில்லாம பச்சையெண்டும் சிவப்பெண்டும் கலர் கலரா உடுப்புடுத்திக் கொண்டும், நெஞ்சில கொடி குத்திக்கொண்டும் கமராக்காராக்களோட நிறையப் பேர் வந்து வெட்டி வெளியாக்குறமெண்டு கலர் காட்டிப்போட்டும் போனாங்களாம். கேக்காம, பார்க்காம, சொல்லாமக் கொள்ளாம தானாக வந்து உதவுதுகளேயெண்டு நீங்கெல்லாம் வாயில விரல் வைச்சிப் பார்த்துக் கொண்டிருந்தயளாம். இப்ப பார்த்தயளோ? கட்டமைப்புர கழுத்துக்கு கத்தி வைக்கிறாங்கெண்டோனதான் அவங்கட கலர் கழண்ட சுயரூபம் உங்களுக்கெல்லாம் தெரிஞ்சுதாம்.

நான் ஒண்டு சொல்லப்போறன். சொல்லுறனெண்டு கோவிக்காதையுங்கோ. இல்லாம, சொல்லுறனேயெண்டு நீங்க கோவிச்சாலும் நான் அதப்பத்தி கவலைப்படப்போறதுமில்ல.

நீங்கெல்லாம் கெதியா நன்றி மறந்திருவயளாம். செய்நன்றி மறக்குறதுல உங்கள அடிக்க ஆளே இல்லையாமே! புதுசாரக் கண்டு பழசாரக் கையுடுறதுல நீங்க கெட்டிக்காரராமே? இண்டைக்கொண்டு செய்யயில்லையெண்டா இதுக்கு முதல் செய்த தொண்ணூத்தொன்பதையும் மறந்துருவயளாமே! எவ்வளவுதான் அள்ளித் தந்தாலும் கடைசியா என்னத்த தந்த நீ எண்டுதான் கேப்பயளாமே? இதெல்லாம் நானா சொல்லயில்ல. இவள் காத்துப் பொட்டைதான் அடிக்கடி வந்து காதுல போட்டுற்றுப் போவாள். ஆர்ரயும் கண்ணுக்குத் தெரியாமயும், எவர்ர கையுல அம்புடாமயும் திரியுறவள் காத்து. பயமில்லாம எதையும் கதைப்பாள். நான் அப்பிடியில்லையே என்னவும் எண்டா தேர் இழுத்து தீர்த்தமாடி திட்டி வார்த்துருவியளே. எண்டாலும் இப்பிடியெல்லாம் நன்றி

மறக்குற நீங்கதானோ எனக்கிட்ட சுத்தம் கேட்டுவாறயள். அடா... எனக்குள்ளதான் இறாலும் கிடக்குது. தண்ட தலையில பீய வைச்சிக் கொண்டு மற்றாக்களப் பார்த்து 'பீ... பீ...' எண்டுகொண்டு அது திரியுற மாதிரித்தான் நீங்களும்.

ஒண்டு மட்டும் சொல்லுறன். ஆரு செய்த உதவிய மறந்தாலும் இந்த வெளிநாடுகளும், வெளிநாட்டுல இருக்குற உங்கட ஆக்களும் செய்ஞ்ச உதவிகள நீங்க மறந்திரவே கூடாதாமெண்டு இவள் காத்துத்தான் சொல்லச் சொன்னாள்.

"அதென்னடி அது.... மறக்கக் கூடாதளவுக்கு அவையள் செய்த உதவியெண்டு"

நானும் தெரியாத்தனமா கேட்டிற்றன். முறைச்சிப் பார்த்தாளே ஒரு பார்வை. ஒரு நிமிசம் ஆடியே போயிற்றன்.

"சரி தெரியாமத்தானே கேட்டன். தெரிஞ்சத்த சொல்லங்கா" எண்டு கெஞ்சிக் கூத்தாடுனதுக்குப் புறகுதான் சொன்னாள்.

"எடியே சுனாமியெண்ட பேருல அண்டைக்கு றவ்வாணம் கொட்டிக் கொண்டு போன நீ ஊரையே கிழிச்சி கவ்வாலமாக்கிற்று வந்திற்றாய். இந்த விசயம் சொந்த நாட்டுல பல ஊருகளுக்கு தெரியுறதுக்கு முன்னமே வெளிநாட்டாக்களுக்கு தெரிஞ்சிருக்கு. தெரிஞ்ச உடனயே துடிச்சிப் போயிற்றாங்களாண்டி"

"எண்டு நீதான் சொல்லுறாய், நாட்ட உட்டு ஓடுனாக்கள், நடப்புக் காட்டுறாக்கள், வருசத்துக்கொரு தரம் வந்து 'கெப்பர்' காட்டி, படம் எடுத்துட்டுப் போறாக்களாமெண்டு தானே நான் அவையளப் பற்றிக் கேள்விப்பட்டன்"

"அப்பிடித்தாண்டி நானும் இவ்வளவு காலமும் நினைச்சிருந்தன். ஆனா அப்பிடியில்லையாம். நாட்ட உட்டு பிரிஞ்சிருந்தாலும் நாட்டு மக்களையும், தாய் மண்ணையும் நேசிச்சிக் கொண்டு அதே நினைப்போடதான் வாழுறமெண்டுறத நிரூபிச்சிருக்காங்களாம்.



உசிருகளையும், உடமைகளையும் நீ போய் அந்திலி சிந்திலி ஆக்கிற்றாயாமெண்டு கேள்விப்பட்ட உடனேயே, ஐயோ... எங்கட நாட்டு மக்களுக்கா இந்தக் கதி. அவங்க தத்தளிக்குற இந்த நேரத்துல ஓடிப்போய் கை கொடுத்துதவுற தூரத்துல நாங்க இல்லாமப் போயிற்றமேயெண்டு கதறிக் கதறி அழுதிருக்காங்க. ஏதாவது நாங்களும் செய்யோணுமே யார் மூலமா என்ன செய்யலாமெண்டெல்லாம் ஓடித் திரிஞ்சிருக்காங்க"

"புதுனமாத் தான் இருக்குடி..... ம்..... சொல்லு"

"சொல்லுறன் கேளு.... எங்கட சொந்தக்காரர் எவரும் கடற்கரை ஓரத்துல இல்ல, எங்கட குடும்பத்துல எவரும் பாதிக்கப்படயில்ல. எண்டாலும் ஈழத்து மக்கள் பாதிக்கப்பட்ட போது எங்கட சொந்தக்காரர் பாதிக்கப்பட்டது மாதிரித்தான் உணர்ந்தம் எண்டிற்று, நடக்கயிருந்த கல்யாணங்கள், பிறந்த நாள் விழாக்கள், புதுவருசக் கொண்டாட்டங்களெண்டு அத்தினையையும் இடை நிறுத்தினாங்களாண்டி"

"மெய்தானோடி"

"இன்னும் இருக்குடி..... சொல்லுறனே... பிரதேச வேறுபாடு, பிராந்திய வேறுபாடெண்டெல்லாம் சொல்லி எங்களப் பிரிக்கப்பார்க்குனம். அப்பிடியொரு விசயமே எங்களுக்குள்ள இல்லெண்டுறத நிரூபிக்க வந்த உனக்கும் நன்றியாமெண்டும் சொல்லியிருக்காங்கடி. அது மட்டுமில்லாம அங்க புறந்த சின்னச் சின்ன புள்ளையளெல்லாம் வீதிவீதியா போய் உண்டியல் குலுக்கி காசு சேர்த்திருக்குதுகள். சில குடும்பங்கள்ல விடிஞ்சா தாயொரு பக்கம் தகப்பனொரு பக்கம், புள்ளையளொரு பக்கமெண்டு உண்டியலும் கையுமா வெளிக்கிட்டுடுங்களாம்"

"அப்பிடியும் தியாக மனப்பான்மையான ஆக்களும் அங்க இருக்காங்களோடி"

"இல்லாமயோ பின்ன... ஒரு மூண்டு வயசுப் புள்ளையாம்... என்னைப் போல குழந்தைகள்தான் அங்கே தாய் தகப்பனை இழந்து தவிக்கிறார்கள், அவர்களுக்கு உதவுங்கள் எண்டுகொண்டு கையில உண்டியலோட போயிருக்கு. இதக்கண்ட வெள்ளக்காரரெல்லாம் கண்கலங்கிற்றாங்களாம்"

"இருக்காதோ பின்ன... கல்லும் கரையுமேடி இதக்கண்டா"

"இப்பிடி மற்றயவள்ற மனசக் கரைக்கிற மாதிரியெல்லாம் தங்கட துக்கத்தையும், துயரத்தையும் வெளிக்காட்டியிருக்காங்க. இஞ்ச என்னெண்டா எட்ட நிண்டு புதுனம் பார்த்திட்டு கெக்கலம் கொட்டி சிரிச்சிருக்கானுகளாம்"

"ஓமோம், நானும் கேள்விப்பட்டன். அதுசரி வெளிநாட்டுல இருந்து ஆரும்... சொந்தக்காரர் அவையள் இவையள பார்க்கிறதுக்கெண்டு வந்தாங்களாமோகா?"

"இதென்ன கதைடியிது? ஏண்டி வராம.... கொழும்புல இருந்த கமராக்காரர் வாறதுக்கு முந்தியே கடலுக்கங்கால எத்தினையோ

ஆயிரம் மைலுக்கப்பால இருந்தாக்களெல்லாரும் வந்திற்றாங்கடி. அதுகள் தண்ணியில கிடந்து தத்தளிக்குற நேரத்துல கைகுடுத்து உதவி கரைசேர்க்கத்தான் முடியாட்டியும், முகம் புதைச்சி அழ தோழாவது குடுப்பமேயெண்டு ஓடி வந்தாக்கள் எத்தினையெண்டு தெரியுமோடி உனக்கு? பாவம், வந்தாக்கள்ற முகத்துகள பார்க்க ஏலாது. நீ நடத்துன புதுனங்களப் பார்த்திற்று சாவூட்டுக்கு வந்த மாதிரி முகத்துல ஈயாடையில்லாமத் தான் திரும்பிப் போனாங்க"

"கேக்கக்கோள கவலையாகத்தான் இருக்கு. அது சரி இவ்வளவு விசயமும் உனக்கென்னெண்டடி தெரியும்?"

"எடியே உன்னப்போல இல்லடி நான். களப்புலயும், குளத்துலயும் உழுந்தொழும்பி ஆறு வரும். அதோட ஆரும் வந்தா அமுக்கிக் கொள்ளலாமெண்ட நினைப்புல அகட்டி விரிச்சி இடத்தப் புடிச்சிக் கொண்டு கிடக்குறவள் நீ. நான் அப்பிடியில்ல. ஆர்ர கண்ணுலயும் படாம அண்ட சராசரம் முளுக்க நிறைஞ்சிருக்கிறவள். சின்ன தூசி துரும்பு கூட எண்ட சொல்லக் கேட்டுத்தான் அசையும். நான் ஒரு நிமிசம்... ஒரேயொரு நிமிசம் தம்புடிச்சி மூச்சடக்கி நிண்டனெண்டா இந்த உலகமே நிண்டுடும். கனக்க எதுக்கு. எனக்குத் தெரியாம எவரும் குசு கூட உடேலாது தெரியும்தானே?"

சொல்லிற்று காத்து போயிற்றாள். அவள்ற பெருமைக் கதைக்கு நானும் பதில் சொல்லியிருக்கலாம்... எனக்கு கீழால ஓடுற கப்பலுகளென்ன. மேலால மிதக்குற கப்பலுகளென்ன, என்னுல மிதந்து நிண்டு நடத்துற போரென்ன. எனக்கடியில நடத்துற பரிசோதனைகளென்ன, கண்டுபிடிப்புகளென்ன, நான் வைச்சிக் கொண்டிருக்கிற அதிசய ஜீவராசிகளென்ன, எனக்கடியில இருக்கிற அழகான தாவர உலகமென்னெண்டெல்லாம் நானும் பதிலுக்கு பட்டியல் போட்டிருக்கலாம். அடா... பைத்தியக்காரி கெப்பறடிச்சிற்றுப் போறாள். பரவாயில்ல போகட்டுமேயெண்டு உட்டுற்றன். மற்றப்படி அவள் உங்களப்பற்றி சொன்னதெல்லாத்தையும் நான் மறுக்கயில்ல. அவள் சொல்லுற கதைகளப் பார்த்தா இந்த வெளிநாட்டுல இருக்குற

உங்கட ஆக்கள் நிறையத்தான் உதவியிருக்காங்க. இவையள் செய்த உதவிகள மறந்திராதையுங்கோ. மறந்தா நீங்க மனிசரேயில்ல. சொல்லிப் போட்டன்.

எவர் என்ன உதவி செய்தாலும், ஆர் எவ்வளவத்தத்தான் அள்ளித் தந்தாலும் உங்களுக்கு என்னுல உள்ள கோபம் இன்னமும் தீரயில்லையெண்டுறது எனக்கு நல்லா தெரியும். நாளாயிற்றுத்தானே கோபம் குறைஞ்சிருக்குமெண்டுதான் நினைச்சிருந்தன். ஆனா அடிக்கடி சிலபேர் வந்து கதைக்குற கதையையும் செய்கிற செய்கையையும் பார்த்தா என்னில உள்ள கோபம் இன்னும் தீராத மாதிரித்தான் தெரியுது.

அண்டைக்கொரு நாள் வயசுபோன மனிசி தண்ட ஊட்டுக்குள்ள கிடந்த குப்பை கூழமெல்லாத்தையும் பொட்டியில அள்ளி தலையில சுமந்து கொண்டு வந்து எண்ட தலையிலதான் கொட்டுறாள்.

கொட்டக்கோளயும் என்னென்னமோ எல்லாம் தனக்குள்ள புறுபுறுத்துக் கொண்டுதான் கொட்டுறாள். ஆருக்கும் ஏசிப்பேசிக் கொண்டு வந்து போறாளெண்டுதான் நானும் காது குடுத்துக் கேக்காம இருந்தன். திடீரெண்டு பார்த்தா கடைசிப் பொட்டிக் குப்பையக் கொண்டுவந்து கொட்டிப்போட்டு குந்தியிருந்து ரெண்டு கையயும் அகல விரிச்சி, பரவி மண்ண அள்ளி என்னில எறிஞ்சவள் - "இந்தா எடுத்துக்கொள். நீ அள்ளுறதெல்லாத்தையும் அள்ளிக் கொண்டு மிச்சமுட்டுட்டுப் போன குப்பை கூழமெல்லாத்தையும் உனக்கிட்டயே தந்திருக்கன். எடுத்துக்கொள். கண்கெட்டு நாசமாய்ப் போயிருவாளே... இப்பிடி வந்து அடிச்சள்ளிற்றுப் போயிற்றேயடி. நீ நல்லா இருக்க மாட்டாடி, எண்ட சாபம் உன்னச் சும்மா உடாதுடி" எண்டுற்று நாலைய்ஞ்சி தரம் மண்ண அள்ளி எறிஞ்சிற்றுப் போயிற்றாள் மனிசி. எனக்கு அய்ஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு ஒள்ள நேரம் ஆடாம அசையாமலேயே நிண்டுற்றன்.

அதுதான் அப்பிடியெண்டா இன்னொரு கதை சொல்லுறன்

கேளுங்கோவன். இதக் கேட்ட உடன நீங்க சிரிப்பயளோ என்னவோ தெரியாது. ஆனா எனக்கெண்டா இப்பயும் நினைக்க நினைக்க சிரிப்பாத்தான் வருகுது.

ஒருத்தன் வாறான்... வந்தவன்... அடம்பன் கொடிமோடு, ராவணன் மீசை புல்லுத்திடலெண்டு அந்த இடமெல்லாம் குனிஞ்சி பார்த்துக் கொண்டு திரியுறான்...

ஏதோ நகைநட்ட அள்ளிக்கொண்டு வந்திற்றனாக்கும், அதத்தான் தேடுறானாக்குமெண்டுதான் நானும் நினைச்சன். குனிஞ்ச குனி நிமிராம நடந்து திரிஞ்சவன் புல் பூண்டில்லாத மணல் திடல காலால தீய்க்கிறான்.

இதென்ன புதுனம் இவனிந்தா காட்டுற புதுனமெண்டு நினைக்கக்குள்ளாலயே சாறனக் கிளப்பிக் கொண்டு குந்திற்றான்.

அட போடா... இதுக்குத்தானடா இந்த மண்ண இந்தத் தீ தீய்ச்ச நீ எண்டு நான் எனக்குள்ள சொல்லிக் கொண்டிருக்கிற நேரம்தான் இவள் காத்து வந்து எண்ட முதுகப் புடிச்சி தள்ளியுடோணுமோ?

காத்து என்னத் தள்ளியுட்ட உடுவைக்கு போனபோக்குல அவண்ட குதிகால் மண்ண தோண்டி எடுத்துக் கொண்டு வர அவன் குப்புற உழுந்திற்றான்.

உழுந்தவன் நிமிர்ந்து கூடப் பார்க்கயில்ல. ஒழும்பி சாறனக் கிளப்பிப் புடிச்சிக் கொண்டு ஓடுறான்... ஓடுறான்... ஓடி தூரமா நிண்டு என்னப் பார்த்தவன் திரும்பவும் நடந்து வாறான்.

புட்டாணத்துல புடுக்கடிபடுற மாதிரி ஓடுனவன் திரும்பவும் ஏன் வாறான் எண்டு எண்ணக்குள்ளயே அவன் எனக்கிட்ட வந்திற்றான். வந்தவன் சட்டெண்டு சாறனக் கிழப்பி எனக்குக் காட்டிக் கொண்டு- "வா... வந்து எடுத்துக் கொண்டு போ... தையிரியமிருந்தா வா பார்ப்பமெண்டு"

கிழப்பிப் புடிச்ச மாதிரியே நிக்கிறான். எனக்கெண்டா வெக்கம் ஒரு பக்கம் சிரிப்பொரு பக்கம். பொம்பிளையெண்டும் பாராம இப்பிடி கிளப்பிக் கொண்டு நிக்கானே. டேய் வேணாண்டா. போயிர்ரா... எனக்கும் கோபம் வரும்டா... வந்தா... அந்தாள் சொன்ன மாதிரி நானுமெண்ட நீலப்பாவாடைய கிளப்பிக் காட்டுனனெண்டா... கொத்தோட குலையெல்லாத்தையும் அத்துக் கொண்டு வந்திருவண்டா எண்டு சொல்லோணும் போலதான் இருந்திச்சி... நான் எதுவும் பேசயில்ல. கிளப்பிக் காட்டுன மாதிரியே நிண்டவன் அவனாக அலுத்துப்போய் பேண்டதையும் கழுவ மறந்திற்றுப் போயிற்றான்.

அவன் போன அடுத்த நாள் இன்னொருத்தன் வாறான். நல்ல வெறி. அத்தின பரந்த நிலவெளி இருக்க என்னில உரசுன மாதிரித்தான் வாறான். நானும் எண்ட பாட்டுல சும்மா இருக்காம போன போக்குல அவண்ட வேட்டிய தொட்டு நனைச்சிற்றன். இடுப்புல பாதி நிலத்தில பாதி இளுபட்ட வேட்டி நான் பட்டு ஈரமாக பாரம் தாங்காம இடுப்புல இருந்து கழண்டு என்னோடயே வர அவன் பாவி, பழனி முருகன் மாதிரி கோவணத்தோட நிக்குறான். தலைகெட்ட வெறியோட தள்ளம்பாறி வாறவன் இடுப்பு வேட்டிக்கு மேல ஒரு கவுத்துத் துண்டையாகுதல் கட்டியிருக்கக் கூடாதோ.

சரி, உடுத்திருந்த வேட்டி கழண்டுழுந்திற்றேயெண்டு ஒரு கூச்ச நாச்சமில்லாம என்னையே முறைச்சிப் பார்த்துக் கொண்டு நிண்டவன், 'தூ...' எண்டு காறி எண்ட முகத்துல துப்புறான்.

இதென்ன புதுனங்கா இந்தா இவன் காட்டுற புதுனம். தண்ணியடிச்ச வாய்க்கு நான்தான் இண்டைக்கு ஊறுகாயாரிக்குமெண்டு நான் நினைக்கக்குள்ளயே நான் நினைச்சது சரியெண்டாப் போல அவன் ஏசத் தொடங்கிற்றான்.

"தூ... தொழுப்புறி வேச... எடுத்ததெல்லாம் காணாதெண்டு இப்ப எண்ட வேட்டியயுமோடி உரிஞ்செடுக்காய்... வைச்சிக்கொள். அத

மட்டும் ஏன் உட்டு வைப்பான். அதையும் வைச்சிக்கொள். நான் வாறனெண்டுற்று" நடக்கத் தொடங்க -

'எண்ட ராசா.... வேணாம் ராசா. ஏற்கனவே ஊர் நாறிப்போய்க் கிடக்கு. இந்தக் கோலத்துல போய் நீ இன்னும் நாறடிச்சிராத இந்தா உண்ட வேட்டி எடுத்துக்கொள்' எண்டு மனசுக்குள்ள நினைச்சிக் கொண்டு காலடியில கொண்டு போய் வேட்டியப் போட -

"அதானே பார்த்தன். அந்தப் பயமிருந்தாப் போதும்டி"

எண்டுகொண்டு வேட்டிய எடுத்து தோள்ல போட்டுக்கொண்டு கோவணத்தாண்டியாத் தான் நடந்து போனான்.

இப்பிடி கண்டவய நிண்டவயெல்லாம் வாய்க்கு வந்த மாதிரி கதைச்சிற்றினம்.

ஆக்களோட சேர்ந்து இவள் காத்துமெல்லோ என்னய தூத்தத் தொடங்கிற்றாள். அவள் அமுக்குன அமுக்கத்தாலதான் நான் இப்பிடி பொங்கி எழும்பி வந்தனெண்டுறது அவளுக்குத் தெரியாதுதானோ, அல்லது தெரிஞ்சும் தெரியாத மாதிரி நடிக்குறாளோ எண்டுறதத்தான் என்னால அறிஞ்சு கொள்ளேலாம இருக்கு.

எவர் எப்பிடிப் பேசுனாலும், இன்னும் என்னில மதிப்பும், மரியாதையும், அன்பும் வைச்சிருக்கிற மனிசரும் இல்லாமலில்ல. மயண்டையாகி ஊட்டுக்கு விளக்கு வைக்குற நேரமாப் பார்த்து அண்டைக்கொரு நாள் ஒரு ஆள் வாறார். வந்தவர் எனக்கு முன்னால குந்தியிருந்து கொண்டு என்னென்னமோ எல்லாம் கதைக்கார். இருட்டுல நல்லா முகமும் தெரியயில்ல. கிட்டப்போய் என்னதான் கதைக்காரெண்டு காதக் குடுத்துக் கேட்டன். அந்தாள் கதைச்சதெல்லாத்தையும் கேக்கக் கேக்க நானே கலங்கிற்றன். நல்லா உத்துறங்கப் பார்த்தன். மனிசண்ட கண்ணால பொலு பொலெண்டு தண்ணி கொட்டுக்கொண்டே இரிக்கு. கோயில் வாசலுல நிண்டு சாமிக்கிட்ட முறையிடுறாப்போல -

"ஏன் தாய?... ஏன் தாய.... இப்பிடிச்செய்த... அப்பிடி என்ன தாய எங்கள்ல கோவம்... இப்பிடிச் சீறி வந்து சீற்றம் கொண்டிற்றயேம்மா... அள்ளித் தந்ததும் நீ தான். அள்ளிக் கொண்டு போனதும் நீ தானே தாயே... நீயும்தான் என்ன செய்வாய்... எவ்வளவத்தெண்டுதான் நீயும் தந்திருக்காய். அதுக்கெல்லாம் நாங்க என்னத்த திருப்பித் தந்திட்டம்... காசக் குடுத்து தோணி வாங்குனயள். வலை வாங்குனயள்... எனக்குள்ள அள்ளுனதுக்கெல்லாம் என்ன தந்தயளெண்டு கேக்குற மாதிரியெல்லோ நீ வந்து அள்ளிற்றுப் போயிற்றாய்"

''நீ இப்பிடியெல்லாம் செய்திற்றாயெண்டு உன்னுல கோபப்படுவனெண்டு நினையாத தாய... என்ன.... குஞ்சிப் புள்ளையளெல்லாத்தையும் அள்ளிக் கொண்டு போயிற்றேயே எண்டுதான் கவலை... அதுக்கென்ன செய்யுற நீ கொண்ட சன்னதம் அப்பிடி. உண்ட சன்னதத்திலயும் நியாயமிருக்குத் தானே! நீயும்தான் எத்தினையெண்டுதான் பொறுப்பாய். ஊர் உலகத்துல பார்த்துப் பொறுத்துக் கொள்ளுற விசயங்களோ நடக்குது. ஒரு மசிருக்குள்ள மதிப்புக் கூட உசிருக்கில்ல. நாய மதிக்கிறாப் போல கூட தாய மதிக்கிறானுகளில்ல. புருசன பொட்டாட்டி மதிக்கிறாளில்ல. பொண்டாட்டிய புருசன் கவனிக்கிறானில்ல. பெற்று வளர்த்த தகப்பன புள்ளை மதிக்கிறானில்ல. படிப்பிச்ச வாத்திய மாணவன் மதிக்கிறானில்ல. கொலை, கொள்ளை, மானபங்கமெண்டு மனிசன் செய்யாத விசயமேயில்லெண்டு போயிற்று தாயே. இதெல்லாத்தையும் பார்த்துப் பொறுக்கேலாமத் தானே தாயே நீ வந்த..."

"நீ வந்து போயும் ஆரு திருந்துனா. நிலையத்த வாழ்க்கைதான் மனிச வாழ்க்கையெண்டுறத ஆரு உணந்தா? முன்னெல்லாம் நாலு காசு பணம் கையில இருந்தா என்ன சுவீப்புக் கிழுப்பு அடிச்சதோ எண்டு கேப்பாங்க. இப்ப அப்பிடியில்ல. உனக்குமென்ன சுனாமியடிச்சதோ எண்டுதானே கேக்குறாங்க"

"நீ வந்து போனது எங்களுக்கு சுவீப்படிச்ச மாதிரியாம். எல்லாம் எரிச்சலும் பொறாமையும்தான். நாங்களும் கடக்கரையில ஊடு கட்டியிருந்திருக்கலாமெண்டும், பார்ப்பம் இன்னொரு சுனாமி

வராமலோ உட்டுடுமெண்டும், ச்சா..... வந்த கடல் இன்னும் கொஞ்சம் தூரம் வந்து எங்கட வாசலையும் நனைச்சிற்று போயிருக்கக் கூடாதோ எண்டும் கதைக்கிறாக்களும் இருக்குற உலகம் தாய இது. எரிச்சலும் புகைச்சலும் தான் இதுக்கெல்லாம் காரணம்"

"இண்டைக்கு எங்களுக்கு கிடைக்குறதப் பார்த்துப் பொறாமைப்படுறாங்களே, அண்டைக்கு நாங்க பட்ட கஸ்டத்த இவையளெல்லாம் அறிவாங்களோ"

"நான் எல்லாரையும் சொல்லயில்ல. ஒரு சிலரப்பத்தித்தான் சொல்லுறன். நாங்க இழந்ததுகள்தான் போகட்டும். பட்ட கஸ்டங்கள இவங்க உணருவாங்களோ? மூச்சுத்திணறி தத்தளிச்ச நேரம் புடிச்சித் திணறி கரையேற ஒரு துரும்பு கிடைக்காதா எண்டு நாங்க துடிச்ச ஒரு வினாடி பரிதவிப்ப இவங்க உணர்ந்திருப்பாங்களோ? அதெல்லாம் ஏன், எனக்கு எல்லாம் கிடைக்குது. கிடைக்குறதெல்லாம், நான் இழந்து தவிக்குற எண்ட அய்ஞ்சி வயசுப் புள்ளைக்கு ஈடாகிடுமோ? எனக்கு எதுவும் வேணாம். எண்ட புள்ளையத் தாங்கோ எண்டு கேட்டா தந்திருவாங்களோ? பட்டப்பகலுல மனிசராய்த் தெரியுறன். நடு இருட்டுல ஊட்டு மூலைக்க கிடந்து எண்ட புள்ளய நினைச்சி நான் குழர்றது இவையளுக்குத் தெரியுமோ?"

"செப்பமில்ல தாய... இந்த ஊரும் உலகமும் செப்பமில்ல. எங்கயுமே ஊழலும் லஞ்சமும் தான். பாதிக்கப்பட்ட நாங்க அப்பிடியே தான் இரிக்கிறம். ஆனா எங்கட பேரச் சொன்னவனெல்லாம் புதுப்புது பணக்காரனாகிற்றான் தாய... நீ வந்தத தண்ட மாடி ஊட்டுக்கு மேல ஏறி நிண்டு புதுனம் பார்த்தவனெல்லாம் போளின்ல நில்லாம நிவாரணம் வாங்கிற்றுப்போறான். பொறுக்குதில்ல தாய... அக்குறமங்களையும், அநியாயங்களையும் காணக்காண நெஞ்சு பொறுக்குதில்ல தாய... அதான் உனக்கிட்டச் சொல்லி ஒப்பாரி வைக்கிறன். எனக்குத் தெரியும், இப்பிடியெல்லாம் நடக்குமெண்டு உனக்குந் தெரியுமெண்டுறதும் எனக்குத் தெரியும். இதெல்லாத்தையும்

பார்த்து- பார்த்து பொறுக்கேலாமத்தான் நீ பொங்கி வந்தாயெண்டுறதும் எனக்குத் தெரியும்"

"நீ வரோணும் தாய... திரும்பயும் வரோணும். வந்து எல்லாரையும் அள்ளிக் கொண்டு போகோணும். அப்பதான் தாய இந்த ஊரும் உலகமும் திருந்தும். இருட்டாயிற்றுத் தாய ஊட்ட போய்ச் சேரோணும். நான் வாறன் தாய"

தண்ட பாட்டுலயே கதைச்சிக்கொண்டு நடந்துபோய் இருட்டுல மறைச்சிற்றார் மனிசன். பாவம் எல்லாரையும் அள்ளிற்று வந்திட்டா திருந்திறதுக்கு ஆரிருப்பா எண்டுறதக்கூட புரிஞ்சிகொள்ளத் தெரியாத அப்பாவி மனிசன். இப்பிடி இந்த மனிசன் புலம்புறாரெண்டா எந்தளவுக்கு அவ்ர மனச இந்தாக்கள் புண்படுத்தி இருக்காங்க எண்டுறது எனக்குப் புரியாமலில்ல. இதுகள நினைக்க நினைக்க திரும்பவும் ஒருதரம் போயிற்று வருவமோ எண்டு கூட கோபம் வாறதும்தான். இல்ல வேணாமெண்டு பொறுத்துக் கொண்டிருக்கன்.

எனக்கொரு ஆசை. இனிமேல்ப்பட்டு ஊருக்கு போனா முன்னய மாதிரி எல்லாரையும் அள்ளிக்கொண்டு வராம இப்ப இந்தாள் சொன்ன மாதிரி ஆக்கள மட்டும் தூண்டில் போட்டு தூக்குற மாதிரி தூக்கிக்கொண்டு வந்துரோணும். இல்லாட்டி வச்சிரப்பசை ஒட்டுறாப்போல அப்பிக்கொண்டு வந்துரோணும். அடிச்சி அள்ளி தள்ளிக் கூட்டிக்கொண்டு கரையில நிப்பாட்டி நாக்கத் தொங்கப்போட்டு தூக்குல தொங்குற மாதிரி நாலு கேள்வி கேக்கோணும். அதுக்குப் புறகு தான் சாக்காட்டோணும்.

ஆ... கேள்வி எண்டோடனதான் நினைப்புக்கு வருகுது. நான் வந்து போனதுக்குப் புறகு கவிஞர்களெண்டு கொஞ்சப்பேர் கிளம்பி இருக்காங்களாம்.

அவையள் என்னப் பற்றி எழுதுற எழுத்தெல்லாம் கொஞ்ச நஞ்சமில்லையாமெண்டும் கேள்விப்பட்டன். அவையள ஒருக்கா கூட்டியாந்து கரையில நிப்பாட்டினயளெண்டா... எண்டப்பாமாரே

இவ்வளவு நாளும் எங்கப்பா இருந்தயள். இந்த நாட்டுல யுத்தமெண்ட பேருல செத்து மடிஞ்ச சனமெல்லாம் உங்கட கண்ணுக்கும் கருத்துக்கும் தெரியயில்லையோ? கடலெப்ப வரும் கவிதையெப்ப எழுதலாமெண்டோ காத்திருந்தயள். எழுதுறத்தையும் தயவு தாட்சண்யமில்லாமலெல்லோ எழுதியிருக்கயளாம். நீங்கெல்லாம் என்ன எழுதுனாலும் அதையெல்லாம் பாராட்டி பொன்னாடை போர்த்தவும் ஒரு கூட்டத்த கையோடயே வைச்சிருக்கயளாமே, மெய்தானோ...? எண்டெல்லாம் கேக்கோணும். ஆரோ ஒராள் எழுதுனாராம்.

"கடல் அன்னையே! அலை மகளே..
(தாயா இருந்த நான் மகளாயிற்றன்)
நிலவொளியில் உன் முற்றத்தில் விளையாடிய
உனது குழந்தைகளை நீயே கொல்லலாமா?
உன் மடியில் தவழ்ந்து நீ பாலூட்டிய சேய்க்கு
நீயே விசமூட்டிய தாயாகலாமா...?"

இப்பிடியும் எழுதலாமோ? அந்தாள் என்னெண்டா நீலப்பட்டாடை கட்டியுட்டு நிலவால பொட்டும் மட்டும்தான் வைச்சுட்டார். இந்தாள் என்னெண்டா எனக்கு ஊடு வாசல் கட்டித்தந்து முற்றத்தோட புள்ளையளையும் விளையாட உட்டிருக்கார். கடைசியா கொலைகாரி எண்ட பட்டமும் வேற.

இதாகுதல் பரவாயில்ல. இன்னுமொரு ஆள் எழுதுனதெண்டு கேள்விப்பட்டத சொல்லுறன் கேளுங்கோவன்.

கொற்றவனே! குற்றமென்ன
செய்தானென் கணவனென்று
மற்றச் சிலம்பு கரமேந்தி
மதம் கொண்ட யானையாக
மதுரை வந்த கண்ணகி,
சினம் கொண்டு சீறி - தன்

ஒற்றை முலையை திருகி எறிந்து
பற்றட்டும் மாநகரம்
பற்றியெரியட்டும் மதுரையென்றாள்.
பத்தினி கண்ணகி - அவள்
பரிதவிப்பு, பரவியது தீயாய்.
ஏய் சுனாமியே! - நீ என்ன
அலையடித்து வந்தாயா?
இல்லை
ஓராயிரம் முலை அறுத்து எறிந்தாயா?
எந்தப் புருசனை இழந்ததற்காய் - நீ
இந்தத் தாண்டவம் ஆடி முடித்தாய்?

என்ன எழுத்திது? சிவனே தம்பிரானே எண்டு எண்ட பாட்டுல நான் இரிக்கன். கையில சிலம்போட கனகாலமா உயர்த்துன கை மடக்காம தண்ட பாட்டுல நிண்ட நிலையில நிக்கிறா கண்ணகைத் தாயார். என்னையும் அந்தத் தாயாரையும் ஏன் முடிச்சிப் போட்டு இவையள் கவிதை எழுதோணும். கூட்டியுட்டு குத்துப்பட வைச்சி புதுனம் பார்க்க நினைக்கிற வேலைதானே இது.

கற்பில் சிறந்தவள் கண்ணகியா மாதவியா எண்டு கேட்டுக் கேட்டே காலத்தக் கடத்துனாக்களாம் இவையள். இனி கற்பிற் சிறந்தவள் கண்ணகியா? சுனாமியா? எண்டு கேட்டு பட்டிமன்றமே நடத்துவாங்க போலதான் இருக்கெண்டு உங்கள்ல படிச்ச சிலர் கவலைப்படுறதாயும் கேள்விப்பட்டன். இப்பிடி எழுதறவயளெல்லாம் இருக்கு மட்டும் அது நடந்தாலும் நடக்கும் போலதான் தெரியுது.

நாய்க்கு எட்டு பண்டிக்கு பத்துமுலையெண்டு பிராணிகளுக்கும் மிருகங்களுக்குமே கடவுள் கணக்கு வைச்சிப் படைச்சிருக்கார். கணக்கு வழக்கில்லாதவளெண்டு அந்த நாய், பண்டிய விட கேவலமானவள் மாதிரியெல்லோ என்னயப் பற்றி எழுதியிருக்காங்க. வரட்டும், எப்ப இருந்தாலும் எட்டுல தப்புல எண்ட கண்ணுல படாமலோ போயிருவாங்க அப்ப பார்த்துக் கொள்ளுறன் அவையள.

இப்பிடி ஒவ்வொருத்தர்ர புதுனங்களையும் நான் சொல்லிக் கொண்டே போனனெண்டா கேக்குற உங்களுக்கும் அலுப்புத் தட்டிரும். அதனாலதான் அளவோட கதைச்சி முடிப்பமெண்டு நினைக்கிறன். கதைச்சிப் பேசி, கொம்பிக் குழறி முறையிட உங்களுக்கு ஆயிரம் பேர் இருப்பாங்க. எனக்காரிருக்கா. நானும் எண்ட பாடுமாத்தான் கிடக்கன். இண்டைக்கு உங்களுக்கு ஒண்டெண்டோடன எத்தினபேர் சொந்தங்களெண்டு ஓடி வந்தாங்கள். அது மட்டுமோ எத்தின நாட்டு பெரிய பெருந்தலை எல்லாத்தையும் கண்டிற்றயள். கனவுல கூட நினைச்சிருப்பயளோ இவையளெல்லாம் உங்கட ஊர் பகுதிக்கு வருவாங்களெண்டு. எல்லாம் எண்ட புண்ணியத்தில தானெண்டுறத மறந்துராதையுங்கோ. அப்பிடி ஆருகா கண்டறியாத ஆக்களெல்லாம் வந்தாங்களெண்டும் நீங்க கேப்பயள். நீங்க மறந்தாலும் நான் மறக்கமாட்டன்.

பாவம் அந்த மனிசன் கோபி அன்னா. ஐக்கிய நாடுகள் சபையில உள்ள எத்தினையோ வேலைகளுக்கு நடுவுல உங்களையும் பார்க்க ஓடி வந்தாரே. அது மட்டுமோ சீனத் தலைவரெண்டும், தாய்லாந்து இளவரசியெண்டும் எத்தின பேர் வந்தாங்களாம். அதுகளத்தான் உடுங்கோ. அந்தப் பெரிய அமெரிக்காவுக்கு ரெண்டு தரம் ஜனாதிபதியா இருந்தவராம் பில் கிளிண்டன். அது மட்டுமில்லாம அந்தப் பொட்டை மோனிகாவோட தொடுப்பாம், ரெண்டு பேருக்குள்ளயும் நடவடிக்கை இருக்குத்தானாமெண்டு ஊரு உலகமெல்லாம் ஒரு சாங்கமா குசுகுசுத்த நேரம் அவருல கோவப்பட்ட ஆக்களவிட, அடா இதெல்லாமென்ன பெரிய புதுனமோ எண்டிற்று அந்தாள ஒரு தரமாகுதல் பார்த்துக் கொள்ளமாட்டமோ எண்டு சோட்டப்பட்ட ஆக்களும் இல்லாமலில்லையாமே. அப்பிடிப்பட்டவரும் கூட உங்கட ஊருக்கு வந்துதானே இருக்கார். இதெல்லாம் ஆரால என்னால தானே. அடா... இத்தனையும் ஏன், லண்டன் இளவரசர் சார்ள்ஸும் கூட வந்தாராம் எண்டா உங்களுக்கு எவ்வளவு நடப்பேறியிருக்குமெண்டுறது எனக்குத் தெரியாமலில்ல.

நானெண்டா நினைச்சிருக்கயில்ல. சார்ள்ஸும் வருவாரெண்டு.
"எண்ட மனே இந்த வயசு போன காலத்துல அங்கெல்லாம் போய் அலைஞ்சி திரிஞ்சி வர என்னாலையும் ஏலாது, கொப்பனாலயும் ஏலாது. மற்ற மற்ற நாட்டுல இருந்தெல்லாம் சாவூட்டுக்கு போய் வாற மாதிரிப் போய் முகத்தக் காட்டிற்றுனம். நம்மட குடும்பத்துல இருந்து தான் ஆரும் போகயில்ல. அது சரியில்லாத வேலையுமெல்லோ? இதுக்கிடையில நீயும் கட்டுனா கமீலாவத்தான் கல்யாணம் கட்டுவனெண்டு ஒத்தக் காலுல நிக்குறாய். உண்ட புள்ளையள் வேற அப்பாவுக்கு நாங்கதான் மாப்பிள்ளைத் தோழனா நிப்பமெண்ணுதுகள். இதுக்கிடையில நாட்டுல உண்ட கல்யாணத்துல கன பேருக்கு புறியமில்ல. இந்த வயசுல இதென்ன செப்பமில்லாத வேலையெண்டு சொல்லுறாங்களாம். நமக்கும் சாவு வாழ்வெண்டா நாலு சனம் வேணுமெல்லோ மனே! அதுக்குத்தான் நீயாகுதல் போய் தலையக் காட்டிற்று வாவனெண்டு தாய்க்காரிதான் சொல்லியிருப்பா போல. மகனும் ஓடி வந்து பூமாலையும் கழுத்துமா சிரிச்சிக் கொண்டு லெச்சணமா நிண்டுற்றுப் போனாராம் எண்டு கேள்வி. குடுத்து வைச்சாக்கள்தான் நீங்க.

இப்பிடி நன்மையிலையும் ஒரு தீமை, தீமையிலையும் ஒரு நன்மை எண்டுற மாதிரி நான் வந்ததால உங்களுக்கும், உங்களுக்குள்ளயும் பல நல்ல விசயமெல்லாம் நடந்திருக்கு. இனியும் நடக்கும். அதனால என்னப் பற்றியும், என்னால இழந்ததுகளப் பற்றியுமே யோசிச்சிக் கொண்டிருக்காம சந்தோசமா இருங்கோ.

நீங்கெல்லாரும் மனிசர். இண்டைக்கு இருக்குற நீங்கள் நாளைக்கு இருப்பயளெண்டுறது நிம்மளமில்ல. அதுக்குள்ள ஏன் இவ்வளவு போட்டி பொறாமை, குத்து வெட்டு, காட்டிக்குடுப்பு. இனியும் அப்பிடியெல்லாம் இருக்க மாட்டயளெண்டுதான் நினைக்கிறன். இல்லாம அப்பிடித்தான் இருப்பமெண்டு நீங்க அடம்புடிச்சா அதெல்லாத்தையும் பார்த்துக் கொண்டு நான் சும்மா இருக்க மாட்டன். பொங்கி வந்து அத்தின பேரையும் அள்ளிக் கொண்டு போயிருவன்.

என்னடா இவள் பைத்தியக்காரி மாதிரிப் பசப்புறாளே இவள் எங்க வரப்போறாளெண்டு நினைச்சி பயப்புடாம மட்டும் இருந்திராதையுங்கோ. அப்பிடியும் இருக்க மாட்டயள் ஏனென்டா நீங்கெல்லாரும் என்னில நல்ல பயம் வைச்சிருக்கிறயளெண்டுறதும் எனக்குத் தெரியும். போன சித்திரை மாசம் ஒரு நாள் ராவு, நான் வரப்போறனாமெண்டு கேள்விப்பட்டு நித்திரைப் பாயால ஒழும்பி குண்டியில குதிகால் அடிபட ஓடி கும்மிருட்டுல குப்புற உழுந்தொழும்பி, ஆள்ல ஆள் மோதி கும்மியடிச்சதெல்லாம் கூட எனக்குத் தெரியும். அந்தளவுக்கு என்னில பயமிருந்தா போதும்.

நான் பொல்லாதவளில்ல. பொறுமைசாலி. எண்ட பொறுமையை சோதிக்கிறதும் நீங்கதானே. இன்னொரு சோதினைய எனக்கு வைச்சிராதையுங்கோ. ஏனெண்டா அதுர முடிவுகள நீங்க தாங்க மாட்டயள். என்னமோ சொல்லுறதெல்லாம் சொல்லிற்றனெண்டு தான் நினைக்கிறன். இல்லையெண்டாலுமென்ன செத்துப் போகாம சீவன் கிடந்தா... இல்ல... வற்றிப் போகாம சீவன் கிடந்தா மறுகாயும் ஒருக்கா உங்களோட கதப்பன்.

இப்பயும் உங்களோடு தொடர்ந்து கதைக்கத்தான் ஆசை. அதுக்கிடையில் காதுக்கு வந்த செய்தியொண்டைக்கேட்டுல இருந்து என்னால தொடர்ந்தும் கதைக்கேலாமலலெல்லோ இருக்கு.

ஏன்னெண்டா... நீ அப்படிச் செய்தாய், இப்படிச் செய்தாய் எண்டெல்லாம் எனக்கிட்ட கேக்கக்கூடாத கேள்வியெல்லாம் கேட்டிற்று, தான் ஏதோ சுத்தக்காரி மாதிரி நடிச்ச இந்தக் காத்துப் பொட்டைக்கு என்ன குத்திக் கிழப்பிச்சோ தெரியாது. போன போக்குல அமெரிக்காவுல ஒரு பக்கத்துல 'கத்தரீனா" எண்ட பெயருல கிழம்பியடிச்சி கவுட்டுப் போட்டிருக்காளாமே?

மரத்தால உழுந்ததுகள மாடு வெட்டின கதபோல ஒண்டுக்கும் வழியில்லாத சனங்கள தத்தளிக்க வைச்சிருக்காங்களாம். உள்ளவயள் செத்தா ஊர் செத்த கணக்கு, இல்லாதவயள் செத்தா

எலி செத்த கணக்கெண்டு நீங்க சொல்றாப்போல, திண்டுக்க சோறுமில்லாம உடுத்திக்க துணியும் இல்லாம, ஏன் குடிக்கத் தண்ணியும் இல்லாம அங்க சனமெல்லாம் சாகுதுகளாமே?

ஊர் உலகத்துல என்ன நடந்தாலும் ஓடிப்போய் சண்டை விலக்குகிறவர் புஷ் அண்ணன். உலகத்துல ஆரு கயிற்றப்பட்டாலும் ஏதும் உதவி வேணுமோ என்று கேட்குறவர் இண்டைக்கு தண்ட நாட்டு மக்களயே கண்டுகொள்றாரில்லயாமெண்டு சனமெல்லாம் கத்துதாம். இதுக்கிடையில் நீயொரு நிறத் துவேசம் புடிச்சவனெண்டு கறுப்புக் கலர் மக்களெல்லாம் சொன்னது கேட்டு, புஷ் அண்ணன் முகம் கறுத்துப்போய் முகத்துல ஈயாட இல்லாமல் இருக்காராம். இனியும் என்ன நடக்கப்போகுதோ தெரியாதாம். இவள் காத்துக்கேன் இந்ததேவையில்லாத வேல. அவளுக்கிட்டயும் நாலுகேள்வி கேட்டிற்று வந்து உங்களோட திரும்பியும் ஏலுமெண்டா கதைக்கிறேனே...

0



"செப்பமில்ல தாய... இந்த ஊரும்
உலகமும் செப்பமில்ல.
எங்கயுமே ஊழலும் லஞ்சமும்தான்.
பாதிக்கப்பட்ட நாங்க அப்பிடியேதான்
இரிக்கிறம். ஆனா எங்கட பேரச்
சொன்னவனெல்லாம் புதுப்புது
பணக்காரனாகிற்றான் தாய... நீ வந்தத
தண்ட மாடி ஊட்டுக்கு மேல ஏறி
நிண்டு புதுனம் பார்த்தவனெல்லாம்
போளின்ல நில்லாம நிவாரணம்
வாங்கிற்றுப்போறான்.
பொறுக்குதில்ல தாய...
அக்குறமங்களையும்,
அநியாயங்களையும் காணக்காண
நெஞ்சு பொறுக்குதில்ல தாய...
அதான் உனக்கிட்டச் சொல்லி
ஒப்பாரி வைக்கிறன்"



a book by

niram